

# வாழ்க்கை வண்ணங்கள்

(சிறுகதைத் தொகுதி)

நயீமா சித்தீக்

சிந்தனை வட்டத்தின் 196 - வது வெளியீடு...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வண்ணங்கள்

(சிறுகதைத் தொகுதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வண்ணங்கள்

(சிறுகதைத் தொகுதி)

## நயிமா சித்தீக்


வெளியீடு

வரையறுக்கப்பட்ட சிந்தனை வட்டம்
வெளியீட்டாளர்கள் (தனியார்) கம்பனி
14 உடத்தலவின்னை மடிகே,
உடத்தலவின்னை.20802
ஸ்ரீலங்கா

தொலைபேசி :- 081-2493746 / 081-2493892
தொலை நகல்:- 081-2497246
மின்அஞ்சல் :- puniyame@sltnet.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| முதலாம் பதிப்பு | :- | 01-12-2004 |
| நூலாசிரியை. | :- | திருமதி நயிமா சித்தீக்<br>கம்பளை |
| பதிப்புரிமை | :- | ஒதுக்கப்பட்டுள்ளது. |
| வெளியீடு | :- | சிந்தனை வட்டம் |
| கனணிப்பதிப்பு | :- | Zeenath Nawaz |
| அச்சுப் பதிப்பு | :- | Creative Printers<br>No. 03/A. Bahirawakanda Rd,<br>Kandy.<br>T.P 081 - 4472048 |

I S B N 955-8913-21-9

120/-


# பதிப்புரை

சிந்தனை வட்டத்தின் 196வது வெளியீடாக நயீமா சித்தீக் எழுதிய ‘வாழ்க்கை வண்ணங்கள்’ சிறுகதைத் தொகுதியினை வெளியிடுவது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கையில் மூத்த முஸ்லிம் பெண் எழுத்தாளர்களுள் நயீமா சித்தீக் அவர்கள் குறிப்பிடத்தக்க ஒருவர். குறிப்பாக ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில் சிறுகதைத் துறையில் இவரின் பங்களிப்பு விசாலமானது. சமூகத்தின் அவலங்களையும், மூடநம்பிக்கைகளையும் தத்ரூபமாக சித்தரிப்பதில் இவரின் பாங்கு தனித்துவமானது.

வாழ்க்கைப் பயணம், வாழ்க்கைச் சுவடுகள் ஆகிய அருமையான நூல்களைத் தந்த நயீமா சித்தீக் அவர்களின் மூன்றாவது நூல் வாழ்க்கை வண்ணங்கள் எனும் இச்சிறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைத் தொகுதியாகும். இதில் மொத்தமாக 14 சிறுகதை கள் இடம் பெற்றுள்ளன. இக்கதைகள் எமது சமூகத்தில் இடம்பெற்று வரும் 'திருமணச் சந்தை' வியாபாரத்தின் பல்வேறு கோணப் பார்வை களின் வெளிப்பாடுகளாகும்.

சிந்தனை வட்டத்தின் வெளியீடுகளுக்கு ஆதரவ ளிக்கும் வாசக நெஞ்சங்கள் இந்த வெளியீட்டுக்கும் ஆதரவு தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

அன்புடன்
**கலாபூஷணம் புன்னியாமீன்**
முகாமைத்துவப் பணிப்பாளர்.
வரையறுக்கப்பட்ட
சிந்தனை வட்டம் வெளியீட்டாளர்
தனியார் கம்பனி
14 உடத்தலவின்னை மடிகே
உடத்தலவின்னை 20802
2004 - 12 -05



# சமர்ப்பணம் ...

என்னை ஈன்றெடுத்த
எனதன்புப் பெற்றோர்

அப்துல் பஷீர் மரிக்கார்
தாஜ்பீபி ஆகியோருக்கும்

எனதன்புத்துணைவரை ஈன்றெடுத்த
முஹம்மது காசிம் லெப்பை
பாத்திமா பீபி ஆகியோருக்கும்

சீதனமில்லாத சிறப்பான
வாழ்க்கையை
அமைத்து வாழும் சகோதரர்களுக்கும்,

சீதனத்தால் அல்லலுறும், அன்புச்
சகோதரிகளுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடறிந்த நல்ல எழுத்தாளரும் - பேச்சாளரும்
கல்வியியலாளருமான காலஞ்சென்ற

## அமரர் அதிபர் திரு. A.P.V.கோமஸ்

அவர்களின் அகத்துதித்த

# ஆசியுரை

இச்சிறுகதைத் தொகுதியில் ஒவ்வொரு கதைத்துளியும் இஸ்லாமிய சமூகம் எதிர்கொள்ளும் சீதனப் பிரச்சினையை மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன. ஒரு தராசின் இரு தட்டுக்கள், மணம் வீசாத திருமணங்கள், வேஷங்கள் கலையுமா, மாப்பிள்ளைக்கு அலவென்ஸ் போன்ற கதைகளில் வரும் பௌஸியா, ஷர்மிளா, சஹ்லா, முனீரா போன்ற பெண் பாத்திரங்கள் இன்று வியாபாரம் போலாகிவிட்ட திருமணம் பற்றிப் பறைசாற்றுகின்றன.அத்துடன் கதைகளில் உலவும் தரகர்கள், மாப்பிள்ளைகள், பெற்றோர்கள் என்போரும் சமூக யாதார்த்தத்தை எடுத்துக் காட்டுகின்றன.

நயீமா சித்தீக்கின் முதல் சிறுகதை அறுபதுகளில் என்னால் சிபாரிசு செய்யப்பட்டு ``தினபதி'' நாளிதழில் வெளிவந்தது- என்பதை மகிழ்வுடன் கூறிக்கொள்வதில் பெருமையடைகின்றேன். அன்று இட்ட வித்து இன்று இவ்வாறான விருட்சமாக வளர்ந்திருப்பதைக் குறித்து பெருமிதமடைகின்றேன்.

நயீமா சித்தீக் அவர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவிக்கின்றேன். மென்மேலும் இவ்வாறான சிறந்த ஆக்கங்களை வெளியிட்டுத் தனது எழுத்துலகப் பயணத்தில் நீடித்துச் சிறக்க எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக.

| | |
|---|---|
| J/ 36 எம்.சி. வீதி | A.P.V. கோமஸ் |
| மாத்தளை | B.A. Dip in Ed. J.P |
| 25 - 08 -2004 | |



வழிகாட்டிய ஆசானின் வாத்சல்ய வாழ்த்துரை
சின்னஞ்சிறுமியாய் கல்விகற்ற காலத்தில் - பசறை மத்திய கல்லூரியில் எனக்குள் இருந்த ஆற்றலை இனங்கண்டு - நானறியாமலேயே வளர்த்து விட்ட மதிப்பிற்குரிய ஆசிரியப் பெருந்தகை.

## உயர் திரு ஐயாத்துரை சாரங்கபாணி

அவர்களின்

# வாழ்த்து

மாணவர்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒருவகை ஆற்றலைக் கொண்டவர்கள். அந்த ஆற்றல்கள் வெளிப்படும் வகையில் வழிகாட்டப் படுவார்களேயானால் அவ்வாற்றல் சார்ந்த துறைகளில் நன்கு பிரகாசிப்பார்கள். இவ்வாறாக இன்றைய எழுத்துலகில் சிறுகதைப் படைப்பாளியாக பிரகாசித்துக் கொண்டிருப்பவர் என்னுடைய மாணாக்கருள் ஒருவரான திருமதி நயீமா சித்தீக் அவர்கள்.

இவருடைய இந்தப்படைப்புக்கள் பலவழிகளிலும் சிறந்து சமுதாயத்துக்கு நல்வழிகாட்டியாக அமைய வேண்டுமென எனது வாழ்த்துரையை மகிழ்ச்சியோடு வழங்குகின்றேன்.

வாழ்க்கை ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமாக அமைகிறது. சிலர் ஏழைகள், சிலர் பணக்காரர்கள். சிலர் படித்தவர்கள், சிலர் படிக்காதவர்கள். இவ்வாறு ``சிலர்'' என்ற பட்டியலை நீட்டிக் கொண்டே போகலாம். இவ்வாறு பிரச்சினைகளை வாழ்க்கையின் அர்த்தங்களை வெளிப்படுத் துவதில் முனைப்புடன் செயற்பட்டு பலசிறுகதைகளைத் தந்த நயீமா சித்தீக் அவர்களின் இரண்டாவது சிறுகதைத் தொகுப்பாக இது அமைகிறது.

இவரது நூல்கள் அனைத்தும் வாழ்க்கை எனும் சொல்லை இணைத்தே மகுடமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் வாழ்க்கைக்கு அப்பால் செல்லாமல் வாழ்க்கையோடே இணைந்து அர்த்தங்களை வெளிக் கொணரும் என் மாணவி நயீமா சித்தீக் அவர்கள் வாழ்த்துச் செய்தி வழங்குமாறு என்னையும் ஒரு பொருட்டாக மதித்துக் கேட்டுக் கொண்டதற்கு நன்றி கூறி அவர் மேலும் பல படைப்புக்களைத் தந்து புகழ் பெறுமாறு வாழ்த்துகிறேன் - மனமார வாழ்த்துகிறேன்.

**ஐயாத்துரை சாரங்கபாணி**

60, சின்ன உப்போடை
மட்டக்களப்பு
24 - 08 - 2004



பேராதனைப் பல்கலைக்கழக மெய்யியற்றுறை
சிரேஷ்ட விரிவுரையாளர்

## கலாநிதி எம்.எஸ்.எம். அனஸ்

அவர்கள் அன்போடு அளித்த

# அணிந்துரை

மனிதப் பிரச்சினைகள் தான் கலை, இலக்கியங்களின் மாறாத கருப்பொருள்கள். முழுமையான அழகியல் திருப்தி கலை, இலக்கியங்களின் வடிவ ஒழுங்கிலிருந்து மனதை ஆகர்ஷிக்கிறது. ஏதாவது ஒரு ஒழுங்கில் வடிவக் கட்டமைப்பைப் பெறாத ஒன்று கலைவரையறைக்குள் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. இரண்டும் சம அளவில் இணைந்து செல்வது மனித நேயத்தை உள்வாங்கிய மிகப் பெரும் படைப்புக்களை உருவாக்கும் முடிவை எட்டுகிறது. மார்க்ஸிம் கோர்க்கி, புதுமைப்பித்தன் ஜெயகாந்தன்களை நாம் இவ்வாறு பார்க்க முடியும். கலைக்காக என்ற கருத்து நிராகரிக்கப்படக்கூடியதல்ல. வடிவ ஒழுங்கில் நேர்த்தியை அது கட்டாயமாகக் கோருகிறது. கலை என்பதற்குள் அடங்கியுள்ள ``அழகு'' என்ற எண்ணத்தை எப்படி நிறைவுள்ளதாக்கலாம். என்ற பிரச்சினையை அது ஆழமாக கருத்திற் கொண்டுள்ளது. மனிதப் பிரச்சினைகளும் மனித உணர்வுகளும் நிராகரிக்கப்படும் எல்லைக்கு அது செல்வதை இஸ்லாமிய கலைநோக்கு அங்கீகரிக்கவில்லை. மகாகவி அல்லாமா இக்பால் இதனை விரிவாக ஆராய்ந்துள்ளார். அவரது இலக்கியங்களிலேயே அவர் இதைச் சாதித்தும் காட்டினார். உருது, பாரசீக ரஸஞான மரபின் மிக உயர்ந்த அழகியல் பிரப்பிற்குள் மனித நேயத்தையும், முஸ்லிம் பண்பாட்டு நெருக்கடிகளையும் இக்பால் கவிதையாக்கினார்.

தமிழில் சிறுகதைக்கென்று வளர்ச்சியடைந்த கலைமரபு உள்ளது. புதிய பாணிகளும் தோன்றி வருகின்றன. முஸ்லிம் கதாசிரியர்கள் இஸ்லாமிய கலை நோக்கத்தையும் சிறுகதை மரபின் அழகியல் வெளிப்பாட்டையும் சிந்திப்பதன் மூலம் தமது கலைப்படைப்பின் நேர்த்தியை சிறந்த ரஸனை மட்டத்திற்குரியதாக்க முடியும். 1960களில் ஆரம்பமான நயீமா சித்தீக்கின் சிறுகதைப் படைப்புக்களில் காணப்படும் முன்னேற்றங்கள் இத்தகைய இலக்குகளை வெற்றிகாண முயல்வதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளப் படுத்தப்பட்டுள்ளதா என்பதை ஆராய்வதற்கும் இத்தொகுதியைப் பயன்படுத்த முடியும்.

``சீதனப் பிரச்சினை'' அல்லது ``சீதனச் சுமை'' இத்தொகுதியில் உள்ள எல்லாக்கதைகளுக்குமான பொதுக்கதைக்கருவாகியுள்ளது. குடும்பங்களுக்குள்ளும், கணவன், மனைவிகளுக்கிடையேயும், நிகழும் பணம், செல்வம் சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கலாக சீதனம் இருந்த போதும் அது முஸ்லிம் சமூகத்தின் சமூகப் பிரச்சினையுமாகும். மார்க்க ரீதியான அங்கீகாரமும் இல்லாத நிலையில் ``சீதனமுறை' சமூக, சமய, பொருளாதார ரீதியிலான முரண்பட்ட கருத்து மோதல்களுக்கு இட்டுச் செல்கிறது. ``மண்ணுக்குள் மாணிக்கங்கள்'' கதையின் கீழ்வரும் பகுதியை இத்தொகுதியில் உள்ள கதைகள் அனைத்திற்கும் எதிரொலியாக எடுத்துக் கொள்ளலாம்.

> ``எனது மாமா சுபியான் ஹாஜியார் மகனை ஏலம் போட்டவர்... உண்மையைத்தான் சொல்கிறேன்... புரோக்கர்மாரிடம் அப்பட்ட மாகவே சொன்னவர்... இங்கே பாருங்க..... பத்துலட்சத்துக்கு மேலே பணமும் ஒரு வாகனமும், கொழும்புல ஒரு வீடும் தர் ரவங்களா இல்லாம பாக்காதீங்க...நகையும் ஆகக் குறைந்தது அம்பது பவுணாவது வேணும்''

வெளிநாட்டில் திருமணம் செய்து ஒரு பிள்ளைக்கும் தந்தையான கமாலினால் பஸீனா ஏமாற்றப்பட்டபோது பஸீனாவின் குடும்பத்தில் ஏற்பட்டது துயரம் மட்டுமல்ல

> ``பஸீனாவைப் பெற்றவள் ஒரு நாளும் இல்லாதவாறு வாய்விட் டுக் கதறிச் சாபமிட்டாள்...அவளின் பெற்றவயிற்றில் எரிமலை வெடித்துச் சிதறிக் கொண்டிருந்தது....''

இவ்வாறு தற்காலத் திருமணப் பிரச்சினைகளில் இன்னொரு பக்கத்தையும் ``இருதுருவங்கள்'' கதை தொட்டுச் செல்கிறது.

எல்லைமீறிய சொத்துக்களின் பட்டியலை நிறைவேற்றித்தருமாறு பெண்வீட்டாரைக் கட்டாயப் படுத்துவது, சீதனக் கொடுக்கல் வாங்கல்



பேச்சுக்களினால் ஆரம்பத்திலேயே திருமணங்கள் திசைமாறிப் போவதும் சீதனமில்லாமல் பெண்களுக்குக் கௌரவமான வாழ்க்கை சாத்தியமில் லையா என்ற வினா, சீதனம் வேண்டாம் என்று கூறித் திருமணத்தின் பின்னர் ``வெறுங்கையோடு வந்தவள்'' என்று பழிக்காளாகும் பெண்களின் அவலம் போன்ற சமூகம் சார்ந்த - பெண்கள் சார்ந்த - (திருமண) பிரச்சினைகள் நயீமா சித்தீக்கின் பேனாவினால் சிறுகதைகளாகியுள்ளன.

பாத்திரங்களுக்கிடையிலான உரையாடல்களுக்கு முக்கியத்துவம் தரும் எழுத்துப்பணியின் மூலம் கதைகளைக் கூற முற்பட்ட போதும், பாத்திரவார்ப்பை விட பிரச்சினைகளை வெளிப்படுத்தும் போக்கிற்கே அவர் அதிக முக்கியத்துவம் தந்துள்ளார். அவரது எளிமையான கதைகூறும் பாணி, அதிகளவு வாசகர் கூட்டத்தைத் தேடித் தரும் என்று எதிர்பார்க்கலாம்.

சீதனச்சுமையினால் குடும்பங்கள் எதிர் நோக்கும் பொருளாதார நெருக்கடிகள், திருமண வாழ்வின் முறிவுகள் இக்கதைகளில் ஆராயப் படுகின்றன. இஸ்லாம் அனுமதிக்காத சில திருமண சம்பிரதாயங்களையும் சில கதைகள் விமர்சிக்கின்றன. ``சவடிச் சம்பிரதாயத்தால்'' ஏற்படும் பிரச்சினைகள் முழுக்கல்யாண ஏற்பாட்டையுமே தகர்க்கப் போதுமாக இருப்பது பற்றி'' சவடிச் சம்பிரதாயம்'' கதை கூறுகிறது.

சீதனம் ஏற்படுத்தும் பிரச்சினைகளால் இறுதியில் பாதிக்கப்படுபவள் பெண். தகப்பன் அல்லது பெற்றோர் தமது சக்திக்கு உட்பட்ட அளவில் தமது பெண் மக்களுக்கு தமது சொத்துக்களில் இருந்து கொடுப்பது என்ற நிலை இன்றும் மீறப்பட்டுள்ளது. சீதனம் ஒரு கொடுமையாக மாறும் அந்த எல்லையில் தான் நயீமாவின் விமர்சனப் பார்வைகள் கதைகளில் செயற்படுவதைப் பார்க்க முடிகிறது. இக்கதைகளில் எல்லாப் பெற்றோர்களுமே தமது பெண்களின் திருமணத்திற்காகப் பெரும் கடன்பளுவுக்கு ஆளாவது கதாசிரியரின் கற்பனை அல்ல; கற்பனைகளாக விவரிக்கப்படும் நிஜங்கள் இவை.

இக்கதைகள் பிரசாரமல்ல. ஒரு சமூகப் பிரச்சினை சிறுகதைகளினூடாக வெளிப்படுத்தப்படுகிறது. கொஞ்சம் தவறினால் கூட பிரசாரக்கதைகளாகிவிடுமோ என்ற எல்லைகளை அவருக்கே உரித்தான - இயல்பான கதைகூறும் பாணியினால் -அந்த அபாயத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் இலகுவாகக் கடந்து விடுகிறார். கலையும் அழகும்பற்றி முதற்பகுதியில் தரப்பட்டுள்ளது. இந்த விடயங்களைக் கருத்திற் கொண்டு பேசப்பட்டவையாகும்.

கதைகள் அவற்றிற்குரிய புவியியல் பண்பாட்டு நிகழ்வுக் களங்களில், தாய்தந்தையரின் கவலை தோய்ந்த உரையாடல்களாக, இளம் பெண்களின் ஏக்கங்களாக, தாய்மார்களின் உணர்வலைகளாக, ஓரிருசம்பவச் சேர்க்கைகளோடு, குறித்த பிரச்சினையை மையப்படுத்தி தனக்கே உரித்தான கதைகூறும் பாணியின் கதைகளை நயீமா நகர்த்திச் செல்வதில் ஒரு ரசனை மனதைக் கவர்கிறது.

நயீமா சித்தீக் புகழ்பெற்ற பெண் எழுத்தாளர் அவர் மலையகத்தைச் சேர்ந்தவர் என்பதால் அவரை மலையக எழுத்தாளர் என்று மலையக இலக்கிய உலகம் கூறிப் பெருமையடைகின்றது. அவர் ஒரு முஸ்லிம் பெண் எழுத்தாளராவார். இலங்கையில் 1940களில் ஆரம்பமான முஸ்லிம் பெண் எழுத்தாளர் பரம்பரையில் இவர் மூன்றாம் தலைமுறைக்குரியவர். 1960களில் இவர் எழுதத் தொடங்கினார்.

இத்தொகுதியிலுள்ள கதைகள் மலையகத்தின் முஸ்லிம் பண்பாட்டு மையங்களில் ஒன்றான உடுநுவரையையே பெரும்பாலும் கதைக்களமாகக் கொண்டுள்ளன. உடுநுவரை மக்களின் பேச்சுவழக்கு ஆங்காங்கே கதைகளுக்கு அழகு சேர்க்கின்றன. கதைக் களங்கள் கம்பளை, உடுநுவரைகளாக இருந்த போதும் இங்கு கூறப்படும் கதைகள், கதை மாந்தர்கள், சீதனப் பிரச்சினைகள், பொதுத்தன்மை பெற்றவை ஏனைய பல பிரதேச மக்களின் வாழ்க்கைக்கும் பொருந்தக் கூடியவை சீதனம் மட்டும் பிரச்சினையல்ல. அதனுடன் சேர்ந்து இயங்கும் ஏற்பாடுகள், பேராசை ஏமாற்று, நம்பிக்கை மோசடி, சாதாரண மனித உணர்வுகளுக்குக் கூட மதிப்பளிக்காத குரூர மனப்பான்மை இவைகளும் பேசப்படுகின்றன. நீதியும், நேர்மையும் செயல்படாத ஒரு நிலைமை தான் சீதனத்தைவிடக் குடும்பங்களை மோசமாக நிலைகுலையச் செய்வதை இக்கதைகளில் சில உணர்த்துகின்றன.

திருமணம் வர்த்தகத்தைப் போலாகிவரும் ஒரு தவறான சமூகப் போக்கு அவரது கதைகளில் கண்டிக்கப்படுகிறது - என்று இதை இன்னொரு வகையில் கூற முடியும். சீதனம் கைமாறப்படாத - மார்க்க



ரீதியானது என்று கூறிக் கொள்ளப்படும் - திருமணங்களிற்கூட இவ்வர்த்தக மனப்பாங்கு குடும்ப உறவுகளை உடைத்தெறிகிறது. சீதனம் வேண்டாம் - எங்களுக்கு உங்கள் சம்பந்தமும், மணப்பெண்ணும் மட்டும் போதும் என்று மணம் செய்து கொண்டவர்கள் குடும்பப் பிரச்சினைகள் தலைதூக்கும் போது ``நீ வெறுங் கையுடன் வந்தவள் தானே' என்று அவளை அவமானத்திற்குள்ளாக்கும் அவலத்தையும் நயீமாவின் கதைகள் கூறுகின்றன.

சீதனம் ஒழிக்கப்படல் வேண்டும் என்பதைவிட, அதற்குமுன்னர் சீதனத்தின் பேரில் இயங்கும் ``ஷைலாக்'' மனப்பான்மைதான் அழிக்கப்படல் வேண்டும் என்ற கருத்தையே நயீமா ஆழமாக வற்புறுத்துவதாகக் கருதலாம். சீதனம் வாங்காது - ஆனால் திருமணத்தின்பின் குத்திக்காட்டிப் பேசிப் பெண்ணைத் துன்புறுத்துவோரை விட, மார்க்க இயக்கங்களில் தமது நல்ல பெயர் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக மறைவாகச் சீதனம் வாங்குவோரைவிட - நாலு பேர் சாட்சியாக சீதனம் வாங்கி, பெண்ணைப் பாதுகாப்பாகவும், கௌரவமாகவும் வாழவைப்பவன் எவ்வளவோ மேல் என்று அவரது கதாபாத்திரம் ஒன்று கூறுகிறது. சீதனத்தை ஒழிப்பதற்கு முன்னர் மனிதாபிமானத்தையும் ஞாய உணர்வுகளையும் இதற்குள் கொண்டுவர முடியாதா என்ற கவலை இங்குள்ள பல கதைகளில் மெல்லிய குரலாக ஒலிப்பதைக் காண முடியும். இதற்கு சமய போதனைகள் உதவியாக அமையலாம் ஆனால் பொதுவான ஒழுக்க வாழ்வுச் சிந்தனைளை சமூகம் அறியக் கடமைப்பட்டுள்ளது. நியாயம், மனிதாபிமானம், பரிவு என்ற நல்லொழுக்கப் பண்புகளைப் பற்றிய கலந்துரையாடல்களாகவும் ஒழுக்கச் சிந்தனைகள் மக்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டும். நயீமாசித்தீக்கின் இக்கதைமுயற்சியும் அதற்கான ஒரு பிரவேசம் என்றே கொள்ளலாம்.

சீர்திருத்த நோக்கு கதாசிரியரின் எண்ணங்களில் வேரூன்றியிருந்த போதும் கதை வார்ப்புக்களில் அதன் அழுத்தம் மட்டுப்படுத்தப்பட்டிருப்பது வரவேற்கப்பட வேண்டியதாகும். உடுநுவர முஸ்லிம்களின் குடும்ப உறவுகளும், வாழ்வியல் அம்சங்களும், ஆங்காங்கே வெளிப்பட்டு கதைகளின் பண்பாட்டுத் தளத்தை அழகுபடுத்தியுள்ளன. பெண்வீட்டா ரிடமிருந்து சொத்துக்களை முடிந்தவரை கவரத்துடிப்பவர்களைப் பற்றிய கதைகளே அதிகமிருந்தாலும் இஸ்லாமிய கொள்கைகளுக்கேற்ற




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதத்தில் அல்லது தியாக உணர்வோடு தமது திருமண வாழ்வை அமைக்க முன்வரும் ``தொடரும் இலட்சியங்கள்'' கதையில் நியாஸ் செல்வம், அழகு எதையும் பார்க்காது நற்பண்புகளுக்காக மட்டும் ஏழைப் பெண்ணை மணமுடிக்கும் லாஹிர் சவூதி மாப்பிள்ளை கமாலினால் ஏமாற்றப்பட்ட பஸீனாவுக்கு வாழ்வுதரும் அஸ்லம் அதற்கு ஆதரவளிக்கும் அவனது தந்தை புவாட் போன்றோரின் உயர்தர பண்புகள் நம்பிக்கையூட்டும் தூரத்து ஒளிக்கீற்றுகளாக மின்னுகின்றன.

கற்பனை என்று கூறப்பட்டாலும் இவை உண்மைகள். பிரச்சினைகளைக் கலையாகத்தரும் ஒரு பணியில் நயீமா சித்தீக்கின் முயற்சி என இதை வர்ணிக்கலாம். இது இலக்கிய வடிவமாகத் தரப்படுகிறது. ஓவியமாகவும். சினிமாவாகவும் இது சொல்லப்படலாம். பிரச்சினைகளின் அழுத்தத்தையும் அதன் அதிர்ச்சிகளையும் காட்டுவதற்குக் கிடைக்கும் இலக்கியத்திற்கும், நாடகத்திற்கும், சினிமாவிற்கும் இருக்கும் சக்தி அளப்பரியதாகும். கலைகள் அழகுணர்ச்சிக்கு மட்டுமானது அல்ல. சிந்தனைகளைத் தூண்டும் ஆற்றலும் அவைகளுக்குள்ளன. ``சொர்க்கத்துச் சிறுவர்கள்'' ``ஓஸாமா'' போன்ற ஈரானிய திரைப்படங்களைப் பார்ப்பவர்களுக்கு இவ்வுண்மை மேலும் புலப்படும்.

நயீமா சித்தீக்கின் இலக்கியப் பணி நன்கு தொடர என் வாழ்த்துகள்.

**கலாநிதி எம்.எஸ்.எம். அனஸ்.**

பல்கலைக்கழகம்.
பேராதனை.



# முன்னுரை

நீண்ட நாட் கனவு நிறைவேறுவதில் முதற்கண் எல்லாம் வல்ல இறைவனுக்கே இதய நன்றிகள்!

``வாழ்க்கைப் பயணத்''தில் தொடங்கி
``வாழ்க்கைச் சுவடுகளை''ப் பதித்து இன்று
``வாழ்க்கை வண்ணங்க''ளைச் சமர்ப்பிக்கின்றேன்.

என் எழுத்துக்கள் எப்போதும் என்னைச் சுற்றியுள்ளவர்களின் வாழ்க்கையின் யதார்த்தங்களை எடுத்துக்காட்டுபவைகளாக அமைய வேண்டும் என்பதே எனது அவா. எனது ஆரம்பகால எழுத்துலகப் பிரவேசத்தின் போது என்னை சிந்திக்க வைத்தவை மலையகத் தொழிலாளர்களின் வாழ்க்கைப் பிரச்சினைகள்; அவர்களின் வாழ்க்கையின் அவலங்கள். எனவே தான் அன்று அவற்றை என்னால் முடிந்தளவு எழுத்தால் தொட்டுக்காட்டினேன். மேடைகளில் சொல்லி விளங்க வைத்தேன். ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரசில் இணைந்து சிறுபணியாற்றினேன்.

திருமணத்தின் பின்னர் எனது வாழ்க்கைச் சூழல் முற்றிலும் மாறுபட்டது. முஸ்லிம்களே பெரும்பான்மையாக வாழும் பிரதேசத்தில் எனது வாழ்க்கையும் வேரூன்றத் தொடங்கிய போது என்னைச் சூழ நடக்கும் பல விடயங்களில் என் கவனம் திசை திரும்பியது.

ஓ....எத்தனை எத்தனை எத்தனை யதார்த்தங்கள்....
இவைகளைக் கண்டபோது
அனுபவித்த போது
நான் திகைத்தேன்...
அறியாமை
ஒரு சில பிரபுத்துவ எச்சங்களின் சமுதாயச் சுரண்டல்கள்.

அரசியலைக் கருவியாக்கிப் பழிவாங்கல். கீழ்மட்டத்திலுள்ளவர்களை முன் வரவிடாமற் போடப்படும் தடைகள்

சமயத்தைக்கூடத் தத்தமக்குச் சாதகமாக்கி ஏற்படுத்தும் புரளிகள்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌட்டீகமான கொள்கைகளின் ஆக்கிரமிப்பு

பொருத்தமான புதிய சிந்தனைகளை ஏற்றுக் கொள்ள விரும்பாத பிடிவாதம்...

இவை எல்லாவற்றையும் விட திருமணத்தை வியாபாரமாக்கி நடத்தும் அநியாயங்கள்..

இப்படியே அடுக்கிக் கொண்டு போகக் கூடிய சமர்ப்பணங்கள்....

இவை எல்லாவற்றையும் நான் சிந்திக்கிறேன்...

இவற்றையெல்லாம் மாற்றிவிடக்கூடிய மாயா ஜால வித்தை என்னிடம் இல்லை..

ஆனால் -

இன்றைய நிலையில் `` திருமணம் என்ற பெயரால் ஏற்படும் பாதிப்புக்கள் சமுதாயத்திலே புரையோடிய புற்றுநோயாய் மாறிப் போயுள்ளதை நாம் அனைவரும் அறிவோம். இந்த நோயால் நேரடியாகவோ, மறைமுகமாகவோ நாம் அனைவரும் பாதிக்கப்படுகி றோம்.

``வாழ்க்கை வண்ணங்கள்'' என்ற இந்த சிறுகதைத் தொகுதியி லுள்ள அத்தனைக் கதைகளுமே இந்த அடிப்படையில் எழுதப்பட்டவை தான். இதே அடிப்படையில் நூற்றுக்கணக்கான கதைக்கருக்கள் உள்ளன. வித்தியாசமான கோணங்களில் `திருமணச் சந்தை' வியாபாரம் தற்காலத்தில் நம் மத்தியில் களைகட்டிக் கொண்டிருக்கிறதே. இந்த வியாபாரத்தில் இலாபம் அடைந்தவர்கள் அதிகமா?.... நட்டமடைந்தவர்கள் அதிகமா? காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

பத்திரிகைகளிலோ, சஞ்சிகைகளிலோ இதற்கு முன் வெளிவராத கதைகள் இவை....இவற்றை எனதன்புக்குரிய வாசகர்களுக்குத் தருவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். இக்கதைகள் அனைத்திலுமே சீதனத்தின் பல வண்ணங்களே வித்தியாசமாக இழையோடுகின்றன. வாழ்க்கைப் பிரச்சினைகளில் இன்று மிக முக்கிய பிரச்சினையாக இருப்பது சீதனமே.



இதற்குப் பல முகங்கள்; பல வண்ணங்கள். இவற்றில் மிகச் சிலவற்றைத் தொட்டுக்காட்டும் முயற்சியே இது. ஒரே கருவைச் சுற்றி சுற்றி வரும் வித்தியாசமான கதைகள்....

இத்தொகுதி எனது மிக நீண்ட நாட்கனவு...
இதை வெளியிட முன்வந்த ``சிந்தனை வட்டத்திற்கும்

என்னை எழுதத் தூண்டிக் கொண்டே இருக்கும் எனக்கிறைவ னளித்த அன்பு வாழ்க்கைத்துணைவர் சித்தீக் அவர்கட்கும்,

அட்டைப் படத்தை அழகாக வடிவமைத்த எனது அன்பு மகள் பாத்திமா ஷகீமா (11ம் ஆண்டு மாணவி) அவர்கட்கும்,

அருமையான அணிந்துரையைச் சிறப்பாக அனுப்பித்தந்த பேராசி ரியர் அனஸ் அவர்கட்கும்,

என்னை இனங்கண்டு, எனக்குள் தமிழார்வத்தை ஏற்படுத்தி என் எழுத்துப்பணிக்கு வழிகாட்டிய எனது ஆசான் ஐ. சாரங்கபாணி அவர்களுக்கும்,

என் முதற் சிறுகதையைச் சிபாரிசு செய்தது முதல் நோயால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் போதுகூட என்னை மறவாது வாழ்த்துரை தந்த அமரர் A.V.P. கோமஸ் அவர்களுக்கும்.

இதயத்தின் இனிய நன்றிகள்.

என்றுமே என் எழுத்துக்களை வாசிக்கும் இரசிக்கும் - என் இனிய வாசகப் பெருமக்களே உங்களுக்கு என் உள்ளத்து நன்றிகள்.

நஜ்முல் அதீப் நயீமா சித்தீக்.
கம்பளை

# உள்ளே...


1. இலட்சியங்களும், இலட்சங்களும்,
2. சவடிச் சம்பிரதாயம்.
3. கேட்கச் சொல்லிக் கேட்கும் சீதனம்
4. ஒரு மகள் சீதனம் கேட்கின்றாள்.
5. மண்ணுக்குள் மாணிக்கங்கள்.
6. இரு துருவங்கள்.
7. ஒரு தராசின் இரு தட்டுக்கள்.
8. வேஷங்கள் கலையுமா?
9. மணம் வீசாத திருமணங்கள்.
10. அவன் எடுத்த முடிவு.
11. ஒரு மோதினார் கலியாணம் பேசுகிறார்.
12. ஒரு மனிதன் மாமனிதனாகிறான்.
13. தொடரும் இலட்சியங்கள்
14. இப்படியுமா?
15. மாப்பிள்ளைக்கு அலவன்ஸ்





# வாழ்க்கை வண்ணங்கள்

(சிறுகதைத் தொகுதி)

நயிமா சித்தீக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# இலட்சியங்களும் இலட்சங்களும்!

கதவைத் தட்டும் ஒலி கேட்டு அன்வர் மாஸ்டரின் சின்ன மகள் ஓடிச்சென்று கதவைத் திறந்தாள்.

``அன்வர் சேர் இரிக்கிறாரா?'' வந்த இளைஞன் ரஷாத் கேட்டான்.
``ஓ... இரிக்கிறாரே...''என்று கூறும்போதே அன்வர் மாஸ்டர் எழுந்து வந்து விட்டார்.

``அஸ்ஸலாமு அலைக்கும் சேர்... சுகமா இரிக்கிறீங்களா...'' விசாரித்துக் கொண்டே உள்ளே வந்தான் அவன்...
``உட்காரப்பா...'' அன்வர் மாஸ்டருக்கே உரிய தோரணையில் வரவேற்றார்.

கம்பளை சாஹிராக் கல்லூரியின் பொற்காலம் அது.... தொண்ணூறுகளுக்கு முன்... அப்போது வருடாந்தம் கலை- வர்த்தகம் - முகாமைத்துவம் என்று பல பல்கலைக்கழகங்களுக்கும் இந்தக கல்லூரி மாணவர்கள் பெருமளவில் அனுமதி பெறுவார்கள். நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வந்த மாணவர்களின் பெரிய கூட்டமே இப்பிரிவில் கற்பார்கள்... எண்பத்தியோராம் எண்பத்தியிரண்டாம் வருடங்களின் கலை வர்த்தகப் பிரிவின் மொத்தமாய் பத்துப் பதினேழு பேர் இருந்த பிரிவை தொண்ணூறாமாண்டளவில் கிட்டத்தட்ட இருநூறு மாணவர்களாக்கிச் சாதனை புரிந்தவர்தான் அன்வர் மாஸ்டர்... அவரை மறக்கத்தான் முடியுமா? சதாவும் புன்னகை....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையில் நேர்த்தி.....

பணத்தைப் பெரிதாக மதிக்காத பண்பு.....

இதமாக தன் பிரிவில் கடமையாற்றியவர்களோடு நடந்துகொள்ளும் பெருந்தன்மை....

மாணவர்களை மதித்து அவர்களை தன் வசப்படுத்தி அவர்களைக் கற்கத்தூண்டும் திறமை....

ஓ... அவரை பகுதித்தலைவராகக் கொண்டு பணிபுரிந்த அந்தப் பிரிவு ஆசிரியர்களுக்கு அவர் தந்த முன்மாதிரிகள்... ஓர் உடன் பிறப்பாய் பழகிய விதம்....

வீட்டிற்கு வந்தமர்ந்த ரஷாத்...சில நிமிடங்கள் மௌனித்தான்.

``என்னப்பா ரஷாத்... ஒண்ணும் பேசாம இரிக்கிற... என்ன விஷயம்...`` அன்வர் மாஸ்டர் ரஷாதின் மௌனத்தைக் கலைத்தார்.

``இல்ல சேர்... ஒங்களக் கண்டதுமே எங்கட கொலேஜ் நினைவெல்லாம் வந்திடிச்சி...அதுதான்.....``

ரஷாதின் முகத்திலும் இந்த நினைவின் இழைகளைக் காண முடிந்தது.

``அப்படித்தான்... காணுற எல்லாப் புள்ளைகளுமே சொல்றாங்க... நானும் அந்த நல்ல நினைவுகள நெனச்சிக் கொள்ளுவேன்....``

அதற்கிடையில் அவரது மனைவி குளிர்பானம் கொண்டு வந்து விட்டார்.

``றஸீனா...அடிக்கடி ரேடியோவில ``இளைஞர் இதயம்`` நிகழ்ச்சியில பேசுவாரே ரஷாத்... அவர்தான் இவர்.....``

மனைவிக்கு அறிமுகம் செய்து வைத்தார் ``ஓ....ஒங்கட ஸ்டுடன்ட் இல்லையா... கண்டதுல சந்தோஷம்.....``

அவர் உள்ளே போய்விட்டார். ``சேர்...எனக்கு வெடிங்...நீங்க கட்டாயம் வந்துடணும் குடும்பத்தோட வந்துடுங்க சேர்...``

அழைப்பிதழை எழுந்து நின்று இருகைகளாலும் கொடுத்துவிட்டு விடை பெற்றுக் கொண்டான் ரஷாத்.

அழைப்பிதழைப் பிரித்தவர் நாற்காலியில் அப்படியே உட்கார்ந்து விட்டார்.



ரஷாத்....

ஹுபுகஸ்தலாவையில் இருந்து எட்வான்ஸ் லெவலுக்காகவே கம்பளை ஸாஹிராவுக்கு வந்தவன்.

மிகுந்த திறமைசாலி...

வர்த்தகப்பிரிவில் கல்வி கற்ற அவனை எல்லோருக்குமே நன்கு பிடிக்கும். கணக்கியல் பாடத்தைக் கற்பித்த சீவரத்தினம் ஆசிரியரின் செல்லப்பிள்ளை....``

ஏனைய சில மாணவர்களைப் போல புத்தகப் பூச்சியாகவும் அவன் இல்லை. விளையாட்டு;மாணவர் மன்ற நிகழ்வுகள், விவாதம், மீலாத்விழா என்று எல்லாவற்றிலும் ஈடுபட்டுக் கொள்வான்.

``இஸ்லாத்தைச் சரியாக உணர்ந்து பின்பற்ற வேண்டும்`` என்று மாணவ மன்றங்களிலே திடமாகப் பேசுவான்.

இஸ்லாத்தில் புகுத்தப்பட்டுள்ள மௌட்டீகமான அனாச்சாரங்களை ஒழிக்க வேண்டும் என்பதில் தீவிரமானவன்.

அவனது இரண்டாமாண்டிலே உணவு முத்திரைக்காக மாணவர்களுக்கு கொடுக்கப்பட்ட ஒருமாத பணத்தை அப்பிரிவு மாணவர்களிடம் கேட்டெடுத்து அப்பணம் முழுமைக்கும் உணவுப் பொருட்களை வாங்கி திஹாரிய அங்கவீனர் நிலையத்திற்குக் கொண்டு சென்றான்....

அன்வர் மாஸ்டரே பல சமயங்களில் அவனது இவ்வாறான திட்டங்களைக் கண்டு திகைத்து விடுவார்.

கம்பளை ஸாஹிராவுக்குச் சொந்தமான பள்ளிவாசலில் ஐவேளைத் தொழுகையும் நடைபெற வேண்டுமென்பதிலும் ரஷாத் ஒரு பெரிய மனிதனைப் போல முன்னின்று முயற்சிகளை எடுத்தான்...

ஒரு முறை நடந்த சம்பவம் ரஷாதை மிகவும் சிறப்பாக அந்தக் கல்லூரிக்கு இனங்காட்டியது.

அது ஓர் பசுமையான நினைவு- பசுமையான நினைவுகள் மாண்டு போவதில்லையே....

ஒரு மீலாத்விழாவிற்கான பட்டிமன்றம் ஒரு பிரிவுக்கு ரஷாதே தலைவன் பட்டிமன்றத் தலைப்பாக ``சீதனத்தை இளைஞர்களால் இல்லாமலாக்க முடியுமா? பெற்றோரால் இல்லாமலாக்க முடியுமா?`` என்பதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்களின் பக்கமாகவே ரஷாத் வாதிட்டான்.

அவனும் அவனது குழுவினரும் முன்வைத்த கருத்துக்கள் சபையோரை அடிக்கடி கவர்ந்தது.

மஃமூத் கேட்போர் கூட்டம் கைதட்டல்களால் அதிர்ந்தது. விவாதம் முடிய....

சபையிலிருந்து பல குரல்கள்...

``ரஷாத்...நீங்க சீதனம் எடுப்பீங்களா?''

``இல்லை...இல்லவே இல்லை.....''

மேடையில் நின்று கைகளை உயர்த்தி உரத்துக் கூறினான். ரஷாத்.

மீண்டும் பலத்த கரகோஷம்....

விவாதத்திலும் அவனது அணிதான் வெற்றியீட்டியது! அன்று முதல் ரஷாத் கல்லூரிக்கே பெரிய கதாநாயகனானான்.

நல்ல பெறுபெறுகளைப் பெற்று கொழும்பு - ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ கற்கை நெறிக்குத் தெரிவாகி... அதனோடையே கணக்காய்வுத் துறையிலும் கற்று...வாழ்க்கையின் ஒவ்வொரு படிகளாக மேல்நோக்கி ஏறிச் சென்று கொண்டிருந்தான் ரஷாத்.

இடையிலேயே வானொலி முஸ்லிம் பிரிவிலும் அவனது குரல் ஒலிக்கத் தொடங்கியபோது பெற்ற பொழுதிலும் பெரிதுவக்கும் தந்தையாய் அன்வர் மாஸ்டர் மகிழ்ந்து போனார்.

தன் கீழ் கற்று, இலட்சியப் பிடிப்போடு அதே வேளை கல்வியிலும்உயர்ந்து, நிற்கும் ரஷாதைப் பற்றித் தான் சந்திக்கும் பழைய நண்பர்கள், மாணவர்களிடமும் கூறிப் பெருமைப்படுவார் அவர்.

கிட்டத்தட்ட ஒருமாதத்திற்கு முன்பிருக்கலாம்... அன்வர் மாஸ்டரை கண்டியில் சந்தித்த நஸார் - அவரது பழைய மாணவன். கதையோடு கதையாக -``சேர்....ரஷாத் கலியாணம் செய்யப் போறானே...'' என்றான்.

``ஒ....நீயெல்லாம் செய்து புள்ள குட்டிகாரனும் ஆயிட்டபோது அவனும் செய்யத்தானே வேணும்...'' இயல்பான நகைச்சுவையோடு கூறினார் அன்வர் மாஸ்டர்.

``சேர்...ரஷாத் எங்க கலியாணம் செய்யிராண்டு தெரியுமா?'' நஸார் கேட்டு விட்டு அவரைப் புதிராய்ப் பார்த்தான்.

``சே...சே... அவன் ரொம்ப நல்ல இலட்சியவாதி... எங்கயாவது... சீதனமில்லாம...நல்ல புள்ளயா பார்த்துத்தான் முடிப்பான்....''



``சேர் அவனைப்பத்தித் தெரிஞ்சவங்க எல்லோருமே இப்படித்தான் நெனைக்கிறோம். சேர்... ஆனா... நாங்க நெனைக்கிறபடி எதுதான் நடக்குது சேர்...''

``சொல்லப்பா நஸார்... என்ன விஷயம்....''

இல்ல சேர்... எங்களுக்கு ஒரு வருஷம் முந்தி படிச்ச மாலிக்கத் தெரியும் தானே...'' நஸார் நினைவு படுத்த....

``ஏன் தெரியாம... ஸ்கூல்ல நல்ல பேர் எடுத்து ஜொலிக்கிறவங்களை மறக்காம இருக்கிறது போல குழப்படிகள் செய்து தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தவர்களையும் நாங்க மறக்க முடிவதில்லையே..... மாலிக் அந்த ரெண்டு வருஷத்திலயும் பண்ணின குழப்படிகள் கொஞ்சமா....''

``ஆனா சேர்....அந்த மாலிக் இப்ப எப்படி இரிக்கான் தெரியுமா...?''

``சொல்லப்பா...''தன் பிள்ளைகளைப் பற்றித் தெரிந்து கொள்ளத் துடிக்கும் ஆதங்கம் அவரின் குரலில்.

``சேர் நீங்க சொன்னா நம்பமாட்டீங்க... அவன்ட மதினி ஒருத்தி கலியாணம் செய்து ரெண்டு வருஷத்தில விதவையாயிட்டாங்க... ஒரு புள்ளயோட ரொம்ப கஷ்டமான குடும்பம்.. அவங்களத்தான் மாலிக் கலியாணம் செய்தான்.. கலியாணம் ரொம்ப சிம்பளா நடந்துச்சு... பள்ளியில நிக்காஹ்...ரெண்டு நாளைக்குப் பொறகு மாலிக்கிட செலவில வலீமா சாப்பாடு... நானும் போனேன்....''

``ஓ...நம்ப முடியல்லயே...''

``யாருக்குமே நம்ப முடியல்ல சேர''...

இப்போ அவன் சின்னதாக ஒரு ``காமன்ற்'' வச்சிரிக்கான் பறக்கத்தா இரிக்கான்...''

``உண்மைதான் நஸார்... எனக்கே வியப்பாகத்தான் இரிக்கி.. மாலிக்க கண்டா நான் விசாரிச்சதாகவும், கம்பளப் பக்கம் வந்தா நான் வரச்சொன்னதாகவும் சொல்லிடு....''

``சரி சேர்... பஸ்வருது... நான் போயிட்டு வர்ரேன்... அஸ்ஸலாமு அலைக்கும்.''

நஸார் திடீரென்று விடைபெற்றுக் கொண்டான். ரஷாதைப் பற்றிக் கேட்டுக் கொள்ள முடியாமற் போய்விட்டது.

இன்னுமொரு பத்துப்பதினைந்து நாட்களின் பின்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்வர் மாஸ்டர் ஒரு தேவைக்காகக் கொழும்பு சென்ற போது கூடவே அவரது சின்ன மகளும் தொற்றிக் கொண்டாள்.

``வாப்பா..``கோல்பேஸ்`` போவோம்`` என்று பிடிவாதமாய் அந்தப் பிஞ்சு நிற்க....
கூட்டிப் போனார்.

அவரது கண்களை அவராலேயே நம்ப முடியவில்லை...

மிகப் புதிய ரக பென்ஸ்.. பென்னம் பெரிய கார்... அதில் சாய்ந்து கொண்டு ஒரு இளம் பெண். முழுமையான அலங்கார ஒப்பனைகள். லிப்ஸ்டிக்... கியூடெக்ஸ்....உடலின்ஏற்ற இறக்கங்களை முழுமையாகக் காட்டும் உடை... அவளோடு மிக நெருக்கமாக சாய்ந்து கொண்டு ரஷாத்.....

ஆம்... இலட்சியவாதி ரஷாத் தான்.
அவனே முதலிற் பேசினான்.
``சேர்... இது ...நான் ``மெரி`` பண்ணப்போற ஸெயினப்... ஸம்ஸம் எக்ஸ்போட் கம்பனி ஓனர் மிஸ்டர் வாஹிட் அவர்களின் மகள்....ஒரே மகள்... ஸெயி... இது எங்கட சேர்....``

பரஸ்பரம் அறிமுகம் செய்தான் ரஷாத். அலட்சியப் பார்வையோடு - ஒரு பூச்சி புழுவைப் பார்ப்பதுபோல் - ஸெயினப் அன்வர் மாஸ்டரைப் பார்த்தாள்.

வேண்டா வெறுப்பாய் கைகுலுக்க கையை நீட்டினாள் ``ஹலோ`` சொல்லிக் கொண்டே.
இதமாகத் தவிர்த்துக் கொண்டார் அன்வர் மாஸ்டர். மனதை முகம் காட்டிவிடக் கூடாதே என்று சிரமப்பட்டார். பேசவரவில்லை.

``சேர்...வாஹித் அங்கலுக்குப் பொறகு கம்பனியே எனக்குத் தான்..இவ்வளவு வசதியான வாழ்க்கையை நான் எதிர்பார்க்கவே இல்லை... ஸெயினப் இன்டர் நெஷனல் ஸ்கூல்ல படிச்சிட்டு. யூ.கே. போய் ஒரு கோர்ஸ் செய்திருக்கிறவ...``

அன்வர் மாஸ்டருக்கு எல்லாம் புரிந்தது ``நல்லா இரியப்பா...`` என்று கூறி விடைபெற்றுக் கொண்டார்.

``வாப்பா கார்ட தாங்களேன்`` சின்ன மகள் வந்து கேட்க அவரது சிந்த்னை கலைந்தது.
``கொஞ்சம் இரிங்க பூவே... பாத்துட்டுத் தர்ரேன்...``

இந்த அழைப்பிதழே பெரிய செலவாகியிருக்கும்...
திருமணம் கோல்பேஸ் ஹோட்டலில்.



``ரஷாதே உன் இலட்சியங்களை காற்றிலே பறக்கவிட்டுவிட்டாயா? மனம் ஓலமிட்டது.

``வாப்பா இந்த வெடிங்கிற்கு நாங்க போறதா?`` கார்ட்டைப் பார்த்துக் கொண்டே கேட்டாள் சின்ன மகள்.

``இல்லடா கண்ணே.. இதே டேட்டுல எங்கட கோழி பார்ம்ல வேல செய்யிற காதர் நானாட மகளுக்கும் கலியாணம் இல்லையா... நாங்க அங்கதான் போவனும்....``

``ஐயோ வாப்பா... கோல்பேஸ் ஹோட்டல் கலியாணம் நல்லா இரிக்குமே.... எனக்கு ஆச வாப்பா....``

கார்ட்டில ஆர்.எஸ்வி.பி. போட்டிருந்ததால் தொலை பேசியைச் சுழற்றினார். அன்வர் மாஸ்டர்.

ரஷாதின் செல்போன்.
``ரஷாத்... நான் அன்வர் சேர் பேசுறேன். உன்ட வெடிங்கிற்கு வர வசதியில்லப்பா... கோவிச்சுக்காத.....``

படாரென தொலைபேசியை வைத்துவிட்டார் பதிலுக்குக் கூடக் காத்திராமல்.

இவனுடைய பதில் என்ன வேண்டிக் கிடக்கிறது? அன்வர் மாஸ்டர் தனது கோழிப் பண்ணையில் வேலை செய்யும் காதர் நானாவுடன் கதைக்க எழுந்து செல்கிறார்.

*(யாவும் கற்பனையே)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீவடிச் சம்பிரதாயம்....

அது ஒரு தனியார் நிறுவனத்தின் விருந்தினர் மண்டபம்.... மண்டபம் என்பது பெயரளவில்தான். ஒரு பெரிய அறை என்று தான் சொல்ல வேண்டும்...

வசதியான ஷோபாக்கள்....எடுப்பான மலரலங்காரம்.... ஒரு மூலையில் சில பத்திரிகைகள், சஞ்சிகைகள்,,. மறுமூலையில் கச்சிதமாக ஒரு தொலைக்காட்சிப் பெட்டி....

பாதுகாப்பு அதிகாரியின் அனுமதியோடு அங்கே வந்து அமர்ந்திருந்தான் நஸார். அவனது கண்கள் அடிக்கடி கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தன.

அவனது மனம் பர்ஸானாவையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

``சேர்... எக்ஸ்கியூஸ்மீ.. பர்ஸானா மேடம் இன்னும் பத்து நிமிஷத்துல வந்துடறதா சொன்னாங்க... கொஞ்சம் பொறுத்துக்கச் சொன்னாங்க....'' ஒரு சிற்றூழியர் மிகவும் பவ்வியமாக வந்து சொல்லிச் சென்றான்.

நஸாருக்கு உட்கார்ந்திருக்கவே முடியவில்லை....

பர்ஸானாவுக்கும் அவனுக்கும் இன்னும் ஒரு மாதத்தில் திருமணம் நடைபெறவிருக்கிறது. பெரியோரால் நிச்சயிக்கப்பட்ட திருமணம். தான். இந்த நேரத்தில் பர்ஸானா ஏன் தன்னைத் தனியாக இன்று இங்கே சந்திக்கச் சொல்லி இருக்கின்றாள்? அதுவும் அவளாகவே சொல்லாமல் அவளின் தம்பி மூலம் தனக்கு இந்த அழைப்பை ஏன் விடுத்துள்ளாள்?



நஸாருக்கு இந்தக் காரணத்தை அறியாமல் நேரத்தை நகர்த்துவது மிகவும் கஷ்டமாக இருந்தது.

நஸாரும் வேறொரு கம்பனியில் தரமான ஒரு வேலையில் இருப்பவன்.

இரு பக்கத்தினராலும் சீதனம் கொடுக்கல் வாங்கல் எல்லாம் பேசி முடிந்தாகிவிட்டது.

திருமணத்திற்கான நாள் நிச்சயிக்கப்பட்டு, திருமண ஹோலும் பதிவு செய்தாகிவிட்டது.

இப்போது பர்ஸானா ஏன் அழைத்தாள்.?

நஸார் இதே சிந்தனையுடன் இருந்தபோது

``ஐ...ஏம்வெறி சொரி" என்றவாறே வந்தாள் பர்ஸானா.

``உங்களை இப்படிக் கூப்பிட்டதால என்னைப் பத்தி தவறா எதுவும் நெனைச்சிடாதீங்க...'' மிக அடக்கமாகச் சொன்னவள் சற்றுத்தள்ளி இருந்த ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டாள்.

``இல்ல.... இதில ஒண்டும் பிழையில்ல..என்ன விஷயம் சொல்லுங்க'' நஸாரின் அவசரம்... அவனின் சொற்களில் பட்டுத் தெறித்தது.

மெல்லிய புன்னகையோடு; தலைகுனிந்தவளாய் சில கணங்கள் பர்ஸானா மௌனித்தாள். அந்தச் சில கணங்களைக்கூட நஸாரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

விடயத்தை அறிந்து கொள்ளும் ஆவலால் அவன் அவசரப்படுத்தினான்.

``வரச் சொன்னீங்க.. காரணம்...?''
மெதுவாகத் தலையைத் தூக்கிய பர்ஸானா மெல்லப் பேசத் தொடங்கினாள்..

``எனக்கு எப்படிச் சொல்றதெண்டே தெரியல்ல.... சொல்லாமையும் முடியல்ல...'' பர்ஸானா தலையை நிமிர்த்திப் பார்க்காமலேயே பேசினாள்.

அவள் பேசப் பேச நஸாரின் ஆவல் மிக மிக அதிகரித்தது

``எங்க வீட்டால ``சவடி'' செய்து தர்ரதா ஒத்துக் கொண்டாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லயா.... அதுவந்து...

பர்ஸானாவைப் பேச விடாமல் நஸார் இடைமறித்தான்.

``ஓ... பேச்சுமுடிக்க வந்த போதே... இது பத்திப் பேசினாங்க தானே... இப்ப.... என்ன ப்ரொப்ளம்....''

``நத்திங் ப்ரொப்ளம்... நத்திங்... ஆனா.... ஒரு விஷயம்....''

``சொல்லுங்க....''

``சவடி என்ட டிஸைன்ல..... அத செய்ய வாணாம்! என்டு நான் விரும்புறேன்.....''

``அப்படீன்னா எனக்கு வெலங்கல்லயே.... ஐ கான்ட் அன்டஸ்டேன்ட்....

`` பெரிசா ஒன்றும் இல்ல....ஒங்கட உம்மா தாத்தா....தங்கச்சி எல்லாம் போடுவாங்க தானே...... ஒரு பிறைவடிவமா...அகலமா...அதுதான் சவடி....''

``ஓ....வெலங்கிச்சி.....''

``அந்த டிஸைன்ல இல்லாம.....சாதாரணமா ஒரு பென்டன் செய்யலாம் என்டுதான்...''

நஸாருக்கு ஒன்றுமே உண்மையிலேயே புரியவில்லைதான்.

அவன் பர்ஸானாவையே நிமிர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

``எனக்கு எல்லாத்தையும் ஒங்க கிட்ட நேர்ல பேசமுடியல்ல...இது ஓபிஸ் வேற.....எனக்கு ஒங்களோட வேற எங்கயும் தனியாய்ப் பேசறதும் நல்லதா படல்ல.. ப்ளீஸ்..இதுல எல்லாத்தையும் எழுதியிருக்கின்றேன்... படிச்சிப்பாருங்க.....அமைதியா படிச்சிட்டு எனக்கு ஒரு ``கோல்'' தாங்க... எப்பவுமே உங்கட அபிப்பிராயங்களுக்கு நான் மதிப்பு தருவேன்...இதுல எழுதியிருக்கிற விஷயங்களையும் ப்ளீஸ் புரிஞ்சிக் கொள்ளுங்க''

உறைக்குள் போட்டிருந்த கடிதத்தை நஸாரிடம் நீட்டியபடியே அவள் எழுந்து கொண்டாள்.

நஸார் விடைபெற்றுச் சென்றுதன் காரில் ஏறி காரை ஒரு மர நிழலில் கொண்டு போய் நிறுத்தி, கவரைத் திறந்தான்....

எனது மதிப்பிற்குரிய மிஸ்டர் நஸார்.



எனது இந்த அழைப்பு உங்களுக்கு வியப்பாக இருக்கும். ஆனால் இக்கடிதத்தில் உள்ள விடயம் உங்களுக்கு ஓ.கே. ஆனால் தான் நான் இன்ஷா அல்லாஹ் உங்களை என் வாழ்க்கைத் துணைவராக ஏற்றுக் கொள்ள முடியும். தயவு செய்து மனந்திறந்து நான் சொல்பவைகளை கேளுங்கள் ப்ளீஸ்

``சவடி'' என்ற வடிவத்தில் ஒரு தாலி சம்பிரதாயத்தை உருவாக்கி, அதைத் திருமணங்களில் மிகக் கட்டாயமானதாக்கிக் கொண்டு பல திருமணங்கள் பிரச்சினைகளில் முடிகின்றனவே....

இஸ்லாம் கூறும் திருமணமுறைகள் எல்லாமே அழிந்து வருகின்ற நமது சமுதாயத்திலே இந்த ``சவடி'' பிரச்சினையும் ஒன்றுதான். ஆனால் இது பல இடங்களில் ஏனைய பிராச்சினைகளைவிட மிகவும் கஷ்டத்தை எல்லோருக்கும் ஏற்படுத்தி விடுகிறதே....

எனது மூத்த தாத்தா....நீங்கள் எல்லோரும் என்னைப் பார்க்க வந்தபோது கண்டிருப்பீர்கள் ரசீதா....அவவுக்கு திருமணம் நடக்கும்போது நான் ஓலெவல் படித்துக் கொண்டிருந்தேன்.... அவவுக்கு சவடி செய்வதற்காக வாப்பா பட்டபாடு...கடைசியில உம்மாட சவடியை அழிச்சி...மாற்றி அவவுக்கு சவடி செய்து கொடுத்தாங்க....

எனது அடுத்த வீட்டுச் சினேகிதி மர்லியா....அவவுக்கு மொத்தம் அறுபத்தைஞ்சு பவுனுக்கு நகை கொடுத்தாங்க... அப்படிக்கொடுத்தவங்க.. மாப்பிள்ளை வந்து தாலிகட்ட தனியாக சவடி செய்து மாப்பிள்ளை வீட்டிற்கு அனுப்பவில்லை என்பதற்காக கலியாணத்துக்கு முதல் நாள் மாப்பிள்ளை வீட்டார் வந்து மர்லியாவின் வீட்டாரைக் கேவலமாகப் பேச...அந்த நிமிடமே அவர்கள் கண்டிக்குச் சென்று பத்துப் பவுனில் சவடி வாங்கி கொடுத்து சமாளித்தார்கள்....

இதுமட்டுமல்லவே...எனது பெரியப்பா மௌத்தானபோது பெரியம்மாவை இத்தாவில் வைத்துவிட்டு உம்மாம்மா சொன்ன வார்த்தைகள்...``ஏன்ட செல்வமே...ஒனக்கு இனி இந்த சவடியை போடுற பாக்கியம் இல்லாமப் போயிரிச்சே.....''

இந்த சம்பிரதாயம் அப்பட்டமான பொய். எங்களுடைய சமுதாயம் எங்கிருந்தோ இரவல் வாங்கிக் கொண்டதில் மோசமானது.

சவடியை செய்து அதிலே மஞ்சல் வெற்றிலை பூ இனிப்புப் பண்டங்கள் எல்லாம் வைத்து சுமங்கலியான பெண்கள் மாப்பிள்ளை வீட்டிற்குக் கொண்டு போய்க் கொடுக்கும் சம்பிரதாயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்வீட்டாரே செய்து கொடுத்த ``சவடி''யை மாப்பிள்ளைகள் சபையில் பெண்ணுக்கு அணிவிக்கும் சம்பிரதாயம்...அதுவும் ஒரு குறிப்பிட்ட அமைப்பில் அதைச் செய்ய வேண்டும் என்ற கட்டுப்பாடு.... இந்தச் சவடியை மாப்பிள்ளை வீட்டாருக்குச் செய்து கொடுக்க முடியாமல் தடைப்படும் திருமணங்கள்....

மிஸ்டர் நஸார்...இதையெல்லாம் நான் யோசிக்கின்றேன்...எங்கட சமுதாயத்தினர் எல்லோரையும் பார்த்து ``சவடி தேவையில்லை'' என்று பிரச்சாரம் செய்ய எனக்கு முடியாது. அந்தத் தைரியமும் எனக்குக் கிடையாது.... ஆனால்...சவடி என்ற உருவத்தில் நான் அந்த நகையை அணியமாட்டேன் என்று பல வருடங்களுக்கு முன்பாகவே நான் முடிவெடுத்தேன்.

என்னைப் புரிந்து கொள்வீர்களா?

எனது முடிவு சரியென்று பட்டால் எனக்கு ``கோல்'' தாருங்கள் எனக்காக எப்படியும் முப்பது பவுனுக்கு மேல் நகைகள் தருவார்கள்... ஆனால் சவடிக்குப்பதில் செயினும் பென்டனும் அல்லது ஒரு நெக்லஸ்... இதுபற்றி வீட்டாரிடம் நான் பேசிவிடடேன்.....

இப்படி அதிகப்பிரசங்கியாக நான் இருப்பதாக நினைப்பீர்களோ தெரியவில்லை. எனக்கு மனதில் பட்டதை நான் சொல்லிவிட்டேன். தயவு செய்து பிழையாக நினைக்காதீர்கள்....

உங்கள் வாழ்வோடு என்னை இணைப்பதா இல்லையா என்பதை உங்களது டெலிபோன் மணியோசைதான் தீர்மானிக்கும்.

வாழ்த்துக்கள்.

என்று கூறி பர்ஸானாவின் கடிதம் முடிந்திருந்தது.

நஸார் வாசித்து முடித்த கடிதத்தை நேர்த்தியாக மடித்து சேர்ட் பொக்கற்றில் வைத்துக் கொண்டபோது அவனது முகத்தில் புன்னகை மலர்ந்தது....

பர்ஸானாவின் மேசையிலிருந்த தொலைபேசி கிணுகிணுத்தது.

``யெஸ்''...பர்ஸானா ஸ்பீக்கிங் மறுமுனையில் நஸாரின் குரல் இதமாக ஒலித்தது.

``பர்ஸானா....'' உங்கட லெட்டரைப்படிச்சிட்டேன்....



பர்ஸானாவின் இதயம் வேகமாக படபடத்தது. பேசமுடியவில்லை...அவளால்.

``பர்ஸானா...ஐ லைக் யூ வெரிமச். யூ ஆர் வெரி ப்ரேங்....''நான் மிகவும் சந்தோசப் படுறேன்...நீங்க..மனசைத் தொறந்து பேசியிருப்பது எனக்கு மிகவும் புடிச்சிரிக்கி....''

``நெசமாகவா சொல்றீங்க...ஐ. ஏம் வெரி லக்கி....அல்ஹம்து லில்லாஹ்...''

``அப்புறம்... இன்னுமொரு விஷயம்... உங்களுக்கு ``வெடிங்'' தினத்தில போடப்போறது உங்கட வீட்டால செய்து தர்ர செயினோ, பென்டனோ, நெக்லஸோ இல்ல..''.

நேரில் பேசுவதைவிட டெலிபோனில் பேசும்போது பர்ஸானாவுக்கு தைரியமாக இருந்தது. தயக்கமில்லாமல் கேட்டாள்.

``அப்ப...என்ன செய்ய போறீங்க... மஞ்சட் கயிறு கட்டப் போறீங்களா...''

``இல்ல....பெரிய தேடாக் கயிறா கழுத்தில கட்டி... என் செல்லப் பெண்டாட்டி பர்ஸானாவை எங்கட வீட்டிற்கு இழுத்துக் கொண்டு வரப் போறேன்....''

பர்ஸானாவிற்கு சிரிப்பை அடக்க முடியவில்லை.

``பர்ஸானா...என் உழைப்பால சேர்த்த பணத்தால வைரம் பதிச்ச நெக்லஸ் செய்து போடப்போறேன்....''

``ஓ...மை...கோட்....அவ்வளவெல்லாம் டு மச்.,...''

இல்ல பர்ஸானா....இல்ல.... நல்ல குணமுள்ள ஒரு வைப்புக்காக இதெல்லாம் பெரிய விஷயங்களே இல்ல......''

``அல்ஹம்துலில்லாஹ்....''

இரண்டு நல்ல மனங்களின் சங்கமத்தில் இல்லறம் பூத்துச் சிலிர்க்கும்..... பூத்துச் சிரிக்கும்...

ஓ......அந்த நல்ல நாள் சீக்கிரமே வரட்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்கச் சொல்லிக் கேட்கும் சீதனம்.

வாழ்க்கை என்ற பயணத்தில் திருமணம் என்பதுதான் மாபெரும் திருப்புமுனை... பெரும் சந்தி .இந்த சந்திக்கு வந்து திசையை அறிந்து பயணத்தைத் தொடருவது அல்லது தொடரச் செய்வது என்பது இப்போதெல்லாம் ஜன்மப் பிரயத்தனமாகி....பெரும் போராட்டமாகி....ஏமாற்றமாகி.... ஆயிரமாயிரம் பொய்களுக்கும் பித்தலாட்டங்களுக்கும் உள்ளாகி...... பேரம் பேசும் வர்த்தகமாகி....ஓ..... சிந்திக்கவே முடியவில்லையே......

தாஹிர் கிளார்க்கரும் யோசித்து யோசித்து நித்திரையின்றி தடுமாறிக் கொண்டிருக்கின்றார்.

கண்டி கச்சேரியில் சாதாரண குமாஸ்தாவான அவர்... அவரது மனைவி ரஸீனா......மூன்று பிள்ளைகள்.... அவரது வயது போன தாய் ரஹ்மத்தும்மா.... இந்தச்சிறிய குடும்பம் வாழுவது கெலிஓயா-தெல்லங்கை கிராமத்தில்.

தாஹிருக்குத் தொழில் வருமானத்தைத் தவிர பரம்பரையாக வந்த சாதாரணவீடும்..... அதைச்சுற்றி ஒரு அரை ஏக்கர் மட்டில் தோட்டமும் தான் ஆஸ்தி.

தாஹீரின் மூத்த மகள் பஸீனாவின் திருமண விடயம் தான் இப்போது பூதாகாரமாக அவர்முன் நின்று பூச்சாண்டி காட்டுகின்றது.

என்ன செய்வதென்றே அவருக்குப் புரியவில்லை.
துாக்கம் வருவதாகவே இல்லை........



அந்தச் சிறிய வீடே அமைதியாக இருந்தது.
சுவர்க்கடிகாரத்தின் டிக், டிக் ஓசை மட்டுமே....
படுக்கையிலிருந்து எழுந்து வந்து முன்னறையிலே இருட்டில் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார்....

மகள் பஸீனாவின் திருமணத்தை எப்படி நடந்துவது... எப்படி நடத்துவது.... பணத்திற்கு எங்கே போவது...... அவருக்கு ஒன்றுமே புரியவில்லை......

பஸீனா ஏ.எல் படித்து சித்தியடைந்தவள்... வெளிவாரியாகக் கற்று பீ.ஏ. பரீட்சையும் எழுதிவிட்டாள்... தொழிலுக்காக முயற்சி செய்து கொண்டிருப்பவள்... பேரழகி என்று கூறமுடியாவிட்டாலும் சாதாரண அடக்கமாக அழகு... எளிமையானவள் ....

பஸீனாவுக்கும் அதே ஊரில வசிக்கும் வசீமுக்கும் ஒரு மென்மையான காதல்.... அதாவது மானசீகமாக ஒருவரை ஒருவர் விரும்பும் நிலை... பஸீனாவுக்கு திருமணப்பேச்சுவார்த்தைகள் தொடங்கும்போது தனதுள்ளத்தைத் தாய்க்குப் பஸீனா வெளிப்படுத்த, ஒரு புரோக்கரை அனுப்பி அவளது பெற்றோர் இந்தத் திருமணத்தை நடத்த முயன்றனர்.....

பஸீனா விரும்பிய பையன் நல்ல பையன். பஸீனா அளவு படிக்கா விட்டாலும் ஒழுக்கமாக..... நேர்மையாக உழைக்கக்கூடியவன். அவனது வாப்பாவின் பலசரக்குக் கடையைத்தான் நடத்திக் கொண்டிருக்கின்றான்.

பிள்ளைகளின் விருப்பங்கள் நியாயமானதாக இருந்தால் சம்பிரதாயபூர்வமாக அதை மறுக்கத்தேவையில்லை என்பதே தாஹிரின் கொள்கை.
வசீமின் பெற்றோரும் பஸீனாவை தங்கள் மருமகளாக்க விருப்பம் தெரிவித்தனர்.

தாஹிரின் குடும்பத்துக்குப் பெரிய நிம்மதி.

சம்பிரதாய பூர்வமான பெண்பார்க்கும் படலம்..... இரு குடும்பங்களும் ஒரே ஊரில் வசித்ததால் குடும்பங்களைப் பற்றித் தேடிப்பார்க்கும் பிரச்சினை இருக்கவில்லை.

இந்தநிலையில் தான் பிரச்சினையே வந்து பயமுறுத்தியது.
வசீமின் தாயும் தந்தையும் வந்தனர்.
வழமையான உபசாரங்கள் கலகலத்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் வருங்கால மாமா மாமியை அன்போடு உபசரித்தாள் பஸீனா.

``தாஹிர் மச்சான் கலியாணத்துக்கு முன்னால சில விஷயங்களப் பேசிக்கொள்ளனும் இல்லையா....''

வஸீமின் தந்தை உறவு சொல்லி தாஹிரை விளித்து ஏதோ பேசப் பீடிகை போட்டார்.

வஸீமின் தாயும் உடனிருந்து சொன்னார்.

``இல்ல நானா....சில விஷயங்களை ஒங்களோட பேசிட்டுப் போவத்தான் வந்தம்.....''

மனைவி ஆரம்பித்து முன்னுரை எழுதியதை கணவர்-வஸீமின் தந்தை தொடர்ந்தார்.

``சொல்லுங்க....'' தாஹிர் சொன்னபோது கணவனும் மனைவியுமாக ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடியே சில கணங்களைக் கழித்தபின் வஸீமின் தாயே சொன்னார்.

``இல்ல... என்னதான் பஸீனாவும் வஸீமும் ஒருத்தரை ஒருத்தர் விரும்பினாலும் குடுக்கல் வாங்கல் என்டு சில விஷயங்களை பெரியவங்க நாங்க பேசிக்கிறது நல்லது தானே.....''

தாஹிரின் உள்ளத்தில் ஏதோ சுருக்கென்று தைத்தது. சமாளித்துக் கொண்டு சொன்னார்.

``நெஜமாகவே....நாங்க பேசிக்கொள்ளத்தான் வேணும்... இந்தக் கலியாணத்தில புரோக்கர் இல்ல.....நாங்க நாங்கதான் கொற நெறகள பேசிக் கொள்ளனும்... சொல்லுங்க......''

தாஹிரின் பேச்சு அவர்களுக்குத் தெம்பூட்டியது.

``இல்ல... நாங்க எங்கட மகள கண்டிக்கு முடிச்சிக் குடுத்திரிக்கிறோம் இல்லையா... அந்தமகள் ஒரு டீச்சர்....அந்தப் புள்ளைக்கே நாங்க ரொக்க மா ரெண்டு லட்சமும் நகைநட்டும் காணித்துண்டொண்டும் குடுத்திரிக்கோம்......''

தாஹிருக்கும் மனைவிக்கும் இவர்களின் பேச்சு கொஞ்சமாகப் புரிய ஆரம்பித்தது.

இப்போது வஸீமின் தாயார் பேசினார்.

``எங்கட பெரிய மகன், ரெண்டாவது இருவருக்குமே போதுமான அளவு பொன் ஊடுகள்ல தந்தாங்க... வஸீமுக்கும் நாங்க என்னமாவது எடுக்காம கலியாணம் செய்தா அவங்கள்ளாம் ஏதாவது நெனப்பாங்க இல்லையா?''



தாஹிர் கேட்டார்.

``இப்ப என்ன முடிவுக்கு நீங்க வந்திரிக்கீங்க... மனசத் தொறந்து சொல்லுங்க... வெளிப்படையாவே கேளுங்க.....''

``ஒண்டும் பெரிசா இல்ல.....எங்கட மகள்ட மாமா சொல்றார்.... எங்கட மகளுக்கு நாங்க கொடுத்தது போலவே ஒங்கட மகளுக்கும் குடுக்கட்டாம்... அவ்வளவு தான்.....''

ஹீரோஷீமாவிலே அமெரிக்கா போட்ட அணுகுண்டு இப்போது தாஹிரின் வீட்டிற்குள் வெடித்தது. இருந்தாலும் ஒருவரும் அதிர்ச்சியை வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

``நாங்கள் இதுபத்தி யோசிச்சி....வந்து சொல்றோம்'' என்ற பிரியாவிடையோடு அவர்களை அனுப்பி வைத்தார்கள்.

பஸீனா,தாஹிர், ரஸீனா கூடிப்பேசினார்கள்... மகளின் மனம் வேதனைப்படுமே என்ற வேதனை தாஹிருக்கும் அவரது மனைவி ரஸீனாவுக்கும்.

``வாப்பா....நீங்க நெனைக்கிறத மனசுவிட்டு சொல்லுங்க வாப்பா....'' தெளிவான குரலில பஸீனா பேசினாள்.

``பூமகளே...எனக்கு என்ன செய்யிறதென்டே தெரியல்லம்மா'' உண்மையான ஒரு தந்தையின் ஆதங்கமாய் இந்த வார்த்தைகள் வெளி வந்தன.

``மக....பஸீனா... என்னம்மா செய்யலாம்... உம்மம்மா எனக்குத் தந்த காணித்துண்டு ஹேநதெனியாவில இரிக்கே.... அத விப்பமா என்று நான் யோசிக்கிறேன்...'' ரஸீனா கூறினாள்.

``உம்மா....ஒங்களுக்கு என்ன புடிச்சிரிக்கி..... பயித்தியமா.... காணிய விக்கிறதா.... சே....சே... அதெல்லாம் ஒண்டும் வாணாம்....'' பஸீனா உறுதியாய்க் கூறினாள்

``அப்ப நாங்க என்னம்மா செய்யிறது....?''

``வாப்பா..... நான் ஒண்டு சொன்னா என்னோட கோவிக்க மாட்டீங்களே...?''

``என்ன பூவே...இது ....நீங்க சொல்லுங்க'' வழமையாகவே அவர் தன் மகளை பூவே என்று தான் அழைப்பதுண்டு.

``வாப்பா... வஸீமுக்கு வேற எடத்துல பார்க்கச் சொல்லுங்க..... எனக்கு அவங்கட ஊட்டு ஆக்கள புடிக்கல்ல....''

``பஸீனா....'' தாயார் பதறிவிட்டார்.

``நெசமாத்தான் செல்றேன் வாப்பா இந்த சீதனத்தை அவங்க எங்ககிட்ட கேட்டிருக்கவே கூடாது... அதுவும்....கலியாணத்துக்கு புரியம் என்று சொல்லிட்டு... எங்கட வீட்டில வந்து நல்லா திண்டு போட்டு..... அவங்கட வீட்டிற்கும் எங்கடவங்கள கூப்பிட்டு பேச்செல்லாம் முடிச்சிட்டு இப்ப வந்து சீதனம் கேக்குறாங்களே இவங்கட குடும்பத்த எனக்குப் பிடிக்கல்ல வாப்பா....''

``மக.... யோசிச்சிப் பாருமம்மா..... இந்தக் கலியாணம் பேசி முடிச்சிருக்கிறது ஊரில மிச்சம் பேருக்குத் தெரியும்.....இப்ப நிண்டு போன நல்லா இரிக்குமா......? ரஸீனா அழவே தொடங்கிவிட்டாள்.

``உம்மா.....உம்மா.... ஏன்மா அழுவுறீங்க....நான் சொல்லறத கொஞ்சம் கேளுங்க உம்மா....'' தாயின் கழுத்தைக் கட்டிப்பிடித்து, தனது முந்தானையால் அவளது கண்ணீரைத் துடைத்துவிட்டாள் பஸீனா.

``உம்மா.....வாப்பா....நான் இப்படிப் பேசுறதால என்னைத் தவறா நெனைக்க மாட்டீங்களே.....''

``இல்லம்மா....நீங்க சொல்லுங்க....''

தாஹிர் தெளிவாகச் சொன்னார்.

``வாப்பா....ஊரில பலபேருக்கும் எங்கட கலியாண விஷயம் தெரிஞ்ச பிறகு வஸீம் ஊட்டுக்காரங்க சீதனப் பிரச்சினையை போடுற காரணமே நாங்க ஊர் மனுஷர்ட கதைகளுக்குப் பயந்து எப்படியாவது சீதனத்தைத் தேடிக் குடுத்துருவோம் என்பதுதான்....''

``அது நெஷந்தான்'' ரஸீனாவே ஆமோதித்தாள்

``இப்ப என்னம்மா... ஒரு கலியாணம் பேசினோம் சீதனத்தால இது நிண்டு போச்சி... இவ்வளவு தானே.....இதுல நாங்க இல்லம்மா.... அவங்க தான் வெட்கப்படனும்.....'' மிகமிகத் தெளிவாகவும் உறுதியாகவும் பஸீனா பேசினாள்.

``அப்படி இல்லம்மா..... நாங்க ஒங்களுக்கு வேற எடத்துல பேசப்போனா.... இதையெல்லாம் இழுத்து கொற பார்ப்பாங்களே....''

``உம்மா...உம்மா...ஏனும்மா.... வஸீமுக்குக் கலியாணம் பேசத் தொடங்கினாலும் ``இவனுகள் முந்தியும்



ஒரு கலியாணம் பேசி சீதனம்இல்ல என்டு அத முறிச்சிட்டானுக'' என்டு பேசமாட்டாங்களா....?''

``அதில்ல பூவே.... வஸீமிட தாய் தகப்பன் அவங்களாகவே கேட்டிருந்தாகூட பரவாயில்ல... அவங்கட மகள்ட மாமா கேக்கச் சொன்னாருன்டு கேக்குறாங்களே.... இது கேவலமா இல்லையா?''தாஹிர் தனது மனக்கருத்தை வெளிப்படுத்தினார்.

``வாப்பா, இத நானும் யோசிச்சேன். வாப்பா...தங்கட மகள்ட மாமா கேக்கச் சொன்னதா இவங்க சொல்றதில நியாயமே இல்ல வாப்பா.....'' பஸீனா உறுதியாகச் சொன்னாள்.

மாப்பிள்ளை வீட்டிற்கு என்ன பதிலைச் சொல்லி அனுப்புவது?

இந்தக் குழப்பத்தில் குழம்பிய தாஹிரால் நித்திரை கொள்ளவே முடியவில்லை.

திடீரென ஹோல் மின்விளக்கு எரிந்தது. பஸீனாதான் ஸ்விட்சை போட்டிருந்தாள்.

``வாப்பா....உங்கட பெருமூச்சு சத்தம் கேட்டுத்தான் வந்தேன்... உங்கள அறியாமலேயே நீங்க``யா அல்லாஹ்வே``என்று பல தடவை சொல்லிட்டீங்க...அதுதான் நான் எழும்பி வந்தேன்......''

தாஹிரின் நாற்காலிக்குப் பக்கத்தில் தரையில் அமர்ந்து கொண்டாள் பஸீனா.

``ஏன்மா நீங்களும் தூங்கல்லயா?''

அவளின் தலையைத் தடவியவராய்க் கேட்டார் தாஹிர்.

``இல்ல வாப்பா.....நேத்து ராத்திரி எனக்கு வஸீம் ``கோல் பண்ணி ஒரு விஷயம் கேட்டாரு....''

``என்னம்மா....''

``தார நகைகளை நல்லா உறுதியா...பார்வையா....செய்யச் சொல்லச் சொன்னாரு... அவருட தாத்தா தங்கச்சிகள் மதினிகள் போட்டிருக்கிற நகைகளை விட கூடுதலா... நல்ல இரிக்கனுமாம்.....எப்படியும் அம்பது பவுனுக்குக் கொறையாம இருந்தா தானாம் நல்லா இரிக்கும்''.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

``மக....'' தாஹிர் பேச முடியாமல் திணறினார்.

``வாப்பா பேசாமப்போய் படுத்துத் தூங்குங்க வாப்பா இவங்கல்லாம் ஆம்புளைகளே இல்ல வாப்பா..... கொள்ளைக்காரங்க......''

``இப்ப நாங்க என்னம்மா செய்வம்? உங்கட உம்மா இதெல்லாம 'கேட்டாங்கன்னா ரொம்ப கவலப்படுவாங்க பாவம்மா...உம்மா மனசு ரொம்ப கஷ்டப்படும்....''

``வாப்பா.....அதெல்லாம் சரியாகிவிடும்.... மொதல்ல நீங்க கவலைப்படாதீங்க.... ஒவ்வொருத்தரையும் அறிஞ்சி கொள்ள ஒவ்வொரு சந்தர்ப்பத்த அல்லாஹ் தர்ரான் வாப்பா''

``மக....'' தாஹிரின் தொண்டை அடைத்தது.

``வாப்பா....கலியாணம் நடக்க முந்தியே அவங்கட குணம் தெரிஞ்சது எவ்வளவோ நல்லதாப் போயிரிச்சி....இல்லாம....பின்னால தெரிய வந்தா நாங்க எவ்வளவு கஷ்டப்படனும்.. அல்லாஹ்வுக்கு நன்றி சொல்லனும் வாப்பா.....''

பஸீனா பேசுவதைக் ' கேட்கக் கேட்க தாஹிருக்கு வியப்பு!

'இந்தச் சின்ன வயசில இப்படி யோசிக்கிறாளே' என்ற வியப்பு.

``ஆமா...மக....இப்ப எனக்கு கவல இல்ல... இனிமே இதுக்காக நான் கவலப்படப்போறதுமில்ல.... அந்த ரஹ்மான் வழிகாட்டாமலா போவான்?''

அவரின் குரலில் தெளிவு தெரிந்தது.

ஓ.....வழிகாட்டுவதும், வாழ்க்கையை அமைத்துத் தருவதும் இறைவன் தான் என்று நினைக்கும் போது நெஞ்சுக்குள் எத்தனை இதம்? எத்தனை நிம்மதி?



# ஒரு மகள் சீதனம் கேட்கின்றாள்.....

தன் அறையில் நித்திரையின்றி புரண்டு கொண்டிருந்தாள் ஸனீரா.

``இன்டைக்கு ஸ்கூலுக்குப் போகமுன் எப்படியாவது உம்மாகிட்டயாவது இந்த விஷயத்தைச் சொல்லிவிடணும்..... இல்லாட்டா பெரிய பிரச்சினையா போயிரும்.....''

தீர்மானித்துக்கொண்டாள்.

ஸனீரா இப்படித் தீர்மானித்தது இது எத்தனையாவது தடவை?

அவளுக்கே தெரியவில்லை.

எத்தனைதான் முயற்சித்தாலும் உம்மா வாப்பாட முகத்துக்கு நேரே இதைச் சொல்லத்தான் முடியவில்லை.

``ம்....இனியும் சுணங்கினால் பிரச்சினைதான்...இன்னும் இரண்டொரு நாட்களில் ஜவ்பர வீட்டிற்கு`` பேச்சு முடிக்க`` போவாங்க.... அதுக்குப் பொறகு ஒண்ணும் செய்ய ஏலாது.....''

ஸனீராவின் மனம் தீவிரப்பட்டது.

ஜவ்பர் வீட்டார் வந்து, சம்பிரதாயமாகப் பெண்பார்த்துச் சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்து ஊர்தான்
சாதாரண நடுத்தர குடும்பம்....
கண்டியில் பிரபல்யமான ``கார்கிள்ஸ்'' நிறுவனத்தில் நல்ல பதவியில் இருக்கின்றான் ஜவ்பர். குடும்பத்தில் கடைசிப் பையன்...

ஸனீராவின் குடும்பத்தினருக்கும் பூரண திருப்திதான்.

இக்காலத்தில் பெண்பார்க்க வந்து பேரம் பேசுபவர்களைப் போல அவர்களின் பரம்பரைக் குறைபாடுகளை சீதனத்தால் நிரப்பிக் கொள்வதற்காக பட்டியல் போட்டுக் கேட்கவில்லை.

பெரிய நிம்மதி ஸனீராவின் பெற்றோருக்கு. நிம்மதி மட்டுமா? பெரிய ஆச்சர்யமும்தான்.

ஆங்கில அட்சரங்கள் கூடசரிவர தெரியாத மாப்பிள்ளைக்கு ஆங்கிலத்தில் சரளமாகப் பேசும் பெண்ணைத் தேடுவதும்.

இருப்பதற்கு ஒரு குடிசை கூட இல்லாதவர்கள். ``பெண்வீடு நல்லாயில்லை'' என்று விமர்சிப்பதும்.

`ஒன்றுமே சீதனம் வேண்டாம்.....கொழும்பில அல்லாட்டி கண்டியில ஒரே ஒரு வீடு தந்தா போதும்'' என்று கேட்பதும்......

``காசு பணம், வீடு வாசல் வேண்டாம்...பெண்ணுக்கு ஒரு எழுபத்தைஞ்சு பவுண் நகைபோடுங்க.... அவ்வளவுதான்'' என்று சொல்வதும்....

``மாப்பிள்ளைக்கு எல்லாம் இரிக்கி...புதிய மொடல்ல ஒரு கார்மட்டும் வாங்கிக் கொடுத்திடுங்க'' என்று விண்ணப்பிப்பதும்....

சர்வசாதாரணமாகிவிட்ட இந்தக் காலத்தில் ஜவ்பரின் வீட்டார் ஜவ்பருக்காக பேரம் பேசவில்லை என்றால் இது அதிசயம் தான்.

ஆனால்.....

ஸனீராவின் மன ஓட்டமே வேறாக இருக்கின்றதே...

பக்கத்து அறையில் சனீராவின் தாத்தாவின் மகன் யாஸீர் அழும் சத்தம் கேட்கிறது....

``ஓ.......தாத்தாவே.............நீ படும் அவஸ்தையை என்னால் பட முடியாது..........'' ஸனீராவின் மனம் ஒலமிட்டது.

முனீரா.........



ஸனீராவின் மூத்த சகோதரி......

அழகு, அடக்கம், ஒழுக்கம் இவையெல்லாம் அவளுடன் பிறந்தவைகள்.

சிறந்த சாதாரண தர பெறுபேறுகளைப் பெற்றவள் உயர்தரத்தில் கணிதத்தைத் தேர்ந்தெடுத்து......... போதிய வழிகாட்டல்கள், ஆசிரியர்கள் இல்லாமையால் சித்திபெறாமல் கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்துக் கொண்டவள்.

தேடி வந்த சம்பந்தமாய் காதிர் வீட்டார் பெண்கேட்டு வந்தனர்.

கல்யாணம் சீதனமின்றியே முடிந்தபோது முனீராவின் முழுக்குடும்பமுமே மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியது.

அந்த மகிழ்ச்சி நீண்டநாட்கள் நீடிக்கவில்லையே......

காதிரின் குடும்பத்தார் சுயரூபத்தைக் காட்டத் தொடங்கியபோது முனீராவின் கருவிலே யாஸிரும் வளரத் தொடங்கியாகிவிட்டது.

தொட்டதற்கெல்லாம்.

``பெரிய சீதனம் செளத்தியோட வந்துட்டாங்களா.......
வெறுங்கையை வீசிக்கிட்டு வந்தவங்க தானே......... இப்ப பெரிய சுகம் கேக்குதோ என்ற வசைகள்.......

காதிரின் சகோதரிகள், தாய ஆகியோருடன் எங்காவது புறப்பட்டால், அவர்கள் நகைகளை அள்ளிக் குவித்து அணிந்து கொண்டு.

``சே....வெளியே போற போது போட்டுக்கிட்டுப் போக நாலு நல்ல நகைகளையாவது கொடுக்கிறதுக்கு உம்மா வாப்பாவுக்கு தெரிய வாணாமா?'' என்ற குத்தல்கதைகள்.....
அவள் மசக்கையால் சிறிது உட்கார்ந்தால்.....

``மகாராணிக்கு ``ரெஸ்ட்'' கேக்குதோ.... ஏன்...வாப்பாகிட்ட சொன்னாதான் வரிசையா ஒன்றுக்கு மூனு நாலு வேலைக்காரிகள அனுப்பிடுவாங்களே என்ற நெருப்புச் சூடுகள்....

மெதுமெதுவாய் அந்தப் பெரிய குடும்பத்தின் அத்தனை வேலைகளும் அவளது தலையின் மேல் சுமத்தப்பட்டு.....

தனது நிலை தெரிந்தால் பெற்றவர்கள் கவலைப்படுவார்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று முனீரா எல்லாவற்றையும் தனக்குள்ளாகவே போட்டு புதைத்துக் கொண்டாள்.

முனீராவின் வீட்டாரை காதிரின் வீட்டிற்கு வந்தபோதெல்லாம் அவர்கள் வரவேற்று உபசரித்தபோது முனீரா இவர்களின் நடிப்புத் திறன் கண்டு வியந்து போவாள்.

ஓரிரு சந்தர்ப்பங்களே முனீராவுக்கு அவளது வீட்டிற்குப்போக அனுமதிகிடைத்தது. அதுவும் காதிர் வீட்டார் யாராவது மெய்ப்பாதுகாவலராய் அவளுடனேயே செல்வார்கள். எப்படியோ முனீராவின் நிலையை அவளின் வீட்டார் அறிந்து கொள்ளும் சந்தர்ப்பம் முற்றாக தவிர்க்கப்பட்டது.

ஆனால்-அந்த பொறுமைமிக்க அபலைக்கு திடீரென ஏற்பட்ட மன அழுத்தத்தின் காரணமாக அவள் சுயநினைவை இழந்து விரக்தியுடன் நடந்து கொள்ள ஆரம்பித்ததும்...பல வைத்தியர்களும் மனநல மருத்துவரை அணுகச் சொன்னதும்........காதிரின் வீட்டாரின் கொடுமைகள் அம்பலமாகின.

எல்லாத்துயரங்களையும் மனதுக்குள் போட்டு குமைந்த முனீரா முழுமையான மனநோயாளி ஆகாமல் காப்பாற்றப்பட்டாள். வைத்தியரின் சிறந்த அணுகுமுறை காதிரின் வீட்டாரால் அவள் அனுபவித்த கஷ்டங்கள் அனைத்தையும் அறிய வைத்தன. எல்லாவற்றிற்கும் மேலாக காதிர்கூட ஒரு சிறிய அனுதாபத்தையேனும் அவள் மீது காட்டாதது அவளை மிகவும் பாதித்திருந்தது.

கடைசி.........கடைசியாக முனீரா முடிவெடுத்தாள் - காதிர் குடும்பத்தில் இனிமேல் காலடி எடுத்து வைப்பதில்லை - என்று.

சாதுமிரண்டால் காடு கொள்ளாதல்லவா? முனீரா ``தலாக்`` பெற்றுக் கொண்டாள். இப்போது யாஸிருக்கு வயது இரண்டைத் தாண்டி விட்டது.....

சிந்தனையைக் கலைக்குமாறு ஸுபஹுத் தொழுகைக்கான அதான் கேட்கத் தொடங்கியது.

ஸனீரா எழுந்து காலைக்கடன்களை முடித்து, ஸுபஹுத் தொழுகையை முடித்து, ஒரு யாஸீன் ஓதினாள். பின்னர் திடமான முடிவோடு தனது எண்ணத்தை ஒரு தாளில் எழுதத் தொடங்கினாள்.

நேரடியாகச் சொல்ல முடியாதவற்றை எழுத்து மூலம் தெரிவிப்பதோ, தொலைபேசி மூலம் சொல்லுவதோ இலகுவானதென்பதை அவள் நன்கறிந்தவள்.



இந்தத் திருமணம் தாமதித்தாலோ அல்லது நின்று போனாலோஅவள் கவலைப்படப்போவதில்லை. என்பது அவள் தன் கருத்துக்களை எழுதும் வேகத்திலும், அழுத்தத்திலும் தெரிந்தது.

நேரம் நகர்ந்தது.

ஸனீரா பாடசாலைக்குப் புறப்பட்டு விட்டாள்.

``உம்மா....இந்தாங்க....இத வாப்பாகிட்டக் கொடுங்க`` என்றுதான் எழுதியதை அழகாக உறையிலிட்டுக் கொடுத்தாள்.

``என்னது......வாப்பாவுக்கு எதுக்கு`` தாய் தடுமாறினாள்.

``ஒண்ணும் பயப்படாதீங்க உம்மா. வாப்பா வாசிச்ச பின்னாலே எல்லாம் சொல்லுவாரு... எனக்கு பஸ்ஸுக்கு நேரமாவுது....நான் போயிட்டு வர்ரேன்....``

ஸனீரா புறப்பட்டுவிட்டாள்.

``அல்லாட காவல் மகள்... கவனமாகப் போயிட்டு வாங்க....`` தாயின் வாய் பழக்க தோசத்தால் இப்படிச் சொன்னாலும் மனம் ஆயிரமாயிரம் எண்ணங்களை எண்ணிக் கலங்கியது.

கடைக்குச் சென்ற கணவர் வரும்வரை பொறுத்திருப்பது கஷ்டமாக இருந்தது.

வந்துவிட்டார். நடுங்கும் கரத்துடன் ஸனீராவின் கடிதத்தைக் கொடுத்தாள்.

என்றுமில்லாதவாறு வீட்டிற்குள்ளேயே கடிதப் பரிமாற்றமா?

அவருந்தான் ஆடிப்போய்விட்டார்.

பிரித்தார் - படிக்கத் தொடங்கினார்.

படிக்கும் போது அவரது முகத்தையே ஸனீராவின் தாய் பார்த்துக் கொண்டிருந்தாள்.

கடிதத்தைப் படித்து முடித்தவர் அதைக் கையில் வைத்துக் கொண்டே அறைக்குள் அங்குமிங்குமாய் நடக்க ஆரம்பித்துவிட்டார்.

``சொல்லிட்டு யோசிங்களேன்.....என்ன தான் புள்ள எழுதி இரிக்கிறா...எனக்குப் பயமா இரிக்கி....``

``இந்தாங்க... நீங்களே படிச்சிப் பாருங்க.....``

படித்தாள்.

அவளது முகத்திலும் சிந்தனை ரேகைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

``மகள் முனீராவுக்கு நடந்ததுகள் ஸனீராவுக்கும் நடந்துடக் கூடாது....... ஸனீரா சொல்றதும் ஒருபக்கத்துல சரிதான்....``

வாப்பா தான் சொன்னார்.

``அப்ப....ஸனீரா சொல்றாப்போல சீதனத்த மசர்தத பிறகுதானா கலியாணம்? ஜவ்பர் வீட்டுல சீதனம் கேக்காத போது நாங்களே இந்தக் கரச்சல எடுத்துத் தலையில போட்டுக் கொள்றதா?``

``முனீராட உம்மா.....அப்படியில்ல.....ஸனீரா மக சொல்றதும் உண்மைதானே...... அவ சொல்றா ``வாப்பா....நான் சீதனத்தோட தான் கலியாணம் செய்வேன்....எனக்கு சீதனம் தாங்க என்டு சொல்றாவே....``

உள்ளே இருந்து வந்த முனீராவும் கதையில் கலந்து கொண்டாள். கடிதத்தை அவளும் வாசித்தாள்.

``வாப்பா.....தங்கச்சி சொல்றதும் நியாயம் தான்...சீதனம் இல்லாமல் கலியாணம் செய்து நான் பட்ட பாடு போதாதா? இன்னும் அந்த வலிகள் எனக்கு இரிக்கி வாப்பா..... சீதனம் கேட்டு எடுக்குறாங்களே...அவங்க ஒருவகையில நல்லவங்க வாப்பா..... அந்த சீதனத்துக்காகவாவது மனைவியை ஒரு மனுஷி ஜீவியாக மதித்து நடப்பாங்க....

முனீராவின் குரல் அடைத்து கண்கள் கலங்கின..தாய் அணைத்து ஆறுதல் அளித்தாள்.

``சே.....சே... அதையெல்லாம் நீங்க இப்ப நெனைக்கக்கூடாது மக... தங்கச்சி சொல்றது எனக்கும் சரியெண்டுதான் படுது...ஆனா இப்போ சீதனத்துக்கு என்ன செய்யலாம்.?`` தந்தை கதையைத் திசைதிருப்பினார்.

``வாப்பா.... நீங்க மாப்பிள்ளை வீட்டிற்கு பேச்சு முடிக்கப் போகும் போது கொஞ்சம் காலம் கேளுங்க... அதுக்கெடயில நாங்க என்னமாவது செய்து ஸனீராவுக்கு நல்ல நகைநட்டு, உடுபுடவைகள் வாங்கி கொஞ்சம் காசும் தேடிடலாம்.....`` முனீரா சகோதர வாஞ்சையோடு சொல்லத் தொடங்கினாள்.

``முனீரா...தங்கச்சியிட காசும் கொஞ்சம் இரிக்கும்....அவவுட சம்பளத்தில சேர்ந்தது வைச்சிரிக்கிறாதானே...``

``இரிக்கும் வாப்பா...இரிக்கும்..ஏன்ட வாழ்க்கை வீணான பொறகு அவ மிச்சம் மாறிட்டா... காச வீணாக்காம சேர்த்திரிக்கிறா...நல்லதொகை இரிக்கும்..நகை நட்டுகளும் கொஞ்சம் இரிக்கி...``

மூவருமாய் சேர்ந்து கணக்குப் பார்க்கத் தொடங்கிவிட்டார்கள்.



ஓ.....மகளே கேட்டு வாங்கும் சீதனத்திலும் நியாயம் இருக்கத்தான் செய்கிறதோ?

``சீதனமில்லாமல் இனிமேல் எங்களைத் திருமணம் செய்து கொடுக்காதீர்கள்`` என்று பெண்கள் ஆர்ப்பாட்டம் செய்ய ஆரம்பிக்கும் ஒரு காலமும் வரத்தான் போகிறதோ?

காலம்தான் பதில் சொல்ல வேண்டும்...இதோ.... ஸனீராவின் கடிதத்தின் சில வரிகள்....

``வாப்பா.முதலில் என்னை மன்னித்து விடுங்கள். எனக்கு நீங்கள் சீதனம் தரத்தான் வேண்டும். சீதனத்தோடுதான் நான் மாப்பிள்ளை வீட்டிற்குப் போக வேண்டும்.

இப்போது சீதனம் வேண்டாம் என்று சொல்லிவிட்டு, கல்யாணத்தின் பின் என்னை அவர்கள் சித்திரவதை செய்யத் தொடங்கினால் முனீரா தாத்தாவைப் போல் என்னால் அவற்றைத் தாங்கிக் கொள்ள முடியாது.

முல்லேரியாவுக்கோ, அங்கொடைக்கோ போகாமல் அல்லாஹ் முனீரா தாத்தாவைக் காப்பாற்றிவிட்டான். அவளின் அழகு, அடக்கம், ஒழுக்கம் எல்லாம் மாப்பிள்ளை வீட்டாரின் கண்களில் படாமலேயே போய்விட்டதுதானே வாப்பா? அவர்களுடைய சுயரூபத்தை நாங்கள் அறியும் போது என் அருமைச் சகோதரி மனநோயாளியாகிவிட்டாளே.. என்று எந்தக் காரணத்தால் இப்படி வாழ்க்கையைத் தொலைத்தவளாய் இவள் இருக்கின்றாள்? இவள் செய்த பாவம் என்ன? இவள் செய்த பிழை என்ன? சீதனம் கொடுக்காதது தானே.....

வாப்பா...அவன் காதிர் கொழுத்த சீதனத்தோட திரும்பவும் திருமணம் செய்து அட்டகாசமாக வாழ என் சகோதரி வாழ்விழந்து நிற்கிறாளே.... இவவுக்கு வேறொரு வாழ்க்கையை அமைப்பது லேசா! சொல்லுங்கள் வாப்பா.

நான் திட்டவட்டமாகத் தீர்மானித்து விட்டேன். நான் சீதனத்தோடதான் கல்யாணம் செய்வேன்`

ஓ...சீதனமே உனக்கு எத்தனை முகங்கள்?

*(யாவும் கற்பனையே)*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணுக்குள் மாணிக்கங்கள்.......

சில சமயங்களில் சில விடயங்களை நம்மாலேயே நம்ப முடிவதில்லை. உண்மையா, பொய்யா, கனவா, நனவா என்று முடிவெடுக்க முடியாத நிலை ஏற்பட்டு விடுகிறது.

``நடக்கும் என்பார் நடக்காது``
நடக்கா தென்பார் நடந்துவிடும் - என்ற பழைய பாடல்வரிகளே என்னுள் ஒலிநாடாவாய் சுழலுகின்றது.

எனது காரை நான் செலுத்திக் கொண்டிருந்தாலும்.. மனம் காரைப் போல் முன்னோக்கிச் செல்லாமல் பின்னோக்கியே சென்று கொண்டிருந்தது....

``என்ன...வாப்பா...ஏன் பேசாமலேயே ஓட்டுறீங்க.....`` பின்ஸீட்டில் இருந்த சின்னமகள் ஸஹ்ரா கேட்டாள். அவளுக்கு எல்லோருமே கலகலப்பாய் இருக்க வேண்டும்.

``இல்லம்மா...சும்மா யோசிச்சிக்கிட்டுருந்தேன்... அதுதான்...`` சமாளிக்கப்பார்த்தேன். ஸஹ்ராவை சமாளிக்க முயன்றாலும் எனது சிந்தனையை என்னால் சமாளிக்கவே முடியவில்லையே..

இன்று லாஹிருக்குத் திருமணம். அதற்காகத்தான் போய்க் கொண்டிருக்கிறேன். என்னுடன் எனது முழுக்குடும்பமுமே பயணிக்கின் றது...



லாஹிர் நெருங்கிய உறவினன் அல்ல... ஆனாலும் நமது குடும்பமே செல்கிறோம்.....

இன்று எனது உறவினரும் - ஊரிலேயே வாழ்பவருமான சுபியான் ஹாஜியார் வீட்டிலும் திருமணம்...கண்டி ஹோட்டல் ரெஹான்ஸில் மாபெரும் ஏற்பாடுகளுடனான கல்யாணம்.... எங்கள் முழுக்கு டும்பத்துக்குமே அழைப்புண்டு..... அங்கு போக மனம் ஒப்பவில்லை.

சுபியான் ஹாஜியார் எனக்கு உறவு முறையில் மாமா.... அவரது மகன் சுக்ரிக்குத்தான் திருமணம்...சுக்ரி கொழும்பு பல்கலைக்கழக முகாமைத்துவ பட்டதாரி... அவர்களுடைய பிஸ்னஸைத்தான் பார்த்துக்கொண்டிருக்கின்றான்.....

எனது மாமா சுபியான் ஹாஜியார் மகனை ஏலம் போட்டவர்.... உண்மையைத்தான் சொல்றேன்... புரோக்கர்மாரிடம் அப்பட்டமாகவே சொன்னவர்... ``இங்க பாருங்க.... பத்துலச்சத்துக்கு மேல பணமும், ஒரு வாகனமும் கொழும்புல ஒரு வீடும் தர்ரவங்களா இல்லாம பார்க்காதீங்க... நகையும் ஆகக் கொறைஞ்சது ஐம்பது பவுணாவது வேணும்.``

ம்... இந்தக் கண்டிஷன்களைக் கேட்டு, கல்விகற்ற... பல்கலைக் கழக முஸ்லிம் மஜ்லிஸுக்கு தலைவனாக இருந்து..... சீதனத்தை உதைத்து விட்டே ஒழித்துக்கட்டுவோம் என்று வானதிர முழங்கி, மண்டபம் அதிர கரகோஷ அலைகளைப் பெற்று கம்பீரமாக மேடையில் நின்று பார்வையாளருக்கு நன்றிகூறி கையசைத்த சுக்ரி இப்போது வாப்பாவுக்கு அடங்கி நல்ல பிள்ளையாக, தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்ற பழமொழிக்கு எடுத்துக்காட்டாய் வாழ்கின்றான்....

சிரிப்பாய் இருக்கிறது.... அழுகையும் வருகிறது... ``சிரித்துக் கொண்டே அழுகிறேன்`` என்ற நிலை நிலைதான்.

``வாப்பா.... கார நிப்பாட்டுங்க... தாகமா இருக்கு ஏதாவது குடிப்போமே....`` ஸஹ்ராதான். இந்தக்குட்டிப்பெண்ணுக்கு ஏதாவது வயிற்றுக்குள் அனுப்பிக் கொண்டே இருக்க வேண்டும். அதுவும் பயணம் செய்யத் தொடங்கிவிட்டால் கேட்கவே வேண்டாம்......

காரை நிறுத்தினேன்... பிள்ளைகள் ஆளுக்கொரு பொருளாய் வாங்கிக் கொண்டனர்..... எனது பக்கத்தில் மௌனமாய் பயணித்துக் கொண்டிருந்த எனது மனைவிக்காக ஒரு இளநீரை எடுத்துக் கொண்டு போய் ஜன்னலால் நீட்டினேன்.

அவளுக்கு ஹோட்டேல் திருமணத்துக்குப் போகக் கிடைக்காத ஆதங்கம்... அதனால் என்னுடன் இரண்டு நாட்களாக ``ஊடல்``



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளநீரை வாங்கிக் குடித்தாள். இவளுக்கு இளநீரும், பசுப்பாலும் தான் பிரியமான பானங்கள்...``ஏய்.. என்ன.... இன்னமும் மொகத்துல சிரிப்பையே காணோம்...... ``ஒருவிரலால் கன்னத்தைத் தட்டினேன். என் மனைவி மஹ்மூதா முகத்தைத்திருப்பிக் கொண்டாலும் அந்த முகத்தில் திடீரென நாணச்சிவப்பேறியதை நான் அவதானிக்கத் தவறவில்லை.

மீண்டும் பயணம் தொடங்கியது.
சுக்ரியின் திருமணத்தோடு.......
லாஹீரின் திருமணத்தையும் ஒப்பிட மீண்டும் என்மனம் தொடங்கி விட்டது.
லாஹிர் தாயற்றவன்.
அவனது தந்தை மீண்டும் திருமணம் செய்து லாஹிருக்கு மேலும் மூன்று தம்பிகள்.....
லாஹிரின் கல்வி ஐந்தாம் வகுப்புக்கு மேலாகச் செல்ல வில்லை.....

அப்போது நான் கம்பளை உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் பணியாற்றியதால் அரசாங்க குடிமனையில் இருந்தேன். அந்த வீட்டிற்குச் சற்று தூரத்தில் தான் லாஹிரின் வீடு.....

சிறுவனான அவன் எங்கள் குடும்பத்தோடு ஐக்கியமாகிவிட்டான். அவனது நாளில் பெரும்பகுதி எங்கள் வீட்டிலேயே கழியும். ஒரு அந்நியனாக அல்லாமல் குடும்பத்தில் ஒருவனாகவே மாறினான்.

``ஸ்கூல் படிப்பு இல்லாவிட்டால். பரவாயில்லை.... ஏதாவது டிரைவிங் அல்லது வேறு கைத்தொழிலில் பயிற்சி பெறுமாறு நாங்கள் கூறுவோம்.

லாஹிரின் வாப்பா அன்றாடம் கூலி வேலைதான் செய்வார். சொந்தமாக ஒரு காணித்துண்டும் சிறிய வீடும் இருந்தது.... குடும்பநிலை காரணமாக அவரது இரண்டாம் மனைவி வெளிநாடு சென்றார்.... அப்படி அவர் சென்றதில் எங்களால் பிழை காணமுடிய வில்லை.....

ஏனைய பலரைப் போலல்லாமல் லாஹிரின் வாப்பா மனைவி வெளிநாடு சென்ற பின்னரும் தனது வேலையைச் செய்தார்... பிள்ளைகளையும் கவனித்துக் கொண்டார்.
இந்த நிலையில் தான் எனக்கு மாத்தளைக்கு மாற்றம் கிடைக்கப் போய்ச்சேர்ந்தோம்.



இடையில் இரண்டொருமுறை லாஹிர் வீடு தேடி வந்து போகத்தவறவில்லை.

காலத்தின் வேகத்தை யாரால் தான் நிறுத்த முடியும்.? காலம் இப்போதெல்லாம் அதிக வேகமாகச் செல்கிறது என்று பொதுவாகவே காலத்தின் மீது எல்லோரும் சுமத்தும் குற்றச்சாட்டு... ஆனால் உண்மைய லேயே நமக்கெல்லாம் வேலைகள் அதிகரித்துவிட்டன. என்பதுதான் உண்மை!

எங்களுக்கும் அப்படித்தான்.....
தொழில் மாற்றங்கள் குழந்தைகளின் கல்வி... குடும்பத்தில் ஏற்பட்ட பிறப்புக்களும் இறப்புக்களும்... இத்யாதி...இத்யாதி.... லாஹிரைப் பற்றிய உடனடித்தகவல்களை எங்களுக்கும் கிடைக்க விடாது தடுத்துவிட்டன.....

பத்து நாட்களுக்கு முன்னர்...
ஒரு மாலை நேரம்....
வீட்டில் எல்லோரும் ஓய்வாக இருந்து மனைவி செய்திருந்த சிற்றுண்டியைச் சுவைத்தவாறே தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண் டிருந்த போது......

சேர்....'' என்று குரல் கேட்டது
கேட்ட குரல்... ஆனால் லாஹிரை அடையாளங்காண முடியவில்லை

``சேர்.....என்னைத் தெரியல்லயா... நா லாஹிர்.....''

என்ற போது எழுந்து கட்டித்தழுவிக் கொண்டபோது... ஒரு தந்தையின் அன்புணர்வே எனக்குள் மேலிட்டது.

சிலகணங்கள் இருவருமே எங்களை மறந்தோம்.

``உட்காரப்பா.... எப்படிவீட்டைக் கண்டு பிடிச்சே... இவ்வளவு காலமும் எங்கே இருந்த...!

நான் கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனேன்..

``சேர்... திடீரென அபுதாபி போக எல்லாம் சரி வந்திச்சி... ரெண்டு நாளைக்குள்ள எல்லாமே செய்ய வேண்டி வந்திச்சி... டிரைவிங் பழகிக் கொள்ள நீங்க தான் சேர் உதவி செய்தீங்க... டிரைவிங்கிக்காகத்தான் வேல கெடைச்சிச்சு... உங்ககிட்ட சொல்ல மாத்தளைக்கு வந்தேன்... அப்பதான் நீங்க குருநாகலைக்கு மாறிப்போயிட்டதா சொன்னாங்க.. பெரிய ஏமாத்தத்தோட திரும்பினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருநாகலை வர எனக்கு நேரம் இரிக்கல்ல....``

நிறுத்தி என்னைப்பார்த்த லாஹிரின் கண்கள் கலங்கி இருந்தன.

``சரி...சரி... லாஹிர்...இப்போ எப்படி இருக்கிற... எப்போ வந்தே.....``

``வந்து பதினைஞ்சு நாள் தான்...பலர்கிட்ட கேட்டுக்கேட்டு நீங்க இப்போ கேகாலையில வேல செய்யிறதா கண்டுபிடிச்சு... ஒருமாதிரி இண்டைக்கு வந்துட்டேன்... எனக்கு சரியான சந்தோசமா இரிக்கி`` லாஹிரின் வார்த்தைகள் உண்மைதான் என்பதை அவனது முகமே காட்டியது.

நான் எனது பிள்ளைகளில் சிறியவர்களுக்கு லாஹிரை அறிமுகப் படுத்தி வைத்தேன்... எனது மனைவிக்கும் லாஹிரில் அலாதி பாசம்தான்.

``பாவம்...தாயில்லாத புள்ள....`` என்று வீட்டில் எதைச் செய்தாலும் அவனுக்கு அதில் கொஞ்சத்தை எடுத்து வைப்பாள் பெருநாளைக்கு ஏதாவது வாங்கிக் கொடுப்பாள்...பயணங்களின் போது கூட்டிச்செல்வாள்......

லாஹிரைக் கண்டதும் அவளும் மகிழ்ந்து போனாள்.

பல விடயங்கள்-

பலவருடங்களின் புதினங்கள்..மளமளவெனக் கதைக்கப்பட்டன.

``லாஹிர் வாப்பா எப்படி இரிக்கிறார்?`` எனது மனைவிதான் கேட்டாள்.

``வாப்பா நாலு வருஷங்களுக்கு முந்தியே மவுத்தாகிவிட்டாங்க....எனக்கும் மௌத்தாகி ஒரு கிழமைக்குப் பொறவு தான் தெரியும்...``

``அடடா....எங்களுக்கு தெரியாமலேயே போயிரிச்சே.....``

``என்ன வந்து மௌத்தானார் லாஹிர்?`` நான் கேட்டேன்.

``ஒண்டுமில்லயாம் சேர்... எந்தநாளும் போலவே இஷா தொழுதுவிட்டு வந்து சாப்பிட்டுப் படுத்தாராம். காலையில பாக்குறப்போ மௌத்தாகி இருந்தாராம்....``



லாஹிரின் தொண்டை அடைத்தது.

கதையை நான் வேறு பக்கம் திருப்பினேன். ``இப்போ என்ன செய்ற யோசனை லாஹிர்..திரும்ப எப்ப போறீங்க.?``

``சேர `` சிறிது வெட்கப்பட்டான்
``சொல்லப்பா...`` நான் தூண்டினேன்.
``எனக்குக் கலியாணம் இரிக்கு சேர்...``
``ஓ... ஹோ....இதுதானா வெட்கம்
``யாரு பொண்ணு... எங்க கலியாணம்?``

எனது மனைவிக்கும் உற்சாகம் தொற்றிக் கொண்டது.

``ஏன்ட கூட்டாளிட தங்கச்சிதான் பக்கத்து ஊடும்தான்....``

``நல்ல எடமா.... லாஹிர்?``
``சேர்... மிச்சம் ஏழையுமில்ல.....பெரிய பணக்காரங்களும் இல்ல.... புள்ளயும் பெரிய அழகில்ல... ஆனா நல்ல குடும்பம்... யாருகிட்டயுமே கெட்ட பழக்கவழக்கங்கள் இல்ல.....``

``ரொம்ப நல்லம் லாஹிர்.....ஆமா.....எவ்வளவு சீதனம் எடுக்குறீங்க....?``

என் மனைவிதான் கேட்டாள்.

``ஒண்டுமே எடுக்கல்ல... முந்தி ஒருநாள் சேர் எனக்கு சொன்னதை நான் நெனவு வச்சிரிக்கேன். ஒரு சதமும் சீதனம் எடுக்காம குணத்தைப் பார்த்துக் கலியாணம் செய்தா தான் வாழ்க்க நல்லா இரிக்கும் என்டு நீங்க சொன்னதை நான் மறக்கவே இல்லை சேர்....``

லாஹிரின் இரண்டு கைகளையும் நான் பற்றிப் பிடித்துக் கொண்டேன்.பட்டங்கள் பல வாங்கிய பெரியபடிப்புக்காரர்களிடம் இல்லாத உயர்ந்த பண்பை லாஹிரிடம் கண்டு நான் புல்லரித்துப் போனேன்.

``லாஹிர்...நீ பெரிய மனுஷனாயிட்ட.. எனக்குப் பெருமையா இரிக்கி.....``

``லாஹிர்... வர்ரபோது நகை எதுவும் கொண்டாந்தீங்களா?`` என் மனைவி கேட்டாள்.

``கலியாணத்தில சாச்சி போட ஒரு நெக்லஸ் மட்டும் கொண்டாந்தேன்.... வாப்பா முந்தியே சவடி செய்து வச்சிரிந்தார்...``



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு என்னவென்றே புரியவில்லை. லாஹிரே தொடர்ந்தான்.

``சேர்....எங்களுக்கு அகதிமலையில ஒரு சிறிய காணியும் வீடும் இருந்திச்சில்லையா....சாச்சி வெளிநாட்டுக்குப் போய் சம்பாரிச்ச பணத்தில வாப்பா வேற வீடொன்று வாங்கினார். அகதிமலையில இருந்த காணியையும் வீட்டையும் வித்த பணத்தில எனக்கும் தம்பிகளுக்குமாக சவடிகள் செய்து வச்சிரிந்தார். கலியாணம் முடிக்கிற நேரத்தில பொண்வீட்டில இருந்து சவடி கேட்க வேண்டாமென்று சொல்லியும் இருந்தாங்க``

ஓ.... இதென்ன? லாஹிரின் வாப்பாவுக்கும் இத்தகைய சிறப்பான சீர்திருத்த எண்ணங்களா?

இலட்சஇலட்சமாக சீதனங்களை வாங்கிய பின் சவடியையும் பெண்வீட்டில் இருந்தே கேட்டு எடுத்து சபையில் எல்லோர்முன்னும் பெண்ணுக்குத் தாலி கட்டுபவர்களைத்தான் பார்த்திருக்கின்றேன்... ஆனால் சாதாரண கூலி வேலை செய்த ஒரு மனிதருக்குள் இத்தனை பெரிய நல்ல எண்ணமா? யா அல்லாஹ்வே.... உலகில் இன்னமும் ஓரிரு நல்ல மனுஷங்களையாவது நீ வாழவைத்துக் கொண்டிருக்கின்றாயே.......

எனது மனைவியும் சற்று நேரம் அதிர்ச்சியடைந்து விட்டாளென்பதை அவளது முகமே காட்டியது.

``மாபெரும் சபைதனிலே ஒரு மாமனிதாய் நினைத்து மாலைகள் போட்டுப்பாராட்டவேண்டியவர் உன் வாப்பா`` என்று மானசீகமாக நான் வாழ்த்தினேன்.

``சேர்... குடும்பத்தோட நீங்க எல்லோரும் எங்கட கலியணத் துக்கு வந்திடனும்`` என்று கேட்டு விடைபெற்றான் லாஹிர்.

இந்தத் திருமணம் எனது வாழ்நாளிலேயே நான் போகும் மிகவும் மகிழ்ச்சியான திருமணம்.... அல்லாஹ்வின் நல்லருள் இந்தத் திருமணத்தால் நிச்சயமாக சொரியும் என்றும் நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்.

கடுகண்ணாவை ஏற்றம்....
ஸஹ்ரா சப்தமிட்டாள்.

``வாப்பா நிப்பாட்டுங்க.... நிப்பாட்டுங்க.... இங்க சோளம் அவிச்சி விப்பாங்க.... நல்லா இரிக்கும்``

ஓ.... இவளுக்கு நல்ல சுவையுணர்வு!



`சே.. வேணாந் தங்கச்சி....

றோட்டில விக்கிறதுகள் சரியில்ல....``மகன் நஸீர் தடுத்தான்.

``நீ சும்மா இரியப்பா..... ஒனக்கு வேணாட்டி தின்னாத... பாப்போமே..... இவருக்கு நோயே வராதா என்டு.... வாப்பா.... வாப்பா... நீங்க நிப்பாட்டுங்க.... வாப்பா.

காரை` நிறுத்தினேன்.

சிந்தனையும் நின்றது.

*(யாவும் கற்பனையே)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு துருவங்கள் -

யாஸீன் வீட்டாரிடம் இரண்டு வாரங்களில் - இரண்டே வாரங்களில் - புது உற்சாகம் எப்படித்தான் வந்து ஒட்டிக் கொண்டதோ? புரியவில்லை

எங்கும் எதிலும் புத்துணர்வு மகிழ்ச்சி..... வீட்டில் எல்லோரிடமும் புதிய சுறுசுறுப்பு.

யாஸீன்- அவரது மனைவி மைமூனா- மகன்மார், மூத்தமகள் பஸீனா - மற்றைய குழந்தைகள்- யாஸீன் தாயார்... என்று எல்லோருமே வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தனர்.

இருக்காதா பின்னே?

ஏழு-எட்டு வருடங்கள் முயற்சித்து இப்பொழுதுதான் பஸீனாவின் திருமணம் கைகூடி வந்திருக்கிறது.

எத்தனை இடங்கள்?

பெண்பார்க்க என்று எத்தனைபேர் வந்தனர்? எத்தனை செலவு? எத்தனை எதிர்பார்ப்புகளுடன் பஸீனா வந்தவர்கள் முன்னால் விலைப் பொருளாய் அமர்ந்திருப்பாள்? ஆனால்...அவர்களுக்கெல்லாம் பஸீனா விலைபோகாமலேயே போய்விட்டாள். ஏன்? ஏன்? ஏன்???

இன்று நாட்டில் எண்ணற்ற பெற்றோர்கள் இதே கேள்வியைத் தானே கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.



பெண்பார்க்கும் சாட்டில் கேக்கையும் வட்டிலாப்பத்தையும், வகைவகையான தீன்பண்டங்களையும் நாளுக்கொரு இடமாகப் பார்த்து இரசித்துச் சுவைப்பதில் சுவை கண்டு சுகித்துத் திரிகின்றார்களா?

இடத்துக்கிடம் சென்று பெண்பார்க்கும் போக்கில் இளம் பெண்களை உச்சி முதல் உள்ளங்கால் வரை பார்த்து கண்களால் மேய்ந்து அதில் சுகானுபவம் பெறுகிறார்களா?

யார்கண்டார்கள்?

பெண்பார்த்துச் சுற்றுலா வருபவர்கள் உண்மையைச் சொல்லவா போகின்றார்கள்?

எப்படியோ, பஸீனாவுக்கு இந்தத் திருமணம் சரிவந்து விட்டது. இதுவே போதும்.... எல்லோருக்குமே ஏகப்பட்ட திருப்தி. மனதிலே இருந்து - எழுந்த - திருப்திதான் - அப்படியே அவர்களின் உடம்பில் ஒட்டி-ஓடி சுறுசுறுப்பாக்கியுள்ளது.

பஸீனாவுக்கு பூவெலிகடையைச் சேர்ந்த கமாலைத்தான் பேசி முடிவாக்கி இருக்கின்றார்கள். சவூதியில் வேலை செய்கிறவன.

வேலையென்றால் சாதாரண கார்ச்சாரதி தான்.

குடும்பமும் நடுத்தரக் குடும்பம்தான். பெண் பார்க்க கமால் வரவில்லை. படத்தை எடுத்துக் கொண்டு போய் கமாலுக்கு அனுப்பி அபிப்பிராயம் சொல்வதாகப் போனார்கள்.

கிட்டத்தட்ட மூன்று வாரங்களின் பின் கமாலின் வாப்பாவே வந்து.

``மவனுக்குப் புரியம்... நாங்கதானே சொல்லிட்டுப் போனோமே... எஹட மவன் நாங்க சொல்றத தட்ட மாட்டாரென்டு.....``

அவர் சொல்லச் சொல்ல பஸீனாவின் வீட்டில் மகிழ்ச்சி மலர் ஒவ்வோர் இதழாய் விரியத் தொடங்கியது.

``கொடுக்கல் வாங்கல்`` பேச்சு முடிக்குமுன்பே கமாலும் மூன்று மாத விடுமுறையில் இலங்கை வந்து விட்டான்.

கமால் வந்தபின் மீண்டும் ஒருமுறை எல்லோரும் வநதார்கள். அன்று சிற்றுண்டிகள் வழமையை விட கமகமத்தன!

கமாலும் தனது திருப்தியைத் தெரிவித்தான்.

இடையில் ஹஜ்ஜுப் பெருநாள் வரவே கமால் வீட்டார் பஸீனாவுக்கு மிகவும் திருப்திகரமாக பெருநாள் உடுப்பு கொண்டு வந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று பஸீனாவின் வீட்டில் சிறிய விருந்தே நடந்து விட்டது.

பின்னர் இவர்களும் மாப்பிள்ளைக்கு பெருநாள் உடுப்பு கொண்டுபோய் விருந்து சாப்பிட்டனர். உடுநுவரை சமையல் அங்கு கலகலத்தது.

மிகவும் திருப்திகரமான உபசாரங்கள். திரும்பி வரும்போது பஸீனாவுக்கான உணவையும் கமாலின் தாயார் கட்டிக் கொடுக்கத் தவறவில்லை அதுமட்டுமா?

கோப்பி, மிளகு, கராம்பு, பத்துப் பதினைந்து நல்ல தேங்காய்கள், பழுத்த பலாப்பழம் என்று இவர்கள் சென்ற வாகனத்தில் போட்டுவிடக்கூடிய அவ்வளவு பொருட்களையும் பலவந்தமாகவே போட்டு அனுப்பிய போது பஸீனாவின் குடும்பம் சந்தோசப்படாமல் இருக்குமா!

``டவுனில இரிக்கிறவங்க... எல்லாமே காசு கொடுத்தலியா வேங்கோணும்.. நாங்க என்னா இப்ப பொறத்தியோ.....கொண்டு போங்கோவேன்`` என்று கட்டாயப்படுத்திக் கொடுத்த போது, பஸீனாவின் எதிர்காலம் மிக வளமாக இருக்கும் என்பதை சந்தேகமில்லாமல் உணர்ந்து கொண்டார்கள்.

பஸீனாவின் பெருநாள் உடுப்பைப் பலரும் பார்த்துப் புகழ-பெருநாள் தொழுகையின் பின்னர் அவளது நண்பிகள் பலரும் அவளை விஷேடமாக வாழ்த்த......

ஹஜ் பெருநாளன்று பின்னேரம் கமால் எதிர்பாராத விதமாக பஸீனாவின் வீட்டிற்குத் தனது இரண்டு நண்பர்களுடன் திடீரென வந்து நின்ற போது பஸீனா திக்கு முக்காடிப் போனாள்.

தீன்பண்டங்களுடன் தேனீர் பரிமாற.... ஒரு சில நிமிடங்கள் கமால் பஸீனாவுடன் கதைத்துக் கொண்டான்.

இந்த அனுபவத்தை அணுஅணுவாய் இரசித்து - மீட்டி மீட்டிப் பார்த்து மகிழ்ந்தாள் பஸீனா.

திருமண நாள் நிச்சயித்து, ஹோல் தயாராக்கி, அழைப்பிதழ் அச்சடித்து, இதோ, முக்கால்வாசிப்பேருக்கு மேலாகக் கொடுத்து, அழைத்தும் ஆகிவிட்டது.

எண்ணி ஆறே நாட்கள் தான் திருமணத்திற்கு.

வேலைக்கா பஞ்சம்......
மா இடித்து வறுத்தெடுக்கும் வேலை, கோப்பிக்குப் பலகாரங்கள் செய்வது....உடைகளைத் தயாரிப்பது, வீட்டை ஒழுங்குபடுத்துவது....



சமையற்காரர்கள் ஏற்பாடுகள் பற்றிப் பேசுவது... இத்யாதி....இத்யாதி... வேலைகள்.

திருமணப்பதிவையும் திருமணத்தன்றே வைப்பது என்பதால் சிறிது வேலை குறைந்தது.

மாப்பிள்ளைக்குப் போட நல்லதொரு இரத்தினக்கல் வைத்து, வெள்ளி மோதிரம், மாப்பிள்ளையை வரவேற்றுப் போட மல்லிகைப்பூ மாலைக்கு ஓடர்..... எல்லாமே சரி...எல்லாமே திருப்தி......

வேலைகளைச் செய்து கொண்டிருந்த குடும்பத்தவர்களுக்கு பஸீனாவின் தங்கை தேனீர் கொண்டுவந்து கொடுத்தாள்.

வாசற்கதவு தட்டப்படும் சப்தம்.....
தொடர்ந்து அழைப்பு மணியும் ஒலிக்க....
யாஸீன் போய்பார்த்தார்...

``கையில் ஒரு குழந்தை....இடுப்பில் ஒரு குழந்தை....நடுத்தர வயதுப் பெண்.

``யார்...யாரைப் பார்க்கணும்.....?``

பதில் சொல்லாமல் திறந்த கதவுவழியே அவளே நுழைந்தாள்...

குடும்பத்தினர் எல்லோரும் பரபரப்பாய்க் கூடிவிட்டனர்.

கைப்பையைத் திறந்தாள்...பரபரவென்று ஒரு சிறிய அல்பத்தை எடுத்து யாஸீனின் முகத்துக்கு நேரே நீட்டினாள்....

``பாருங்க...நல்லாப்பாருங்க....`` சில பக்கங்களைப் புரட்டியவர் அப்படியே நாற்காலியில் தொப்பென விழுந்தார்.

வந்த பெண் கைப்பைக்குள் இருந்து சில ஆவணங்களை எடுத்து அங்கு நின்ற பஸீனாவின் மூத்த சகோதரனிடம் நீட்டினாள்.

``வாசிச்சிப் பாருங்க ப்ரதர்....``
ஓ....யாஅல்லாஹ்வே... இதென்ன விபரீதம்?

கமால் - வந்திருக்கும் பெண் சகிதமாய் வகைவகையான நிலைகளில் படங்கள்...அநேகமாக அப்படங்கள் சவூதியில் பிடித்தவைகளாக இருக்க வேண்டும். பின்னால்...பின்னால்.... குழந்தைகளுடன் அவர்கள்...குழந்தைகளின் தனித்தனிப்படங்கள்.... அல்பம் நிறைய.....நிறைய...யாஸினால் பக்கங்களைப் புரட்ட முடியவில்லை.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸீனாவின் சகோதரனிடம் கொடுத்த ஆவணங்கள் -

கமாலின் திருமணப் பதிவு சான்றிதழ்- பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ்கள்.... வந்திருக்கும் பெண்ணின் பெயர் சித்தி நஜீபா... ஊர் பொலன்னறுவை கதுறுவல.

அவளின் தோற்றமே அவளும் மத்தியகிழக்கில் வேலை செய்தவள் என்பதைக் காட்டியது.

மௌனத்தைக் கலைத்து அவளே பேசினாள். எல்லோரும் என்னை மன்னிச்சிக்கோணும் கமால் ஏன்ட புருஷன்... இது எங்கட புள்ளைங்க.... அவரு இங்க கலியாணம் செய்யப் போறாரு என்பது இன்டைக்குக் காலையிலதான் எனக்குத் தெரிஞ்சிச்சி.

இப்போது வந்தவள் தைரியமிழந்து ``கோ'' வென்று கதறி அழத் தொடங்கினாள்.

``சவூதியில் இவரோட நண்பன் சுனில்தான் எனக்கு காயிதம் அனுப்பி இரிந்தான்... அவனுக்கு எங்கட கலியாணம், புள்ளைங்க எல்லாமே தெரியும்...எங்கட ஊட்டுக்கும் வந்திரிக்கான்.. அவன் மாறுஜாதியா இருந்தாலும் நல்லவன்....''

அல்பம், ஆவணங்கள் அனைத்து குடும்பத்தாரினதும் கைக்குக் கை மாறின.

பஸீனா உலகமே தலையில் இடிந்து விழுந்த நிலையில் அப்படியே மயக்கமாகிச் சாய.... எல்லோரும் பதற....சில மணித்தியாலங்கள் அந்த வீடே அமளி துமளிப்பட்டது.

பஸீனாவின் உம்மம்மா ரொம்ப நிதானமானவர். அதிகம் படிக்கா விட்டாலும் அனுபவ அறிவு மிக்கவர்.

நஜீபாவை அன்று போக வேண்டாம் என்று தங்கச் செய்தார்... இரவிரவாய் கமாலின் வாழ்வு பற்றி நஜீபாவிடம் எல்லோருமே கேட்டுத் தெரிந்து கொள்ள..

கதுறுவெல பள்ளிவாசல் டிரஸ்டியின் வீட்டிற்கு யாஸீனும் இன்னும் சிலரும் இரவோடிரவாய்ப் போய் எல்லாவற்றையும் விசாரிக்க...

பஸீனா தன் அறையில் அழுது புலம்ப.....

அடுத்த நாள் காலை...

பத்துமணியிருக்கும்......

யாஸீன் குடும்பத்தினர்...திருமணம் பேசிய புரோக்கர். நஜீபாவின் பெற்றோர்...நஜீபா.... பிள்ளைகள் கதுறுவெல பள்ளிவாசல் டிரஸ்ட்டி.... திருமணத்தைப் பதிவு செய்தவர்.....அனைவருமே....

பூவெலிகட கமாலின் வீட்டிற்கு ஒன்றாகப் போய் திமுதிமுவென இறங்கியபோது.....



கமால் வானொலியை உச்சஸ்த்தாயியில் வைத்து ஹிந்தி பாடலொன்றை கேட்டுக் கொண்டிருந்தான்.....

கமாலின் பசுத்தோல் மெதுவாகக் கழற்றப்படவில்லை...... அந்தப் பசுத்தோலை உரித்தெடுத்தார்கள்...

கமாலின் பெற்றோரின் நிலை பரிதாபத்துக்குரியதாயிற்று.

உண்மையிலேயே மகனின் திருவிளையாடல் ஒன்றுமே அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை......

ஆரம்பத்தில் தன் குரலை உயர்த்தி.... கமால் தப்பித்துக் கொள்ள முயன்றாலும், சென்றிருந்தவர்களின் சாட்சியங்கள் அவனை மௌனியாக்கின.

சப்தம் கேட்டு அக்கம் பக்கத்து வீட்டார்களும் வந்து சூழ்ந்து விட்டனர்.

பஸீனாவைப் பெற்றவள் ஒரு நாளும் இல்லாதவாறு வாய்விட்டுக்கதறி சாபம் இட்டாள்.... அவளின் பெற்ற வயிற்றில் எரிமலை வெடித்துச் சிதறிக்கொண்டிருந்தது...

``நீ நல்லா இரிக்க மாட்டே.....''

ஏன்ட புள்ளைட வாழ்க்கையோட வெளையாடிட்ட.....இந்த நெருப்பு உன்ன சும்மாவிடாது...'' அவளைச் சமாளிப்பது மிகவும் கஷ்டமாகிவிட்டது.

பஸீனாவின் மூத்த சகோதரனின் இரத்தம் கொதித்தது. கமாலின் சேர்ட்டைப் பிடித்து இழுத்து....உறுமினான்..

``டேய்....நீயெல்லாம் மனுஷனாடா.... ஒனக்கெல்லாம் மனசு என்று ஒண்டுமில்லயாடா... நாயே..... ஒனக்கு ஊர் ஊரா பொம்புள எடுக்குறது தானாடா வேல....'' அவனைச் சமாளிப்பதும் பெரிய பிரச்சினையாகிவிட...

கமாலின் பெற்றோர் மன்னிப்புக் கேட்க.....

``அல்லா ரஸூல்ட பேரில சத்தியமா செல்றோம்.... இது ஒன்டுமே எஹலுக்குத் தெரியா.......

``ஒஹட கைகள காலா புடிச்சி கேக்குறன்...

மன்னிச்சுக்கு கோங்கோ.....'' கமாலின் வாப்பா கண்ணீர் விட்டார்.

``ஆண்டவனே...நா.....யாருக்கு என்ன பாவம் செய்த..... எனக்கு இப்படி ஒரு புள்ள பொறந்து மானம் மருவாதய எல்லாம் வாங்கிட்டானே... யா அல்லாஹ்வே.....'' கமாலின் தாய் கதறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சைத் தண்ணீர் கூட கமாலின் வீட்டில் குடிக்காமல் கெலிஓயாவுக்கு வந்து வேனைநிற்பாட்டிவிட்டு ஆண்கள் இறங்கி ஜின்னாஹ் ஹோட்டலில் தேனீர் குடித்தனர். பெண்களுக்கு வாகனத்திற்கே கொண்டு வந்து கொடுத்தனர்.

``நாங்க இங்கேயே இறங்கி கண்டிக்குப் போய் பஸ் எடுத்துப் பொயிடுறம்...'' என்று கதுறுவெல ஆட்கள் இறங்கிக் கொள்ள...

பஸீனாவின் குடும்பத்தினர் திரும்பினர்... வீடு வரும்வரை ஒருவரும் ஒன்றும் பேசவில்லை...எல்லோர் மனதிலும் கடும் வேதனை.... ஆனால் எல்லோர் மனதிலும் ஓரேவகையான கவலைகள்..ஒரே வகையான எண்ண ஓட்டங்கள்.....

பஸீனாவை எப்படிசமாளிப்பது? அவளது மன வேதனையை எவ்வாறு தீர்ப்பது?.

கமாலுடன் திருமணம் செய்வதில்லை என்ற தீர்மானத்தை அவள் எப்படி சீரணிப்பாள்...?

சிந்தனையுடனேயே வீடுவந்த போது சுற்றிவர, இருந்த பலரும் வீட்டில் கூடி இருந்தனர்

``ஏன் அங்கல் எங்களக் கூட்டிக் கொண்டு போகல்ல... அவன்ட தோல உரிச்சிருப்பேன்.....'' என்று முன்வீட்டு ஜெகநாதன் கூற...

``ஐயோ...மம...ஆவொத் ஊகே ஹம கனவானே......எய் அங்கல் மட கிவ்வனே....'' என்று சுமனபால கூற.....

``மிஸ்டர்.....யாஸீன்.....நீங்க அந்த கமாலை சும்மா விடக் கூடாது... மான நஷ்ட வழக்கு போடனும்... இவனுகள இப்படியே விட்டா இது தொடர்கதையாகீடும்....'' என்று ஸஹாப்தீன் ஆசிரியர் கூற.....

அன்று பின்னேரம் வரையே இதே பேச்சுக்களும் ஆலோசனைகளும்... அனுதாப வார்த்தைகளும் தான்.

யாரும் எதிர்பாராத வகையில் பஸீனா தெளிவாக இருந்தாள்.

``அந்த படைத்த நாயன் ரெஜிஸ்ட்ரேஷனோ கல்யாணமோ நடக்க முந்தி என்னைக் காப்பாத்திட்டானே...இதுவே போதும்...அல்ஹம்துலில்லாஹ்...'' இப்படி பஸீனா சொன்னபோது எல்லோருமே வியப்படைந்தனர்.

மஹ்ரிப்புக்குப் பின்னர் அடுத்த தெருவில் உள்ள அஸ்லம் தன்



தந்தையுடன் வந்தான்.

``அஸ்ஸலாமு அலைக்கும்.....'' ``வஅலைக்குமுஸ்ஸலாம்'' வாங்க.. இரிங்க...'' என்று யாஸீன் வரவேற்றார்.

``எல்லா விஷயங்களையும் கேள்விப்பட்டோம்.'' அஸ்லமின் தந்தை புவாட் பேசத்தொடங்கினார்.

``அதுதான்....மிச்சம் கார்ட்களையும் தூர உள்ளவர்களுக்குக் கொடுத்திட்டம்...எல்லா ஏற்பாடுகளும் முடிஞ்சிரிச்சி... நாளைஞ்சி நாள்தானே இரிக்கி.... எங்களுக்கு என்ன செய்யிறதென்டே தெரியல்ல..'' அழமாட்டாத குறையா யாஸீன் பேசினார்.

``கல்யாணம் நடக்காது என்று யாருக்கும் அறிவிக்கவில்லையே'',

``சே ...இல்ல நேத்து பின்னேரம் தானே அந்த பொம்புள வந்து எல்லாத்தையும் சொன்னா... அதுக்குப் பொறகு ராவோட ராவே கதுறுவெல போய்...விசாரிச்சி எல்லோரையும் கூட்டிக்கிட்டு வந்து...அப்படியே பூவெலிகட போய்...அப்பாடா...பெரிய குழப்பமா பேயிடுச்சி மிஸ்டர் புவாட்''

``இங்க பாருங்க மிஸ்டர் யாஸீன்... நாங்க ரெண்டு பேரும் ஒரு முடிவோட.....அதாவது ஒரு தீர்மானத்தோட வந்திரிக்கிறோம்.... இதைக் கேட்டுட்டு ஒங்கட புரியத்த சொல்லுங்க......

ஒன்றும் புரியாமல் பார்த்தார் யாஸீன்
``மிஸ்டர் யாஸீன்...ஒங்களுக்குப் புரியமா இரிந்தா...நீங்க டேட் குறிச்சி இரிக்கிற நாள்ல என்ட மவன் அஸ்லம் ஒங்கட மகள கலியாணம் செய்ய நாங்க புரியம்....''

ஓ...இதென்ன ...கனவா.? நனவா? யாஸினுக்கு ஒன்றும் பேச வாய் வரவில்லை. சிலநிமிடங்கள் மௌனம்.

``நீங்க...நீங்க... என்ன சொல்றீங்க...?''இப்போது அஸ்லம் பேசினான்.

``அங்கல்...உங்களையும் உங்கட குடும்பத்தையும் எங்களுக்கு நல்லா தெரியும்...நானும் எங்கட குடும்பமும் சேர்ந்துதான் இந்த முடிவ எடுத்தோம்..''

யாஸினுக்கு அஸ்லமின் குடும்பத்தைத் தெரியாமல் இல்லை.

``மிஸ்டர் யாஸீன் நீங்க யோசிச்சிச் சொல்லுங்க...'' புவாட்தான் பேசினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே யாஸீன் செல்ல...
சில நிமிஷங்களில், பஸீனாவின் உம்மம்மா வெளியே வந்து பேச உட்கார்ந்தார்.

``பாருங்க மவேன்... இப்படி நடந்து போச்சே.... என்னமோ... அல்லாஹுதாலா எங்கள இந்தளவுக்காவது காப்பாத்திட்டான்.....``

``மாமி....இதெல்லாம் இண்டைக்கி சர்வசாதாரணமாயிடிச்சி... கலியாணத்தை யாவாரமாக்கிட்டானுக கொஞ்சம் பேரு... இன்னம் கொஞ்சம் பேர் கலியாணத்த வெறும் பொழுது போக்காக்கிட்டானுக....``புவாட் சொல்லும்போதே பஸீனாவின் தாய் தேனீர் கொண்டு வந்தார்.

கூடவே யாஸீனும் வந்தார். அவரது முகத்தில் மலர்ந்திருந்த புன்னகை அஸ்லமை அவர் மருமகனாக்க விருப்பம் என்பதைக் காட்ட....

``எடுங்க நானா.....டீ எடுங்க எடுத்துக் கோங்க அஸ்லம் மவேன்`` என்று பஸீனாவின் தாய் உறவு சொல்லி அழைத்துப் பரிமாறி தானும் விருப்பம் என்பதை மறைமுகமாகக் காட்டினாள்...

மீண்டும் அந்த வீட்டில் கல்யாணக்களை கட்டத்தொடங்கிவிட்டது...
உள்ளே இருந்து வந்த பஸீனாவின் இரண்டு சகோதரர்களும் அஸ்லமை கட்டியணைத்து முஸாபஹா செய்து கொண்டனர்.

சொந்தமாக வீடுவாசலோ,வியாபாரமோ பெரிய உத்தியோகமோ அஸ்லமுக்கு இல்லாவிட்டாலும் அவனிடம் நேர்மை, தியாகம், ஒழுக்கம்...எல்லாவற்றையும் விட பரந்த மனம் இருப்பதை அறிந்து பஸீனாவின் குடும்பம் மீண்டும் கலகலக்கத் தொடங்கிவிட்டது.

வாழ்க்கைக்குத் தேவை இவைதானே!



# ஒரு தராசின் இரு தட்டுக்கள்....!

மஹ்ரிப் தொழுகையை முடித்த ஜெஸீமா மனதுக்குள்ளாகவே சில ``திக்ருகளை`` ஓதிக் கொண்டே இரவுணவைத் தயாரிப்பதில் மும்முரமாக இருந்தார்.

கடையை மூடிவிட்டு இஷாத் தொழுகையையும் முடித்துவிட்டே அவளது கணவன் மஸூட் வீட்டிற்கு வருவார். பள்ளிவாசலிலிருந்து வெளியே வந்து நண்பர்கள் - தெரிந்தவர்களோடு சிறிது உரையாடிவிட்டு வீட்டிற்கு வருவதே அவரது பழக்கம்...அப்படியே அடுத்த நாட் தேவைக்கான சில பொருட்களையும் வாங்கிக் கொண்டு வந்து விடுவார்.

இன்று வெள்ளிக்கிழமை...அவர்களின் இரண்டு மகன்களும் கொழும்பிலிருந்து இரவு பஸ்ஸில் எப்படியாவது வந்து விடுவார்கள்.

வெள்ளிக்கிழமை இரவு ஜெஸீமாவிற்கு மிகவும் விஷேசம் தான்.... பெற்றது இரண்டே மகன்கள்... இருவருமே கல்விமுடிய... கொழும்பிலேயே வேலைக்குப் போய்விட்டனர்..சிலகால்ம் வேலை நாட்கள் போக வார இறுதிநாட்களில் ஏதோவெல்லாம் ``கோர்ஸ்கள்`` செய்தனர் அப்போதெல்லாம் மூன்று நான்கு மாதங்களுக்கு ஒருமுறைதான் ஊருக்கு வாய்ப்பு கிடைக்கும்....

அக்காலங்களில் ஜெஸீமா படும் பாடு...சதாவும் புலம்பிக் கொண்டே இருக்கும் அவளது தாய்மை.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் என்பவர்கள் தாயின் உதிரத்தின் பங்குகளல்லவா... அதனால்தானோ எந்தத்தாயும் தன் பிள்ளைக்காக எத்தனையோ தியாகங்களை எந்தவிதமான மனக்கசப்பும் இன்றிச் செய்கின்றாள்?

மூத்த மகன் காமில்,
இரண்டாம் மகன் வஸீர்..

காமில் உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவில் கற்று, கொழும்பு பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ பாடநெறியில் பட்டம் பெற்று நிறுவனமொன்றில் பொறுப்பான பதவியில் இருக்கின்றான்.

வஸீர் சிறிது வித்தியாசமானவன். சாதாரண தரத்துடன் ஜாமியா நளிமிய்யாவின் 'இக்ரா' தொழில் நுட்பக் கல்லூரியில் ``ஓடோமொபைல்' பயிற்சியை முடித்து அதனோடு தொடர்பான மேலதிக பயிற்சி நெறிகளையும் சிறப்பாகத் தேர்ச்சி பெற்று, இன்று பிரபல்யமான மோட்டார் வாகன இறக்குமதி நிறுவனத்தில் உதவிப் பொது முகாமையாளராக இருக்கின்றான்....

இரண்டு பிள்ளைகளையும் மிகச்சிறப்பாக வளர்க்க உதவி செய்த அல்லாஹ்வுக்கு ஜெஸீமாவும், மஸூட்டும் நன்றி செலுத்தாத நேரமே இல்லை.

கடந்த ஒரிரு வருடங்களாகவே திருமண புரோக்கர்கள் அவர்களின் வீட்டிற்குப் படையெடுக்கத் தொடங்கிவிட்டனர். மோப்பம் பிடிப்பதிலும், ஆசைகாட்டுவதிலும் இரண்டு பக்கப் பேரங்களையும் இலாகவமாக உயர்த்தி அதில் தமது பங்கு இலாபத்தைக் கூட்டிக் கொள்வதிலும் கல்யாணத் தரகர்களை யாரும் வெல்லவே முடியாது.

சும்மா சொல்லக்கூடாது...... கல்யாணத்தரகர்களின் மூளை அபாரமானதுதான்.... அவர்களது வார்த்தை ஜாலங்கள் அரசியல்வாதிகளின் வார்த்தை ஜாலங்களுக்கு குறைந்ததல்ல.

வார இறுதியில் இவர்களிருவரும் வீட்டிற்கு வரும்போதெல்லாம் இந்தத் தரகர்களும் வரத்தவறுவதே இல்லை.

காமில் வாயை மூடிக்கொண்டு சும்மா இருந்தாலும் வஸீர் வரும் தரகர்களை சும்மாவிடவே மாட்டான். வேடிக்கையாக எதையாவது பேசி அனுப்புவதே அவனது பழக்கம்.

ஒரு சில தரகர்கள் வஸீருடன் கோபித்துக் கொண்டதும் உண்டு.

``ஏன் புரோக்கர் மாமா...ஒங்களுக்குக் கலியாணம் பேசிய புரோக்கருக்கு நீங்க எவ்வளவு கொடுத்தீங்க.. நீங்க எவ்வளவு சீதனம் எடுத்தீங்க?`` என்று கேட்பதும்.....



ஏன் மாமா...எங்கட கலியாணம்களை முடிச்சி வைக்க நீங்க ஏன் இப்படி ஆசைப்பட்றீங்க எங்களோட எப்படி மாமா ஒங்களுக்கு இவ்வளவு இரக்கம் வந்திச்சி....?``

என்று சீண்டுவதும்,
கடைசியில் ஜெஸீமாவோ மஸூடோ ``சும்மா இரிங்க சின்ன மவன்`` என்று சமாதானப்படுத்துவதுமாக முடியும்.

பிள்ளைகளின் திருமணங்களை முடித்துவிட வேண்டும் என்று அந்தப் பெற்றோருக்கும் ஆசைதான்.

ஆனால்-
எதற்கும் காலமும் நேரமும் கைகூடி வரவேண்டாமா?

ஜெஸீமாவின் மனம் இன்று வழமையை விட குதூகலித்துக் கொண்டிருக்கிறது. எப்படியாவது இன்றைக்கு மூத்தமகனின் கல்யாணவிடயமாகத் தனது அபிப்பிராயத்தைச் சொல்லிவிட வேண்டும் என்று முடிவெடுத்திருந்தாள்.....

அந்த விடயத்தை இன்று பின்னேரம்தான் ஜெஸீமாவே தீர்மானித்திருந்தாள்...இல்லை....தீர்மானிக்க முடிந்தது..

ஜெஸீமாவோடு ஒன்றாகக் கற்பித்து இருபது வருட சேவையோடு விருப்பத்தின் பேரில் இளைப்பாறிய மாஹிரா டீச்சருக்கு சுகமில்லையென்று கேள்விப்பட்டு, மஸூடின் அனுமதியோடு ராஹிலா டீச்சருடன் நோய் பார்க்க இன்று பின்னேரம் சென்றாள் ஜெஸீமா.

மாஹிராவின வீடு பக்கத்து கிராமம் தான். பல வருடஙகள் ஒன்றாகப் பணியாற்றியவர்கள்..பலசுகதுக்கங்களைப் பகிர்ந்து கொண்டவர்கள்...பண இக்கட்டான நேரங்களில் கொடுக்கல் வாங்கலைச் செய்து கொணடவரகள்...ஓ...ஒரு இரண்டு தசாப்தங்களுக்கு முன்னால் ஒன்றாகப் பணியாற்றியவர்களிடம் கூட எவ்வளவு பாசம்-? எததனை அந்நியோன்னியம்? எவ்வளவு இறுக்கமான மனிதநேயப் பிணைப்பு?

ஜெஸீமா நினைத்துப் பார்க்கின்றாள். சே கூடப்பொறநதவங்ககிட்ட கூட இன்டைக்கு உண்மையான பாசம் இல்லையே......

``மனிதம்`` மாண்டு மண்ணறைக்குள் ஆழமாகப் புதைநது விட்டதா?

மாஹிரா டீச்சருக்கு வயிற்றில் வருத்தம்.. பல இடங்களில் வைத்தியம் பார்த்த பின் இப்போது கண்டியில் டொக்டர் வத்தேகம கவனிக்கிறார். டொக்டர் வத்தேகம என்றாலே அவர் புற்றுநோய்க்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷேட வைத்தியம் என்பது எல்லோருக்குமே தெரியும்.

நெஞ்சுக்குள் தோன்றி தொண்டைக்குழிக்குள் இறுக்கி அடைத்துக் கொண்ட துயரத்தை சிரமப்பட்டு அடக்கிக் கொண்ட ஜெஸீமா மாஹிராவின் படுக்கையிலே உட்கார்ந்து அவளது தலையைத் தடவி விட்டாள்.

எத்தனை அடர்த்தியாக - கறுகறுவென்று இருந்த மயிர்...எல்லாமாகக் கொட்டி... தலையில்அங்கொன்றும் இங்கொன்றுமாக சில மயிர்கள்...நோய்க்காகப் பிடிக்கும் கதிர்வீச்சின் பயன்....

``மாஹிரா...இவ்வளவு சொகமில்லாம போனது எங்களுக்குத் தெரியாமப் போச்சே...`` கண்கலங்கினாள் ஜெஸீமா.

``ஓ..மாஹிரா... இல்லாததும் பொல்லாததுமாக இருந்தா...... காத்தவிட வேகமா எல்லா செய்தியும் வந்திடும்... இப்படி ஒரு செய்தி வராது...இவ்வளவு வருத்தப்பட்டிருக்கிறீங்க... இப்பதான் நாங்க வர்ரோம்... முந்தியெல்லாம் ஒருத்தர் ரெண்டுநாள் ஸ்கூலுக்கு வராட்டியே ஓடி வந்து பாத்துடுவோம்..... எங்கள மன்னிச்சிக்குங்க...`` ராஹிலா மாஹிராவின் கைகளைப் பிடித்துக் கேட்டுக் கொண்டாள்.

சற்று நேரத்தில் மாஹிராவின் கணவர் இம்தியாஸ் வந்து மாஹிராவுக்குத் தெரியாமல் கண்சாடையாய் இவர்களை அழைக்கவே முன்னறைக்குச் சென்றனர்.

``டீச்சர்...மாஹிராட நோயப்பத்தி டொக்டர் தெளிவாகச் சொல்லி விட்டார்...அவ படிச்சவ... அவவுக்கும் தெரியும்..... மூத்த மகள்ட கலியாணத்தையாவது அவட கண்ணுமுன்னுக்கு செய்ய ஏலாமப் போவுமா என்டுதான் நான் பயப்படுறேன்.

முகத்தை இரு கைகளாலும் மூடிக் கொண்டு இம்தியாஸ் அழத்தொடங்கிய போது இவர்களால் ஒன்றுமே செய்ய முடியாமற் போனது.

தெளிந்தவராய் இம்தியாஸே தொடர்ந்தார்...

``எங்கட மூத்த மகள்....பௌஸியா... சயன்ஸ் டீச்சரா இரிக்கிரா...``

``ஓ...சின்னப்புள்ளயா பார்த்தது இப்ப எங்கே.......``

அவட முதல் நியமனம் என்டதால புஸல்லாவையிலதான் படிப்பிக்கிறா... இன்டைக்குப் பின்னேரம் வருவா...ஞாயிற்றுக்கிழமை போவா....``



``அவவுக்கு கலியாணம் பேசல்லையா?`` ஜெஸீமாதான் கேட்டாள்.

``டீச்சர்...போன வருஷம் அவவை அவட ஸ்கூல்லயே படிச்ச ஒருத்தர் கல்யாணம் பேசி வந்தாரு.....இப்ப அவரு ஒரு எக்கவுன்டன்.... அவருட வாப்பா...உம்மா..எல்லாம் வந்து பெரிசா மாலையெல்லாம் போட்டாங்க... மால போடுற அன்டைக்கே முப்பது சஹனுக்கு பெரிசா செய்தோம்... பொறகு...``

இம்தியாஸ் பேசமுடியாமல் தவித்தார்.

``மாஹிராவுக்கு அப்ப வருத்தம் அவ்வளவு இல்ல.. என்னவருத்தம் என்டு கண்டுபிடிக்கவும் இல்ல.. மால போட்ட பொறகு அவரு வருவாரு... புள்ள பௌஸியாவோட பேசிட்டிருப்பாரு.. சாப்பிடுவாரு.....டெலிபோன்லயும் பேசிக் கொள்வாங்க...``

``அப்புறம்..........``

``மாஹிராவுக்கு கொஞ்சம் கொஞ்சமா வருத்தம் கூடி இதுதான் நோய் என்டு கண்டுபிடிச்சதும் ரெண்டு மூனுநாளையில ஒரு கடிதம் எனக்கு வந்திச்சி....`` மீண்டும் பேசமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்ட அவர் தன் பர்ஸிலிருந்து மடித்து வைத்திருந்த ஒரு கடிதத்தை எடுத்துக் காட்டி.

``படிச்சிப் பாருங்க...இதில ரகசியம் ஒன்டும் இல்ல...`` என்றார்.

``மிஸ்டர் இம்தியாஸுக்கு என்று ஆரம்பித்து இருந்தது அந்தக் கடிதம்.

``உங்கள் மனைவியின் நோய் பற்றி அறிந்தேன்... பௌஸியா மூத்த மகள்.....தாய் இறந்தால் பௌஸியாவுக்குப் பின்னால் உள்ள நான்கு பிள்ளைகளது பொறுப்பும் பௌஸியாவுக்குத் தான் வரும்.. அதில் பாதியையாவது நான் சுமக்கவும் வரும்.

தயவு செய்து பௌஸியாவுக்கு வேறு இடம் பாருங்கள்....எங்கேஜ்மன்டில் நாங்கள் போட்ட மாலையை விருப்பம் என்றால் திருப்பித் தாருங்கள். இல்லாவிட்டால் எங்கேஜ்மன்ட் அன்று உங்களுக்கு ஏற்பட்ட செலவுக்காக அதை வைத்துக் கொள்ளுங்கள்....``

இதற்கு மேல் இந்தக் கடிதத்தை வாசிக்க முடியவில்லை.

``கலயாணம் ஒடஞ்சி போனபிறகு மாஹிராவின் வருத்தம் மிச்சம் [illegible]...பௌஸியா மகளும் கொஞ்சநாள் பைத்தியம் பிடிச்சது போல [illegible] போயிட்டா..... சொந்தக்காரங்க கேக்குற கேள்விகளும்...பேசுற [illegible]...``

[illegible] ஒன்றுமே பேச முடியவில்லை....

விடைபெற்று வரும் போதே ஜெஸீமா ஒரு முடிவோடுதான் வந்தாள்....

அந்த முடிவு எல்லோரும் ஏற்றுக்கொள்கிற முடிவா இருக்கனும்....

வேலைகளை மும்முரமாக முடித்தாள் ஜெஸீமா......காமிலுக்கு தக்கடி என்றால் மிகவும் விருப்பம்...ஒரு பாத்திரத்தில் தக்கடி...வஸீருக்கு ரொட்டிதான் விருப்பம்...ரொட்டியைச் சாப்பிடும்போது தான் சுட வேண்டும்....மாவைப் பிசைந்து வைத்திருக்கிறாள்...

பால் நினைந்தூட்டும் தாய்.... தன் பிள்ளைகளுக்குத் தன் இறுதிவரை உணவைக் கவனிக்கின்றாளே..... அன்னையோடு அறுசுவை போம் என்பது எவ்வளவு உண்மை..?.......

ஆயிற்று.....

மகன்கள் வந்து.....குளித்து......உடைமாற்றி எல்லோருமாய் ஒன்றாயமர்ந்து கதைத்து - சிரித்து மகிழ்ந்து உணவுண்டு முடிந்தாயிற்று.

எல்லோரும் முன் ஹாலில் உடகார்ந்த போது தான் ஜெஸீமா பேச்சை எடுத்தார்.

``இன்டைக்கு நானும் ராஹிலா டீச்சரும் மாஹிரா டீச்சரைப் பார்க்கப் போனோம்.....``

காமில் கேட்டான்

``உம்மா உங்கட பழைய ஸ்டாப் தானே.....எனக்கு நெனைவிரிக்கி..... நான் ஸ்கொலர்ஷிப்பில பாஸானா போது எனக்கு ஒரு கிப்ட் கூடத்தந்தாங்களே......``

``அவங்கதான்.....காமில்....கென்ஸர்....அடையாளமே தெரியல்ல...``

மஸுட் சொன்னார்.

``சே....தெரியாமப் போச்சே..... நேரம் கெடச்சா நாளைக்கு நாளையண்டைக்கு நாங்க ரெண்டு பேரும் போவோம``

ஜெஸீமா அவர்களின் மகள் பௌஸியாவின் திருமணம் பற்றிய விபரங்களைச் சொன்னார்.

``சே....என்ன மனுஷன்கள்...நோய் நொடி என்கிறது எங்களுக்குக் வராதா என்ன? இவனுகள நடுத்தெருவில கட்டி வச்சி கல்லடிச்சிக் கொல்லனும்`` என்றான் காமில்.



இது தான் சந்தர்ப்பம் என்று ஜெஸீமா தன் கருத்தை மெதுவாக வெளியிட்டாள்.

``எனக்கு அங்க போனதில இருந்து ஒரு யோசனை...எங்கட காமிலுக்கு அந்தப் புள்ளைய பேசி முடிச்சா எப்படி?``

காமில் வஸீரைவிட சமுதாய சிந்தனை கூடியவன். இஸ்லாத்திலும் கூடுதல் ஈடுபாடுடையவன்... எதையும் யதார்த்தமாக சிந்திப்பவன்.. சீதனம் வாங்காமல்தான் திருமணம் செய்ய வேண்டும் என்று பலமுறை கூறி இருக்கின்றான்....

ஜெஸீமாவின் கருத்தைக் கேட்டதும் காமில் பேசாமல் எழுந்து உள்ளே போய்விட்டான்

மஸுட்தான் அவனைப் பின் தொடர்ந்தார்.

``வாப்பா..... உம்மாவுக்குப் பைத்தியமா.... எனக்கு ஏலாது வாப்பா... சும்மா என்னைப் போயக் கரச்சல் பண்ணாதீங்க...ஒருத்தன் மால போட்டு......வானாம் என்டு சொன்ன பொண்ணத்தானா நான் ``மெரி`` பண்ணனும்...ஐயோ... எனக்கு ஏலாதப்பா....``

இதை அறைக்கு வெளியே இருந்து ஜெஸீமாவும் கேட்டுக் கொண்டுதான் இருந்தார்.

முன் ஹாலில் போய ஜெஸீமா அப்படியே நாற்காலியில் விழுந்தார்.

காமில்....
தன் மகன்
அவனையே தன்னால் முழுமையாக புரிந்து கொள்ள முடியாமற போய்விட்டதா?

``ஜெஸீ கவலப்படாதீங்க...நீங்களும் நானும் எடுக்கிற முடிவு இல்ல இது.......``

மஸுட் ஆறுதல் சொன்னார்.
``உ......ம்.....மா....`` வஸீர் வந்து அவள் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான்``

``உம்மா.....அந்த பௌஸியாவ நான் ``மெரி`` பண்ணிக் கொள்ளவா.....``
இந்தக் கேள்வியை ஜெஸீமா எதிர்பார்க்கவே இல்லை.

விழுமையான குறும்புத்தனத்தில் சொல்கிறானோ என்ற சந்தேகம்
``நெசமாவா சொல்றீங்க மகன்?``



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

``அல்லாமேல ஆணையா சொல்றேன்...வாப்பாவும் நீங்களும் சரி என்டா எனக்கும் சரி......உம்மா.....``

கட்டிப்பிடித்து நெற்றியில் முத்தம் இட்டாள் ஜெஸீமா.....

``வஸீர் மகன்....இப்பதான்...எனக்கு சந்தோசம் மகன்...உங்கட உம்மா மனசார விரும்பினத நாங்களும் விரும்பனும்..... ஓங்கட தாயிட விருப்பத்த நீங்க நெறவேத்தப் போறீங்க... அல்லாஹ் ஓங்களுக்கு ரஹ்மத்து செய்வான்....``தந்தையின் இதயத்தில் இருந்த ஆசிகள் வருஷிததன.

பெயருக்குப் பின்னால் காமிலுக்குப் போல் வஸீருக்குப் பட்டங்கள் இல்லாமற் போனாலும் அவனுக்கு அதீதமான பண்புகள் இருக்கின்றனவே...

``யா அல்லாஹ்......எல்லாப் புகழும் உனக்கே..... உனக்குத்தான்... அல்ஹம்துலில்லாஹ்...``

``மஸூட் மாஹிராவீட்டு டெலிபோன் இலக்கங்களைச் சுழற்றினார்.....

ஆமாம்...நல்ல காரியங்களைத் தள்ளிப்போடக் கூடாதல்லவா?

பௌஸியாவின் வீட்டில் ஆயிரம் பூக்கள் பூக்கப் போவதற்கான அழைப்பு மணி இதுவாக இருக்குமோ.....

அந்தப் பெற்றோரின் மனத்தராசில் இருபக்கமும் தாமே பெற்று - பேணி வளர்த்த இரண்டு மகன்களும் அமர்ந்து அவர்களைப் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டிருந்தனர்.

தாமே பெற்ற பிள்ளைகளாக இருந்தாலும் தராசின் ஒரு தட்டு தாழ்ந்தும் மறு தட்டு உயர்ந்துமல்லவா காணப்படுகின்றது?

*(யாவும் கற்பனையே)*



# வேஷங்கள் கலையுமா?

ஒவ்வொரு நாட்களின் உதயத்திலும் பல்லாயிரங்கோடி மனித உயிர்களின் வாழ்க்கையிலும் அன்றைய தினம் என்னவெல்லாம் நடக்க இருக்கின்றன என்பதனை யார்தான் அறிவர்?

மலரும் நாட்கள் நல்ல நாட்களாக அமைய வேண்டும் என்று இறைவனிடம் வழமையாகப் பிரார்த்திப்பது போலவே இன்றும் என் பிரார்த்தனைகளை முடித்து, `ஸ்விட்ச்` போட்ட மெஷினாய் நான் இயங்க ஆரம்பித்த போது மணி காலை ஐந்தரை.

என் குழந்தைகள் இப்பொழுது எழும்பத் தொடங்கிவிட்டனர்.

நான்கு பேர்....

நால்வருமே கண்டியிலுள்ள பிரபல பாடசாலைகளிலே கல்வி கற்கின்றனர்.

வீடே கலகலக்கிறது.

சிறுசிறு சர்ச்சைகள்...என்னதான் எல்லாப் பொருட்களையும் இரவே எடுத்து வைத்துக் கொண்டாலும் காலையில் சிறிய ``உள்நாட்டு யுத்தம்`` நடக்கும். இந்த மாதிரி சங்கதிகள் இல்லாவிட்டால் வாழ்க்கையில் சுவாரஸ்யம் இல்லாமல் போகுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாடா எல்லோரும் போய் விட்டார்கள். வீட்டைப் பார்த்தால் யுத்தம் நடைபெற்று முடிந்த யுத்தகளமாய் இருக்கின்றது.

கணவரும் கடையைத்திறக்கப் போய் விட்டார்.

இன்றைக்கு சல்ஹா மதினி வர இருக்கிறா.....
என் கணவனின் ஒரே தங்கை.
பெற்றோரை சிறு வயதிலேயே இழந்த அவளுக்கு நானும் என் என் கணவரும்தான் எல்லாமே.

சல்ஹா மதினி பேராதனை பல்கலைக்கழகத்திலே புவியியல் பாட சிறப்புப்பட்டதாரி. இப்போது பதுளை அல் அதான் முஸ்லிம் வித்தியாலயத்தில் ஆசிரியையாகக் கடமையாற்றுகிறாள்.

அவளுக்கு ஒரு திருமணத்தை செய்து முடித்துவிட வேண்டும் என்பதுதான் இப்போது எங்கள் முதல் வேலையாக இருக்கிறது.

எத்தனையோ புரோக்கர்கள்...
வருவதும் போவதுமாய்....

ஓ.... இப்போதைக்கு கலியாண புரோக்கர்கள் பாடு கொண்டாட்டமாகத் தான் இருக்கிறது

நாள் தவறினாலும் புரோக்கர்மார் வரத்தவறுவதில்லை.

என்ன செய்வது?
இந்த புரோக்கர்மார் இல்லாமலும் திருமணங்களைச் செய்ய முடிவதில்லையே.....

இன்று சல்ஹா வருவது நாளைக்கு நடக்கவிருக்கும் அவளது ஜூனியராகப் படித்த பர்சானாவின் திருமணத்திற்காகத்தான்.....

பதுளையிலிருந்து காலைபுறப்படும் உடரட்ட மெனிகேயில் வந்து. கம்பளையில் இறங்கி பஸ் எடுத்து இங்கு கலுகமுவைக்கு வந்து விடுவாள். இரவு ``போன்`` பண்ணினாள்.

அவவுக்கு பிடித்த கறிகளைச் சமைத்து விட்டேன்.....

``லுஹரும் தொழுதாகிவிட்டது.

இந்தப் புகையிரதம் என்றாவது நேரத்துக்கு வந்ததுண்டா என்ன?

நேரம் போனதே தெரியவில்லை.



அழைப்பு மணியோசை கேட்டுப் போய் வாசற்கதவை திறந்தால்.....
``ஓ சல்ஹா மதினி...வாங்க....வாங்க....``
``சரியான டயர்டா இருக்கு......மதினி.....மொதல்ல குடிக்க என்னமாவது தாங்க.....``

சொல்லிக் கொண்டே அவளது அறைக்குப் போய் பிரயாணப்பையைத் தொப்பென்று போட்டாள்.
குளிர்பானத்தை அவளது அறைக்கே கொண்டு போனேன்.

``அப்பாடா.....`` கொஞ்சம் ஆறுதலாகக் கூறியவள் தொடர்ந்தாள்....

``மதினி ஒரு யானையைத் தின்கிற பசி எனக்கு....குளிச்சிட்டு வர்ரேன்.... சாப்பாட்டைப் போடுங்க....`` செல்லமாக எனது முகத்தைத் தட்டியபடியே குளியலறைக்குப் போனாள்.

டெலிபோன் மணி ஒலித்தது.

``நான்தான் பேசுறன்..... சல்ஹா வந்துட்டாவா?`` என் கணவர்.
``ஓ.... இப்பதான் வந்தா....பசிக்கு சாப்பாட்ட போடுங்க என்று சொல்லிவிட்டுக் குளிக்கிறா.....``

``நான் சாப்பாட்டுக்கு வர்ரப்போ.... எனது பழைய நண்பன் றஹீமையும் கூட்டிக்கிட்டு வர்ரேன்.. இன்னும் ஒரு முப்பது நிமிஷத்துல வருவோம்..... முக்கியமான விஷயமா வந்திரிக்கான்..... ஏதாவது ஸ்பெஷலா செய்து வைங்க.....``

``ம்....பெரிய வேலை...... சொல்லிட்டுக் கூட்டிக்கிட்டு வர நெனைச்சது..... வழமையா.... சொல்லாம கொள்ளாமத்தான் யாரையாவது கூட்டிக்கிட்டு வருவது வழக்கம்....`` என்று நினைத்துக் கொண்டே பணியில் இறங்கினேன்.

``மதினி.....சும்மா சொல்லக்கூடாது ஒங்கட கைக்கு வைர மோதிரம்தான் செய்து போடணும்... ஒங்கட கையில எப்டித்தான் இப்படி ஒரு புது ருசி எங்கிருந்துதான் வருதோ....``

``சல்ஹா...... சும்மா ஐஸ் வைக்க வேணாம்...... இத்தன நாள் சொல்றியே... ஒரு பித்தள மோதிரமாவது வாங்கித் தந்திரிக்கிறியா?

``பொறுங்களேன் மதினி நான் வாங்கித் தர்ரேனா இல்லையாண்டு?

வாசலில் கணவரின் மோட்டார் சைக்கிள் நிற்கும் சத்தம்..... வந்தவர்களுக்கு உணவு பரிமாறினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் கணவர் என்னிடம் சொன்னார்...
``இவன் ரஹீம்.....தங்கச்சி சல்ஹாவுக்கு ஒரு மாப்பிள்ளை பாத்திரிக்கான்..... அதச் சொல்லத்தான் வந்திரிக்கான்.... என்றார்.

ஹாலில் அவர்கள் உட்கார, நான் பக்கமாக நின்று கொண்டேன்.

``சொல்லுப்பா......`` என்கணவர் கேட்டார்.
``மாப்புள நெறைய படிச்சவரு...... மூனு பட்டங்கள் இரிக்கி... அதோட அந்த இஸ்லாமிய இயக்கத்துலயும் பெரிய பதவி வகிக்கிறாரு..... கொழும்புல ஹேக்கன்ஸ் கொம்பனியிலதான் மெனேஜர் வேல.... கொம்பனியே கார்..... பங்களா எல்லாம் குடுத்திருக்கு...``

நிறுத்திய ரஹீம் என் கணவரைப் பார்த்தார்.

``சொல்லுப்பா ரஹீம்.....இனி....``

``தங்கச்சியப் பத்தி நான் சொன்னபோது அவருக்கு விருப்பம்... ஆனா...``

``என்ன ரஹீம்...பொறத்தி ஆளுகிட்ட கதைக்கிற மாதிரி என்கிட்டயும் தயங்குறயே.....``

``ஒன்னுமில்ல... அவரு எதைச் செய்தாலும் அவரு சேர்ந்திரிக்கிற இயக்கத்துக்கு கெட்ட பேரு வராம செய்யப் பாக்குறாரு.... அதனால.... இந்தக்கலியாணமும் அதுக்கேத்தாப்போலத்தான் நடக்கணும் என்டு விரும்புறாரு......``

``ஓ.... அவ்வளவுதானே..... நீ சொல்ற இயக்கம் என்னப்பா.... இஸ்லாமிய இயக்கம் தானே.... நாங்க மட்டும் என்னா..... முஸ்லிம் அல்லாதவங்களா? நாங்களும் அல்லாடயும் ரஸுல்டயும் வழியில போறவங்க தானே..... சொல்லு....``

``அதுவந்து....மாப்புள சீதனமா காசோ, நகையோ எடுக்க மாட்டாரு..... பள்ளிவாசலல்தான் ``நிக்காஹ்`` நடக்கணும் என்பதால ரெஜிஸ்டர்ல இதுகள எழுதக் கூடாது... ஆனா... அவருக்கு வீட்டில கொண்டாந்து இதுகள தந்துடட்டாம்.....``

``ஓ....``

``அப்புறமா....தாலி என்டு சவடி போடறது இஸ்லாத்தில இல்லாததாம்.... அவரு சபையில பணம் வாங்கினா, இப்படி தாலிகட்டினா எல்லாம் அவரது இயக்கத்துக்கு சரியில்லயாம்... ஆனா....கொறைஞ்சது ஏழு பவுனுக்காவது சவடிய செய்து தரட்டாம்.. இது....ஒங்கட தங்கச்சிக்கு நாலு எடத்துக்குப் போறப்போ போட்டுக்கிட்டுப் போக தேவையாம்.``



``ஓ.....`` எனது கணவரின் இந்த ``ஓ``வில் சற்று சூடு ஏறியிருப்பதை என்னால் உணர முடிகிறது.

``சொல்லுங்க ரஹீம்.... வேற என்ன? ``என் கணவரின் தொனியில் ஏளனமா? நையாண்டியா? கோபமா? என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

``வந்து...... தங்கச்சிக்குள்ள வயலையும் காணித்துண்டையும் ரெஜிஸ்டருக்கு முன்னமே அவவுட பேரில எழுதிடனுமாம்.....``

``ரஹீம்...... ஏற்கனவே அவவுட சொத்து அவவுட பேருலதான்'பா இரிக்கி.... வேற என்ன விஷயம்'னு சொல்லு....``

``கலியாணம் முடிஞ்ச பொறவு முழுசா இஸ்லாமிய உடைதானாம் தங்கச்சி உடுக்கணும்....``

``வேற.....``

``கலியாணம் கூட இஸ்லாமிய மொறைப்படி தான் நடக்குமாம்... இப்படியெல்லாம் செய்யாட்டி அவரு சேர்ந்துள்ள இயக்கத்துக்குச் சரியில்லயாம்... அதுவும் அவரு அதுல பெரிய பதவியும் வகிக்கிறாரு..... இதனால எதைச் செய்தாலும் அந்த இயக்கத்துக்குக் கெட்டபேரு வராமத்தான் அவரு செய்யப் பாப்பாரு......``

``ர.....ஹீம்.. இங்க பாரு.....நீ புரோக்கர் இல்ல ஏன்ட பழைய ```பரன்ட்``..... இதனால ஒன்ன சும்மாவிடுறன்.... இல்லாட்டி... புரோக்கரா இருந்தா கழுத்த புடிச்சித்தான் வெளிய தள்ளியிருப்பன்... இயக்கமாம்.... பெரிய இயக்கம்.....``

நான் பயந்து விட்டேன்.
ஏடாகூடமாய் எதுவும் நடந்துவிடக் கூடாதே.

``நா...னா...`` உள்ளே இருந்து சல்ஹாதான் அழைத்தாள்.

``நா...னா... இந்த மனுஷன் பேசினத எல்லாம் நானும் கேட்டுகிட்டுத்தான் இருந்தேன்... அவர ஏசாதீங்க... அங்க சொன்னதத் தானே இவரு வந்து சொல்றாரு.....எனக்கு இந்தப் போலி வேஷக்கார மாப்பிள்ளை வேணாம் நானா...`` தீர்க்கமாகச் சொன்னாள்.

``ரஹீம்...இப்ப அந்த மாப்பிள்ளை சொன்னதை எல்லாம் எனக்கிட்ட நீ சொன்னே... இதே போல நான் சொல்றதையும் அப்படியே போய் அவருகிட்ட சொல்லுவியா.....``

பரிதாபமாகப் பார்த்தான் ரஹீம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

``இங்கபாரு.... இயக்கங்கள் இருக்கிறது இஸ்லாத்தைப் புரிஞ்சி.... மத்தவங்களுக்கும் இதமா புரிய வைக்குறதுக்குத்தான். அதுகள்ல பெரிய பதவிகளை பெற்று தங்கட கௌரவத்த ஒசத்திக்கிறதுக்கு இல்ல... அவரு சார்ந்துள்ள இயக்கத்தில அவருக்கு உண்மையான பற்று இருந்தா அவரு என்ன செய்யணும் சொல்லு?

``நீங்க சொல்றது புரியுது.....``

``ஆமா சீதனத்தை மறைச்சி வாங்கி வேஷம் போடுறானே... இவனெல்லாம் மூனு டிகிரி இல்ல முப்பது டிகிரிகள் வாங்கினாலும் என்ன பயன்? மகர கொடுத்து மணப்பெண்ணை எடுக்க இந்த இஸ்லாம் சொல்ல.... சீதனத்த மறைச்சு மறைச்சு வாங்கி பெரிய இஸ்லாமிய இயக்கத் தலைவர்களெண்டு வேஷம் போடுற அவனுகள விட சபையிலே தைரியமாக கைநீட்டி நாலுபேர் சாட்சியாக சீதனத்தை வாங்குறான்களே அவனுக நல்லம் என்று அந்தப் பெரிய மனுஷன்கிட்ட நீ சொல்லணும் ரஹீம்....``

ரஹீமால் பேசமுடியவில்லை.

``இந்த மாதிரி வேஷம் போடுறவன்களால இஸ்லாத்துக்கும் அவமானம்.... இஸ்லாமிய இயக்கங்களுக்கும் கெட்ட பேரு என்டு அவன்கிட்ட சொல்லு.....சீதனம் என்ற யாவாரத்தையும் கள்ளக் கடத்தல் யாவாரமாக்குற இவனுகள்ட வேஷம் கலையும் என்டும் சொல்லு

``போதும்...போதும்`` ரஹீம் கெஞ்சினான் நான் இருவருக்கும் குளிர்பானம் கொண்டுவந்து கொடுத்து நிலைமையைச் சமாளிக்கப் பார்க்கின்றேன்.

இருவரும் போய் விட்டார்கள்.

சல்ஹா வந்து பக்கத்தில் உடகார்ந்தாள்.

``அப்பாடா... என்ன மனுஷங்க மதினி பார்த்தீங்களா.....

``அதானே சல்ஹா மதினி...... இவனுக என்னா மனுஷங்க... அவருக்கு எல்லாம் வேணுமாம். அதுக்கெடயில அவருட இயக்கமாம்.... பெரிய இயக்கம் அங்கயும் அவருட பேரு கெட்டுடாம இரிக்கணும்...

``ஓ.... நம்மட சமுதாயம் எங்க தான் போய்கிட்டு இரிக்கோ... எனக்கு ஒன்டும் புரியல்ல....``

புரிகிற காலம் வரத்தான் செய்யும்.

வேஷங்கள் கலையத்தானே வேண்டும்?...



# ``மணம் வீசாத திருமணங்கள்``

இத்தனை நீண்ட இடை வெளியின் பின்னர் இப்படி ஒரு சந்திப்பா? சர்மிளாவால் இதை நம்பிக்கொள்ளவே முடியவில்லை.

ஓ.....வாழ்க்கையின் விந்தையை என்னவென்று தான் சொல்வது?

இதுகனவா?நனவா?கற்பனையா?

காமிலாலும் தான் நம்பமுடியவில்லை.

வியப்பு தாங்காத அதே நேரம் மகிழ்ச்சியும் அதிர்ச்சியும் கலந்த ஓர் நிலையில் இருவரும் ஒவ்வொரு வார்த்தைகளுடன் தங்களுக்குள் மௌனித்தனர்.

``ஆ...சர்மிளா நீ...நீ...நீங்களா?``

``காமில் நீங்களா?``

உட்கார்ந்திருந்த வரிசை நாற்காலிகளில் இருந்து எதேச்சையாக ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டபோது தான் இந்த அரிய சந்திப்பு.

அந்த அறை - நீண்ட ஹால்....முழுவதும் வரிசையாக பல்வேறுபட்ட மக்கள்... ஆண்கள், பெண்கள் பலவயதினர்...வெளியில் ஏராளமானவர்கள்....மென்மையான உரையாடல்கள்....காரசாரமான கருத்து வெளிப்பாடுகள்..... அழுகை.....முறையீடு.....எப்படி பதில்சொல்ல வேண்டும் என்று கற்றுக் கொடுத்தல். இத்தியாதி. இத்தியாதி....

ஆம்....இது ஒரு ``காதிக்கோடு``



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது முஸ்லிம் திருமண - விவாகரத்துக்களை விசாரிக்கும் நீதிமன்றம்...உள்ளே ஒவ்வொருவராய் அழைத்து விசாரணை நடந்து கொண்டிருக்கிறது.

சர்மிளா இந்த ``காதியாரை`` அதாவது இந்த நீதிபதியைக் கண்டு சில தகவல்களைப் பெற்று சர்வதேச ரீதியில் ஒரு மகாநாட்டிற்குத் தான் சமர்ப்பிக்கவிருக்கும் ஆய்வுக்கட்டுரையை செம்மையாக்க வந்திருக்கின்றாள்.

ஆனால்......காமில்.....?

கேட்பதா?

கேட்பது நாகரிகமா?

``எத்தனை வருட இடைவெளிக்குப் பின் சந்திக்கின்றோம்....?``

இருவருமே மனத்தால் நினைத்து மீண்டும் மௌனித்தனர்.

அங்கிருந்த கூட்டம்....இவர்கள் இருவருக்கும் இடையில் இருந்த ஐந்தாறு நாற்காலிகளின் இடைவெளி.... ஒன்றையும் கேட்டுக் கொள்ள வாய்ப்பளிப்பதாயில்லை.

சர்மிளாவின் - ஏன் காமிலதும் தான். மனங்களில் ஒரே நேரம் ஒரே வகையான கடந்தகால இரைமீட்டல்... நினைவுச்சுருள்கள்...வெகுவேகமாக ``ரிவைன்டாகி`` மீண்டும் மனத்திரையில் ஒளிபரப்பாகின...

அது மிகவும் இனிமையான தூய்மையான அன்பில் ஆரம்பித்து ஆபாசமோ, அசிங்கங்களோ இல்லாமல் அன்பைப்பரிமாறி..... மனங்களிரண்டும் ஒன்றாய்க் கலந்து இறுதியில் சோகமுடிவைத்தந்த கதை.

அந்தச் சோகத்தின் சுமைகள் இருவரையும் அரக்கத்தனமாக அழுத்தியது. பயங்கர பூதத்தின் கைகளிலே மென்மையான பச்சைக் குழந்தையொன்று நசுக்கப்பட்டு..... அதன் குருத்தெலும்புகள் சுக்குநூறாக நொறுக்கப்பட்டது போன்ற - அல்ல - அதையும் விட மோசமான வேதனை... அந்த வேதனையை இருவருமே நெஞ்சுக்குழிக்குள் போட்டு தாமாகவே மூடிக்கொண்டபோது அவர்கள் பட்ட வேதனை அதை இறைவன் மட்டுமே அறிவான்.

பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு முடிந்து வெளியேறிய இருவருமே இரண்டு இடங்களில் நல்லதொழிலில் அமர்ந்தனர். இருவரது குடும்பமுமே கிட்டத்தட்ட ஒரே பொருளாதார நிலையில் உள்ளவைதான். இதன்பின் விருப்பப்படி மணம் முடித்து நிம்மதியாக வாழலாம் என்று



நினைத்த நினைப்புத் தான் நடக்கவில்லை.

காமிலின் தந்தை மன்சூர் இளைப்பாறிய ஒரு கிளார்க். அவர் பிடிவாதமாக புரோக்கர்மாரிடம் சொல்லிவிட்டார். ``ஏன்ட மவனுக்கு என்ன கொறச்சல்`` ஒரு பட்டதாரி.... எவ்வளவு கஷ்டப்பட்டு படிக்க வச்சிருக்கன். கை நெறய சம்பளம் எடுக்கிறான்.... பத்துலட்சம் காசும்....கொழும்புல ஒரு வீடும்....ஒரு வாகனமும் தார எடமா பேசுங்க....``

இந்தக் கண்டிப்பான உத்தரவு அவனை கதிகலங்கச் செய்து விட்டது.

இவற்றைக் கொடுக்க சர்மிளாவின் குடும்பத்துக்கு இந்த ஜென்மத்தில் முடியாது.

காமில் தாயிடம் கெஞ்சிப் பார்த்தான்.

``உம்மா... இதென்ன உம்மா...வாப்பாட புடிவாதம்... நான் எப்படி அப்படி மாசம் ஐம்பதாயிரம் அறுபதாயிரமா சம்பளம் எடுக்கிறன்? இது அநியாயம் இல்லையா?``

உம்மா சொன்னார்.....

``அநியாயம் இல்ல...காமில் மவன்...நியாயம் தான்....ஒங்கட சம்பளத்துல மிச்சப்படுத்தி நீங்க எப்ப காணிவாங்குறது....எப்ப வீடு கட்டுறது...எப்ப வாகனம் வாங்குறது....காச சம்பாரிச்சி வச்சிரிக்கிறவங்க தரட்டுமே.... இப்ப இந்த ஊரில எத்தனை திரீவில் ஓட்டுறவங்க பொட்டிக்கட வச்சிக்கிறவங்க எல்லாம் லெச்ச லெச்சமா சீதனம் வாங்கல்லயா... நாங்க மட்டுமா கேக்குறம்....?``

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் என்று சொல்லி வைத்தது பொய்யாகுமா என்ன?

காமிலின் மனம் கரையத்தான் செய்தது. சர்மிளாவின் காதலுக்கு வீடு - பத்து லட்சம். வாகனம் என்ற தடைகள் இடப்பட்டன. அந்தத் தடைகளை அவளின் சாதாரண குடும்பத்தால் தாண்டி வர முடியவில்லை.

மூன்றாம் வகுப்புக்கூட ஒழுங்காகப் படிக்காத எந்தவித ஆற்றல்களும் இல்லாத வஹீதாவை டாம்பீகமாக காமில் திருமணம் செய்தான். பத்து இலட்சம் விலைகேட்ட மகனுக்கு பதினைந்துலட்சம் விலையையே வஹீதாவின் தந்தை கொடுத்தார்....கொழும்பில் வீடு..... அழகான பென்ஸ்கார்.....

சர்மிளா எல்லாவற்றையும் கனவுபோல் மறக்க முயன்று கொண்டிருந்தாள்.........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்மிளாவின் பெற்றோர் ஒரு கல்வி கற்ற மருமகனைத் தேடும் முயற்சியில் ஈடுபட்ட போது... படித்த மருமகனுக்கான ``சீதனவிலையை``அவர்களால் கொடுக்க முடியாமல்... சமூதாயத்தின் மீதே வெறுப்புக் கொள்ளத் தொடங்கினர்.

``சே.. என்ன மனுஷன்கள்..ஆம்புளப்புள்ள படிச்சா அவனுக்குக் கொழுத்த சீதனம் வேணுமாம்..பொம்புளப்புள்ள படிச்சா.. அது கணக்கில்ல......``

விரக்தி....வெறுப்பு....கவலை....இவற்றால் கவலைப்படும் சர்மிளாவின் பெற்றோரைத் திருப்தி படுத்துவதற்காக நடந்ததுதான் சர்மிளா-ரஹீம் திருமணம்.

சீதனம் வேண்டாம் என்று திருமணம் செய்தான் ரஹீம். ஒரு சிறிய கடையின் சொந்தக்காரன். கல்வியைப் பொறுத்தளவில் ``இதெல்லாம் சும்மா.... பணக்காரன் எல்லாம் படிச்சவங்களா?`` என்று வாதிப்பவன்.

வியாபாரத்தை விட்டால் மனைவி,வீடு,பிள்ளைகள் எல்லாம் இரண்டாம் பட்சம் தான்.

இரவு பத்துப் பதினொரு மணிக்கு வீடுவரும் ரஹீம், காலையில் நித்திரையிலிருக்கும் போதே குழந்தைகள் பாடசாலை போய்விடுவார்கள்...சர்மிளாவும் வேலைக்குப் புறப்பட்டுவிடுவாள்....மிக விரைவிலேயே ரஹீம் அவளை வேலையிலிருந்து நிறுத்திவிட்டான்...வீட்டில் தனிமையில் இருக்கும் போது அவளுக்குப் பைத்தியமே பிடித்துவிடும் போல் இருந்தது...

வாழ்க்கையில் வியாபாரத்தை விட்டால் வேறு ஒன்றையுமே பேசாத, நினைக்காத, பேசத்தெரியாத ரஹீமோடு வாழுவது நரகமாகப்பட்டது. ஆசைக்கு ஒரு பயணம் இல்லை......பிஸ்னஸ்....பிஸ்னஸ்....ஒரே பிஸ்னஸ் தான்.

கருத்து முரண்பாடுகள்....வாய்ச்சண்டைகளாகின. ``ஒன்ன சீதனம் எடுக்காம நான் கலியாணம் முடிச்சேன் இல்ல..... அந்தத் திமுருதான் ஒனக்கு.... சீதனம் தர வக்கில்லாம தானே ஒங்க வாப்பா இரிந்தார்....``

இந்த வார்த்தைகள் அடிக்கடி அதிகரித்தன. சீதனம் எடுக்காததைச் சுட்டிக்காட்டிக் கொண்டிருந்த போதெல்லாம் சர்மிளா கூனிக்குறுகிப் போனாள்.

``டேய் மடையன்களே....எந்தக் குர்ஆனில் எந்த ஹதீஸில் சீதனம் கேட்கச் சொல்லி இருக்கடா? பெண்கள் கேடகும் ``மஹரை``க் கொடுக்க உங்களால் முடிகிறதா?`` என்று உலகத்துக்கே கேட்க உரத்துக் கத்த வேண்டும்



போல் சர்மிளாவுக்கு இருக்கும். இரு கைகளாலும் நெஞ்சத்தை அழுத்தி அந்த உணர்ச்சிகளை அடக்கிக் கொள்வாள்.

சர்மிளா - ரஹீம் குடும்பவாழ்க்கை நாளுக்கு நாள் விரிசலடைந்தது..

வேலையை விட்ட அறியாமையை எண்ணிக்கலங்கினாள். விரிசல் ஒரு நாள் தலாக்கில் முடிந்தது. ரஹீமாகவே தலாக் சொல்லி விட்டான்.

இரண்டு குழந்தைகளுடன் சர்மிளா இப்போது தனித்து வாழ்கிறாள்

அவளது பெற்றோரின வீட்டில தனியாக ஒரு பகுதியில்,..ஒருதனியார் பாடசாலையில் வேலைகிடைத்தது..... ரஹீமிடமிருந்து குழந்தைகளுக்கோ தனக்கோ எந்த தாபரிப்பும் தேவையில்லை என்று கூறிவிட்டாள்....

பல்கலைக்கழகத்திலே முதுமாணிப்பட்டத்துக்கும் படிக்கிறாள்.

``ஏய் ரஹீமே.....ஏ... சீரழிந்த என் சமுதாயமே நீங்களெல்லாம் என்னைக் கீழே போட்டு மிதிக்க நினைத்தாலும் நான் மிதிபடமாட்டேன்`` என்று நிமிர்ந்து நிற்கிறாள் அவள்.

காமில்.....

பணம்,பங்களா,கார் என்பவற்றிற்காக அவன் தன் வாழ்க்கையைப் பலியிட்டான்.

திருமணமான சில நாட்களிலேயே வஹீதா மூளைவளர்ச்சியில் மிகவும் குறைந்தவள் என்பது தெரிவந்தபோது அவனது வாழ்க்கையில் பெரிய இடிவிழுந்தது.

வாழ்க்கையின் மகிழ்ச்சியை, நிம்மதியை திருப்தியை பணமும் - பங்களாவும் - பென்ஸ°ம் தராது என்பதை உணரும் ஒவ்வொரு கணத்துளிகளிலும் அவன் சர்மிளாவை நினைக்கத்தவறவில்லை.

அவளின் அறிவாற்றல்,பண்பு, பணிவு என்பவற்றை எண்ணி ஏங்கத் தொடங்கினான்.

தான் ஒரு ஆண்மகனாக இருந்தும் தைரியமாக சர்மிளாவைக் கைப்பிடிக்க முடியாத கோழையாகி விட்டதை நினைத்துக் கைசேதப்பட்டான். எங்கெல்லாமோ சுற்றிவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரங்கழித்து வீட்டுக்கு வரத்தொடங்கினான். வஹீதாவோடு கதைப்பதைத் தவிர்த்தான்.

எத்தனை விடுமுறைகள் கிடைத்தாலும் அவளோடு எங்கும் செல்ல முடியவில்லை; நண்பர்களை அறிமுகப்படுத்த முடியவில்லை....ஓ..... அவனுக்குப் பைத்தியமே பிடித்து விடும் போலிருந்தது.

இடையில் வஹீதாவின் தந்தையின் கெடுபிடிகள்.... குத்தல் பேச்சுக்கள்....

``என்ன.....மவேன்...சொணங்கி வீட்டுக்கு வர்ரீங்க ளாமே.... லெச்ச லெச்சமா... சீதனம் வாங்க முடிஞ்சது போல ஒழுங்கா வாழவும் தெரியணும் இல்ல..... புள்ள வஹீதாவை ஏன் நீங்க எங்கயுமே கூட்டிக்கிட்டு போறதில்ல...... ஒங்களுக்கு நாங்க என்ன கொற வச்சோம்....காசு தரல்லயா? பங்களா தரல்லயா? கார்தரல்லயா? கிட்டத்தட்ட எழுபத்தைஞ்சு பவுண் நகை போட்டுத்தானே புள்ளையைத் தந்தோம்.......``

``ஹோ......`` வென்று தலையைப் பிய்த்துக் கொண்டு கத்தினான் காமில்.

``சர்மிளா.....ஒரு வாடகை வீட்டில ஒரு குடிசையில.... நானும் நீயும் வாழ்ந்திருக்கலாமே`` என்று அவனது மனம் பேயிரைச்சலிட்டது.

எல்லாம் காலங்கடந்த ஞானம்!

இப்போது மூன்றாவதும் - கடைசியுமான தலாக் சொல்லத்தான் காமில் வந்திருக்கின்றான்.

இறைவா? இப்படியும் இழிநிலைகளா?

கூட்டம் சிறிதுசிறிதாகக் குறையத் தொடங்கியது.

இறுதியாக சர்மிளா உள்ளே காதியிடம் சென்று தகவல்களைப் பெற்றாள்.

``மிஸ் சர்மிளா....ஏன் தான் இந்தப் பொறுப்பை நான் பாரம் எடுத்தேனோ....எனக்கு பெரிய கஷ்டமாக இருக்கு..... எங்கட சமூகத்துல கலியாணம் கூட நடக்குதா.....தலாக் கூட நடக்குதா என்டு எனக்கு சந்தேகமா இருக்கும்மா.... பத்துப்பதினாறு வயசுப் புள்ள கையில புள்ளையோட தலாக் பண்ணுது...உம்மா வாப்பா செய்து வச்சதுகளும் மோசமாயிடுது....அவங்களா விரும்பிச் செய்துகிட்டதுகளும் மோசமாயிடுது.



ஆமா....இதுக்கு என்ன காரணம் என்று நீங்க நெனைக்கிறீங்க...?

``ஒன்டாரெண்டா...எக்கச்சக்கமான காரண ங்கள்...கலியாணம் எண்டதும் சீதனத்தத்தான் மொதல்ல பாக்குறாங்க.....அடுத்து.....எந்த ஹோல்ல எப்படி ஆடம்பரமா...ஊரே வியக்குறமாதிரி செய்யலாம் என்று பாக்குறாங்க....நம்ம வீட்டுக்கலியாண தடபுடல்கள் நாலுபத்துப்பேர் பாராட்டனும் என்று பாக்குறாங்களே தவிர நம்ம புள்ளைகள் நல்லா வாழணும் என்று பாக்குறாங்க இல்ல......``

``உண்மைதான் காதியாரே.....ஒரு கலியாணம் என்றாலே தாய்தகப்பனுக்குப் பயம்...மொதல்ல முன்னுக்கு வருவது சீதனம் தான்...``

``மிஸ் காமிலா.....சிலர் ஒன்றும்தேவையில்ல ஒரேஒரு வீடுதாங்க என்று சொல்றாங்க... இன்னும் கொஞ்சம் பேரு வேற ஒண்ணும் வேணாம்.... ஒரு எழுபத்தைஞ்சு பவுணுக்கு நகை போட்டால் போதும் என்கிறாங்க.... ஆம்புளப் புள்ளைகளை படிக்க வச்ச ஒன்று ரெண்டு பேரு எல்லாத்தை யுமே கேக்குறாங்க......``

``உண்மையேதான் காதியாரே.... உள்ளவனும் கேக்குறான். இல்லாதவனும் கேக்கிறான் உள்ளவங்க கிட்டயும் கேக்குறாங்க.... இல்லாதவங்ககிட்டயும் கேக்குறாங்க.....இதுக்கு ஒரு முடிவேயில்லையா?``

``ம்....எங்கட சமுதாயத்தை அந்த அல்லாதான் காப்பாத்தணும்....இது மனுஷன் சொல்லித் திருந்துற சமுதாயமே இல்லம்மா....``

சில நிமிடத்துளிகள் இருவருமே மௌனித்தார்கள்.

சர்மிளாதான் ஆரம்பித்தாள் காதியாரே...``நம்ம முஸ்லிம் வாலிபர்கள் படிக்காமலேயே இருந்திட்டா நல்லா இரிக்குமா என்டு கூட நான் சில நேரம் யோசிப்பேன்....``

வியப்புடன் ஏறிட்டார் காதியார்.

``நெசந்தான் ......படிச்சவங்க....உதாரணமா எனக்கு முன்னும்...என்னோடையும் - எனக்கும் கொஞ்சம் பின்னும் படிச்ச எங்கட வாலிபர்கள் யாருமே எனக்குத் தெரிய சீதனம் எடுக்காம கலியாணம் செய்யவே இல்ல..... சிலருக்கு கொழுத்த சீதனம் தானாகவே தேடி வந்தது... சிலர் கேட்டு எடுத்தாங்க..... ஆனா.....``



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

``மிஸ் சர்மிளா நீங்க சொல்லாதீங்க... நானே சொல்றன்...சீதனத்த வாங்கினவங்கள்ல மிச்சம் பேருட வாழ்க்கை சீரழிஞ்சுதான் போச்சு.... மனைவி மாமா மாமியிட அடிமையா வாழ்ற அவலம் உம்மா அது...``

``இன்னொரு விஷயம் காதியாரே.... சீதனம் இல்லாம கலியாணம்செய்தாங்களே...அவங்க தொட்டத்துக்கெல்லாம் சீதனம் தர லாயக்கற்றவ என்டு வார்த்தையாலே சுட்டுப்பொசுக்குறாங்க....இதுவும் மகா கொடுமையில்ல...`` இதைச் சொல்லும் போது ரஹீமால் அவள் அனுபவித்த வேதனை தொண்டைக் குழிக்குள் பாறாங்கல்லாய் இறுகியது.

``மிஸ் சர்மிளா....`` அவருக்கும் என்ன பேசுவதென்றே விளங்க வில்லை.

ஒரு காதியாரும், ஒரு சர்மிளாவும் பேசிமுடிக்கிற விடயமா இது?

இது இந்தச் சமுதாயத்தின் அழிவுக்கான சார்ஸ் நோயா? மலருக்கு மணத்தை செயற்கையாகவா கொடுக்க முடியும்.?

(யாவும் கற்பனையே)



# அவன் எடுத்த முடிவு......

ரஹ்மான் தன் அறையில் இங்கும் அங்குமாய் கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு நடந்து கொண்டிருந்தான். அவனது உள்மனதின் சிந்தனைச் சிதறல்களின் எதிரொலியே இந்த நடை!

``சே... இதென்ன வாழ்க்கை....`` அவனுக்குள்ளாகவே எழுந்த சலிப்பு... ``பேசாமல் மீண்டும் சவூதிக்கே போய்விடுவோமா`` என்ற எண்ண அலைகள் பயங்கரமாக உள்ளத்துள் எழ,ரஹ்மான் தொப்பென தன் படுக்கையில் விழுந்தான்.

``இதென்ன கஷ்டம்....ஏன் எனக்கே இப்படித் தொடர்ந்து நடக்க வேண்டும்?`` தன்னையே கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் இருந்தவனின் கண்கள் உடைப்பெடுத்தன.

புறங்கைகளால் கண்களைத் துடைத்துக் கொண்டவனாக தனது சூட்கேஸில் சில உடைகளையும், பாஸ்போட்டையும் போட்டு மூடியவன், கைகளில் கிடைத்த உடைளை மாற்றிக் கொண்டான். தலையைக் கூட ஒழுங்காகச் சீவிக்கொள்ளவில்லை.

அறைக்கதவைத்திறந்தவனுக்கு வீட்டிலுள்ளவர்களுக்கு சொல்லிக் கொள்ள வேண்டும் போல் தோன்றவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே வந்த போது அவனது மூத்த சகோதரியின் கணவன் தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டு சிகரட் புகை கக்க ஹாய்யாக உட்கார்ந்திருந்தார்.

அவர் - தாரிக்-

ரஹ்மானுக்கு அவரைப் பார்க்கக் கூட விருப்பம் வரவில்லை.

பேசாமல் படிகளில் இறங்கி விறுவிறுவென நடந்தான்

வீட்டுக் குறுகிய பாதை சந்தித்த இடம் கண்டி கம்பளை நெடுந்தெருவில் கஹட்டப்பிட்டிய சந்தி. வழமை போல பல ஆட்டோக்கள் வரிசையாக நின்றன.

``தொரே......வாங்க......"

அழைத்தவன் ம:ரூப்- ரஹ்மானோடு கம்பளை ஸாஹிராவில் ஒன்றாகக் கற்றவன்... படிப்பை இடையிலேயே நிறுத்திக் கொண்டவன். ஏனோ ரஹ்மானை நண்பனாகப் பார்க்காமல் உயரிடத்தில் வைத்து ``தொர`` என்றே கதைக்கின்றான்.

``ம:ரூப்.....என்னப்பா எனக்குப் போய் நீ ``தொர`` போட்டுக்கதைக்கிற...`` என்றவனாய் அவனுடைய ஆட்டோவில் ஏறிக் கொண்டான் ரஹ்மான்.

``எங்க தூரவா...?`` பயணத்தைத் தொடங்குமுன் வழமையான கேள்வியை ம:ரூப் கேட்க ``பஸ்ஸ்டான்டுக்குத்தான்....கொழும்பு ஹோல்டில விட்டுடு``

ஆட்டோ வேகமெடுத்து விரைந்தது .சில நிமிடங்களில் பஸ்நிலையம் வந்துவிட்டது.

றஹ்மான் இறங்கிக் கொண்டு, இருநூறு ரூபாய்த்தாளை ம:ரூபிடம் கொடுத்தான். மிகுதிப் பணம் கொடுக்க ம:ரூப் தனது பர்ஸை எடுத்த போது ரஹ்மான் கேட்டான்...

``ம:ரூப் எத்தனை புள்ளைகள் இரிக்கி!``

``எனக்கு இப்போதைக்கு ரெண்டு... வைப்ப பா கெடைக்க இரிக்கி.....`` வெட்கத்தோடு கூறினான் ம:ரூப்..

ரஹ்மானின் மனதில் ஏதோ நெருடியது.

``ம:ரூப்....பெலன்ஸ் தராத... புள்ளகளுக்கு ஏதாவது வாங்கிக் கொடு.... ரொம்ப சந்தோசம். அப்ப நான் போயிட்டு வர்ரேன்`` ம:ரூபின் முதுகில் மெல்லத்தட்டி விடைபெற்றான் ரஹ்மான்.



ஆட்டோ ஓட்டும் ம:ரூபின் வாழ்க்கையில் உள்ள ஏதோ ஓர் நிறைவு தன் வாழ்க்கையில் இல்லையே என்ற குறை மனதைக் குடைந்தது. கொழும்பு செல்லும் இன்டசிட்டி`` பஸ்ஸில் ஏறினான். பஸ் புறப்படத் தொடங்கியது.... முன்னோக்கி பஸ் செல்ல...எண்ண அலைகள் பின்னோக்கிச் செல்லத் தொடங்கின.

ரஹ்மானின் குடும்பம் நடுத்தரமானது. அவனுக்கு இருபது வயதிருக்கும் போதே தந்தையை இழந்துவிட்டான். இரண்டு மூத்தசகோதரிகள்... அடுத்து இரண்டு தம்பிகள்....அதற்குப் பின்னரும் மூன்று சகோதரிகள்.. வீடு நிறைய பிள்ளைகள்......இருப்பதற்கு ஏதோ ஒரு சிறிய வீடு கம்பளை இலங்கம்வத்தையில் சொந்தமாக இருந்தது.... அவ்வளவு தான்.

குருவியின் தலையில் பனங்காயாய் அத்தனை சுமைகளும் ரஹ்மானின் தலையில் நிறுத்தப்பட்டன. எப்படி எப்படியோ முயற்சி செய்து சவூதி போனான் ரஹ்மான். வெறும் வீட்டுச்சாரதியாகத்தான் அவனால் போகமுடிந்தது.

சவூதியில் வீட்டுச்சாரதியாகப் போனவர்களளுக்குத்தான் அந்த வேலையின் சிரமங்கள் தெரியும்... சாப்பிட,நித்திரைகொள்ளக்கூட நேரமில்லாது.....பல நேரங்களில் வீட்டுவேலைகளையும் செய்து, உழைத்த பணம் படிப்படியாக ரஹ்மானின் வீட்டின் வாழ்க்கை முறையை மாற்றிக் கொண்டே வந்தது....

மூத்த சகோதரிகள் இருவரது திருமணத்தையும் செய்து முடிக்கும் போது ரஹ்மானின் வயதில் எட்டு கூடிவிட்டது. அடுத்த வருடமே மூத்த தம்பி யாருக்கும் தெரியாமல் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டான்..... அத்திருமணத்தின் மூலம் குடும்பப் பந்தத்திலிருந்தும் அவன் பிரிந்து தனியே சென்று விட்டான்....

அடுத்தடுத்து நின்ற இளைய சகோதரிகளது திருமணங்களையும் முடிக்க அவன் பட்ட பாடு.......ரஹ்மான் வெளிநாட்டில் இருப்பதை அறிந்து மாப்பிள்ளை வீட்டார்கள் அவனைச் சுரண்டிய விதம்...அதுமட்டுமல்லாது திருமணம் செய்த சகோதரிகளின் பிள்ளைப்பேறுகள்... குழந்தைகளின் பெயர்சூட்டும் விழாக்கள்...பெருநாட்கள்.. திருநாட்கள்....ஓ...சவுதிக்கு அவனை நோக்கி வரும் எந்த ஒரு கடிதமும் ஏதோ ஓர் தேவையைக் குறிப்பிடாமல் வந்ததில்லையே..

ரஹ்மானுக்கு வயது கிட்டத்தட்ட நாற்பதை எட்டியபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் வீட்டார் அவனது திருமணத்தைப் பற்றி சற்றே யோசிக்கத் தொடங்கினார்கள். கடந்த இருமுறை விடுமுறைக்காக வந்தபோதும் தடபுடலாக சகோதரிகள், மச்சான்மார்கள் எல்லோரும் ரஹ்மானுக்குப் ``பெண்பார்க்கும்`` புது அத்தியாயத்தை ஆரம்பித்தார்கள்.

அதிலும் வேடிக்கை என்னவென்றால் ஒரு பெண்ணைப் பார்க்கப் போக கிட்டத்தட்ட இரண்டு ``வேன்களுக்கு`` இவர்களை அழைத்துப் போக வேண்டி இருந்தது. இதுமட்டுமல்லவே..... இதே சாட்டில் அத்தனைபேருமே இங்கு வீட்டில் வந்து தற்காலிகமாகக் குடியேற.......ஒருநாள் உணவுச்செலவே பெரும் செலவாகி.....மின்சாரம்,நீர், தொலைபேசி என்று எல்லா ``பில்`களை யும் எக்கச்சக்கமாய் ஏற்றி விடுவார்கள்... பார்க்கும் எந்தப் பெண்ணுமே குடும்பத்தாருக்குப் பிடிப்பதும் இல்லை.

ரஹ்மான் பொறுமை இழந்தான்.
இனிமேல் எந்தப் பெண்ணையுமே தான் பார்க்க வரப்போவதில்லை என்றும் சொனனான்.

``அதெப்படி முடியும் தம்பி......நாங்க நல்ல ஒரு பொண்ணத்தானே உனக்குப் பார்க்க வேண்டும்`` என்று மூத்த சகோதரிகளும்,

``மச்சான்...நீங்க எவ்வளவு சீதனம் கொடுத்திருக் கிறீங்க.. இதையெல்லாம் நாங்க ஒங்கட பெண்வீட்டால எடுக்க வேணாமா?`` என்று முட்டங்காலுக்கும் மொட்டைத்தலைக்கும் முடிச்சு போடும் மச்சான்களும்...

``நானா.....ஒங்களுக்கு என்ன கொறைச்சல்.....நல்ல பசுந்தான.....நல்ல படிச்ச.....ஒரு பொண்தான் ஒங்களுக்கு நல்லது`` என்று வாதிக்கும் தங்கைகளும்....

ஓ......இவர்கள் அனைவரதும் ``டேஸ்ட்டு``க்குப் பொருத்தமான பெண்ணை இவர்கள் தேடி,ரஹ்மானுக்கு கல்யாணம் செய்து வைக்க எப்படியும் இன்னும் பத்து வருடங்களாவது தேவைப்படும்.

ரஹ்மானின் சிந்தனைகளைக் கலைத்தபடி பஸ் பெரிய குலுக்கலுடன் தேனீருக்காய் வரக்காப் பொலையில் நினறது.

ரஹ்மானுக்கு இப்போது வயிறு நிரம்ப சாப்பிட வேண்டும் போல் இருந்தது.



சாப்பிட உட்கார்ந்த போது நேற்றுப் பின்னேரம் மாத்தளைக்குச் சென்று பார்த்த பெண்ணின் முகம் தண்ணீர் கிளாஸில் தெரிந்தது.
பரிதாபப் பார்வையோடு-
``என்னை நீங்களாவது ஏற்றுக் கொள்ள மாட்டீர்களா?`` என்ற ஏக்கத்தோடு அந்தப் பெண் பார்த்த பார்வை, திரும்பி வரும்போது ஆளுக்காள் கூட்டிச் சென்ற புரோக்கரைப் பேசிய பேச்சுக்கள்.

``காதர் மாமா....அங்க வச்சி பேசினா ஒங்களுக்கு மரியாத இல்லையே என்டு சும்மா இருந்தேன்....ஒங்களுக்கு கொஞ்சமாவது மூள இரிக்கா.... அது ஒரு வீடா....நாலுபேருக்கு உட்கார இடம் இரிக்கா....`` தாரிக் தொடங்க ஆளுக்காள் புரோக்கர் காதரை பிய்த்தெடுத்து விட்டார்கள்.

எப்பொழுதுமே உணவில் கண்ணாக இருக்கும் கடைசி சகோதரி கத்தினாள்``பொண்ணு பார்க்க வர்ரவங்கள இப்படியா கவனிப்பாங்க... வெறும் பிஸ்கட்டும் புளி வாழப்பழமும் தேத்தண்ணியும்... சே எங்கட நானாவுக்கு இங்க கலியாணம் செய்தா நல்லாத்தான் இரிக்கும்........``

தொடர்ந்து மாத்தளையிலிருந்து கம்பளை வரும் வரையிலும் பார்க்கச் சென்ற பெண்ணின் வறுமையும், வசதியீனமும் விலாவாரியாக விமர்சிக்கப் பட்டன.

ரஹ்மான் வாயே திறக்கவில்லை.
வரும் வழியில் புரோக்கர் காதர் நானா கெலிஓயவிலேயே இறங்கிக் கொண்டார். அவரது ஊர் நாவலப்பட்டி இவர்களின் தொல்லை தாங்க முடியாமல் அவர் இறங்கி இருக்கலாம்.

மாத்தளையில் பார்த்த பெண்ணின் முகம் மீண்டும் மீண்டும் ரஹ்மானின் முன்வந்து நின்றது.
பஸ் புறப்பட ஆயத்தமாகவே ரஹ்மான் வந்து இருப்பிடத்தில் உட்கார்ந்து கொண்டான்.

ரஹ்மானின் மனதில் புதியதோர் எண்ணம் திடீரென துளிர்த்த போது.....
பஸ் கடவத்தையை தாண்டி இருந்தது.

கொழும்பில் நண்பன் பாயிஸின் வீட்டில் இரண்டொரு நாட்கள் தங்கி, சவூதிக்குப் போய்விடும் எண்ணம் அப்படியே கதிரவனைக்கண்ட பனிபோல் உருகி காணாமற் போனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரமத்தைப் பார்க்காமல் தனது எண்ணத்தை இன்றே நிறைவேற்றிவிட வேண்டும் என்ற எண்ணம் மனதில் ஆழமாக இறங்கிப் பதிய ,புதிய உற்சாகத்தோடு பாயிஸின் வீட்டிற்கு அவன் விரைந்தான்.

நல்ல வேளை.....

பாயிஸ் வீட்டில் தான் இருந்தான்.

பாயிஸும், அவனது மனைவியும் மனதார வரவேற்று உபசரித்தனர்.

ரஹ்மான் பாயிஸிடம் மனதைத் திறந்து காட்டினான். ``மச்சான் பாயிஸ்.....இன்டைக்கு நீ எனக்கு ஒரு பெரிய ஒதவி செய்யனும்.... இந்த ரெண்டு மூனுவருஷமா ஏன்ட குடும்பத்தினர் எனக்குப் பெண்பார்க்குறது ஒனக்குத் தெரியுமே.......``

``ஓ.... அந்தப் படலம் இன்னும் முடியல்லையா?`` பாயிஸ் உற்சாகமாய் கேட்டான்.

``சே அது முடியாது மச்சான்...அவங்களுக்கு நான் கலியாணம் செய்யிறது உள்ளாற புரியம் இல்ல..அவங்களுக்கு இன்னமும் என்கிட்டால எடுக்கத்தான் புரியம்........ இதனால நான் கலியாணம் செய்யாமலேயே இனியும் குடும்பத்துக்கே சம்பாரிச்சுக் கொடுக்கணும் என்டுதான் விரும்புறாங்க.....`` திடீரென ரஹ்மான் குரல் அடைத்துக் கொண்டது.

கைகளால் முகத்தை மூடி...விம்மி விம்மி அழுதான் ரஹ்மான்.

பாயிஸின் கைகள் அவன் கண்ணீரைத் துடைத்தன.

``புரியுது.....ரஹ்மான்...எனக்குப் புரியுது.... கவலைப்படாதே....இப்ப நான் என்ன ஒதவி செய்யணும்... நீ ஆம்புளையா யோசித்து .....முடிவு செய் ரஹ்மான்...நான் உதவுறேன்....``

தைரியப்பட்டவனாய் ரஹ்மான் சொன்னான்.

மள மளவென வேலைகள் நடைபெற்றன. பாயிஸ், அவனது மனைவி ஷகீலா,ஷகீலாவின் தாய், ரஹ்மான் ஆகியோரும் பாயிஸின் குழந்தைகளும் மாத்தளை நோக்கி உல்லாசமாகப் பயணித்துக் கொண்டிருந்தனர்.

ஆம் ........நேற்றுப் பார்த்த அந்த அப்பாவிப் பெண்ணைத் தனக்குப் பிடித்திருக்கிறது....... கூடியவிரைவில் திருமணம் செய்வோம் என்ற நல்ல முடிவைச் சொல்வதற்காகவே அவர்கள் மாத்தளை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர்.



# ஒரு மோதினார் கலியாணம் பேசுகிறார்....

ரகுமான் மாஸ்டருக்கு உடம்பெல்லம் கொதித்தது. சிறு நடுக்கம் என்றுகூடச் சொல்லலாம். கையில் பிடித்திருந்த தொலைபேசி ரிஸிவரைக்கூட உரிய இடத்தில் வைக்காமல் பிரமை பிடித்தவர்போல் நின்று கொண்டிருந்தார்.

அவரைச் சுற்றியும் அவரது இரண்டு மகன்மார் மனைவி, கடைசி மகள்......

``வா.....ப்....பா....`` கடைசி மகள் பர்ஹானா தான் வழமைபோல் தைரியமாகப் பேசினாள்.

``என்ன வாப்பா.....ரீஸீவரை வைங்க`` அவளே எடுத்து வைத்து விட்டாள்.

மெதுவாக ரகுமான் மாஸ்டர் முன் அறைக்கு வந்தார்.....பின்னாலேயே அவரது குடும்பம்....

``சே.....பள்ளியில அஞ்சு நேரமும் பாங்கு சொல்ற வாயால....பேசுற பேச்சா.....``

ரகுமான் மாஸ்டர் வாய்விட்டே சொல்லிவிட்டார்.

அவரது பெரிய மகனுக்குச் சிறிது புரிந்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரகுமான் மாஸ்டர் எப்பொழுதுமே அநியாயங்களைத் தட்டிக் கேட்பவர்....அப்படி நேருக்கு நேராகத் தட்டிக் கேட்டதாலும், சுட்டிக்காட்டியதாலும் ஒரு பாடசாலையிற் கூட அவரால் நீண்ட காலம் வேலை செய்ய முடியவில்லை.

நேர்மையீனத்தை விரும்பாத அவரைப் பலரும் வெறுத்தனர். விஷேடமாக பாடசாலைக்கு வந்தும் வேலை செய்யாமல் அரட்டையடித்தும், தூங்கிவழிந்தும் சம்பளம் எடுத்தவர்களுக்கு ரகுமான் மாஸ்டர் ``குழப்பகாரனாகவும்'' கோபக்காரனாகவுமே தென்பட்டார். இதன் விளைவாகவே பலமுறை ``பனிஸ்மன்ற்'' மாற்றங்கள்...

தொண்ணூற்றோராம் ஆண்டில் விரும்பியவர்கள் இளைப்பாறலாம் என்ற சுற்றிக்கை - ரகுமான் மாஸ்டருக்கு வரப்பிரசாதமாய் அமைந்தது. இலங்கையிலேயே முதன்முதலாக இளைப்பாறும் படிவத்தை நிரப்பிக் கொடுத்தவரே அவராகத்தான் இருக்க வேண்டும். அன்று அவர் வீட்டிற்கு வந்து சொன்ன வாரத்தைகளை இன்றும் அவரது குடும்பத்தினர் நினைத்துக் கொள்வதுண்டு.

``அப்பாடா.....ஜெயில்ல இருந்து விடுதலையாகி வந்தது போல இரிக்கி''

இளைப்பாறிய பின் குடும்பத் தொழிலான தேயிலை வியாபாரத்தில் நேர்மையாக ஈடுபட்டு இன்று ஓரளவு வசதியாகவும், பூரணமான நிம்மதியுடனும் இருக்கின்றார்.

ரகுமான் மாஸ்டருக்கு மூத்ததும் கடைசியும் பெண் பிள்ளைகள் நடுவில் இருவரும் ஆண்பிள்ளைகள். மனைவி சுலைஹா... அவரது சகோதரி ஆகியோரால் அடங்கிய குடும்பம்...பல வருடங்களுக்கு முன்னர் கணவனை இழந்த சகோதரியும் இவர்களுடனேயே தங்கிவிட்டார்......

மூத்த மகள் பாஸிலாவுக்குத் திருமணம் பேசிக் கொண்டிருக்கின்றார்கள்.

ரகுமான் மாஸ்டரின் குடும்பத்தில் - அதாவது அவரது பிள்ளைகளுக்கு - இதுதான் முதலாவது திருமணப் பேச்சுவார்த்தைப் படலம். அப்பப்பா....எத்தனை எத்தனை அவலங்கள்?

இந்தப் படலத்தின் ஒரு பயங்கரமான சிதறல்தான் சற்றுமுன் வானலைகளில் தவழ்ந்து தொலைபேசி ரிசீவர் ஊடாக வந்து ரகுமான் மாஸ்டரின் காதுகளுக்குள் போய் அவரையே இப்படி இஸ்தம்பித்து நிற்க வைத்துவிட்டது.



காலையில் ஒரு வேலை நிமித்தம் வெளியே சென்றிருந்தார். அப்போது ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. மனைவிதான் எடுத்தார்.

``ஹலோ...''
``ஹலோ......யார் பேசுறீங்க.?''
``நான் இங்கு பள்ளிவாசல் மோதினார்... பேசுகிறேன்....''

``வீட்டில...மாஸ்டர் இல்ல....வர்ரதுக்கு ராவாகும்...வந்தப்புறம் பேசுறீங்களா.....?''
``நீங்க யாரு....?''
``நான் அவர்ட மிஸிஸ் தான்..
``கொஞ்சம் போனை'' வச்சிடாதீங்க...... உங்ககிட்ட ஒரு விஷயம் கேட்டுக் கொள்ளணும்....''

``சொல்லுங்க....'' எரிச்சலை வெளிக்காட்டாமல் பேசினார் மாஸ்டரின் மனைவி.

``ஒங்கட மகளுக்குக் கலியாணம் பேசுறீங்களா? அதுபத்தித்தான் நான் பேசணும்...?''

``ஓ...பேசிக்கிட்டுத்தான் இரிக்கிறோம்... ராவைக்கு மாஸ்டர் வந்தபிறகு அவரோட பேசிக்கொள்ளுங்க....''

ரிஸீவரை வைத்துவிட்டார்.
இந்த விடயத்தை ரகுமான் மாஸ்டரிடமும் சொல்லி இருந்தார்.

மோதினார் வாக்கு தவறவில்லை. இரவு ரகுமான் மாஸ்டருடன் பேசத்தான் செய்தார்.

தொலைபேசி மணி ஒலிக்க... கடைசிமகள் பர்ஹானாவே எடுத்தாள்.

``ஹலோ...ரகுமான் மாஸ்டர் இரிக்காங்களா...?''

``வாப்பா...உங்களுக்கு ``கோல்''..... ரிஸீவர் கைமாறியது.
``ஹலோ....அஸ்ஸலாமு அலைக்கும்''

``வஅலைக்குமுஸ்ஸலாம். நான் காலைல பேசினேன்... உங்கட மனைவி நீங்க ராவைக்குத்தான் வருவீங்க என்டு சொன்னாங்க....''

``ஓ....சொன்னாங்க...இனி விஷயம் என்ன?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

``இங்க...ஒரு மாப்பிள்ளை இரிக்காரு....... யூனிவசிட்டியில வேல....படிச்சிக் குடுக்கிறாரு....``

``நல்லம்...என்னா படிச்சிரிக்காரு....``
``அவரு பீ.ஏ. படிச்சிரிக்காரு.....``
``பீ. ஏ. மட்டும் படிச்சா யூனிவசிட்டியில படிச்சிக்குடுக்கிற வேல கெடைக்காதே.....

``இல்ல......இல்ல...ஒரு ஸ்கூல்லதான் படிச்சிக்குடுக்கிறாரு...``

ரகுமான் மாஸ்டருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது என்றாலும் அடக்கிக் கொண்டார்

மோதினார் தொடர்ந்தார்......

``உங்கட மகளப்பத்தி எங்களுக்கு ஒருத்தர் எல்லா விபரமும் சொன்னார்.... அவருக்கிட்ட இருந்துதான் ஒங்கட டெலிபோன் நம்பரையும் எடுத்தேன்...ஆனா......``

``சொல்லுங்க.........``

``மாப்பிள்ளை வேறு யாருமில்ல... ஏன்ட மவன்தான்...உங்கட மகளுக்கு எவ்வளவு சம்பளம் கெடைக்குது என்டு மட்டும் ...சொல்லு வீங்களா......?``

ரகுமான் மாஸ்டர் ஆத்திரத்தின் உச்சக் கட்டத்துக்கே போய் விட்டார்.

``இங்க பாருங்க...இதுக்கு மேலேயும் நீங்க பேசினா....எனக்கு நல்ல வார்த்தைகளப் பேச முடியாமல் போயிடும்...ஏன்ட மகள பொய்கா ரன்களிட மகன்களுக்கும்,மகள்ட சம்பளம் எவ்வளவு என்டு கேக்குறவன்களுக்கும் நான் கொடுக்கப் போவதில்லை.... அஞ்சு நேரமும் அல்லாஹ்ட பேரைச் சொல்லி முழுங்குற உங்கட வாயால நல்லத பேசப் பழகிக் கொள்ளுங்க..... வைங்க போனை``

இந்த வார்த்தைகளின் இறுதிப் பகுதிகளைச் சொல்லும் போது அவரது குரல் உச்சஸ்தாயியில் ஒலித்ததைக் கேட்டே குடும்பமே அவரைச் சூழ்ந்து கொண்டது.

மகள் பாஸிலா ஒரு கிளாஸ் தண்ணீர் கொண்டு வந்து வாப்பா வின் பக்கத்தில் உட்கார்ந்து கொடுத்தாள். தண்ணீரை வாங்கிக் குடித்த ரகுமான் மாஸ்டர் தன்னைக் கொஞ்சம் சுதாகரித்துக் கொண்டார்.



``ஏன்ட பூவே....பாருங்கம்மா.....அந்த கேடு கெட்டவனுக்கு ஒங்கட சம்பளம் எவ்வளவு எண்டு தெரிஞ்சிரிக்கணுமாம்...மொதல்ல மகன் யூனிவசிட்டியில வேல என்றான்...நான் கேட்ட பிறகு ஸ்கூல்ல வேல என்கிறான்....ஆரம்பமே ஆயிரம் பொய்...... மோதினாருக்கு இப்படி இருந்தால் சாதாரண மனுஷன்கள் எப்படி இரிப்பானுகள்...``

சுற்றியிருந்தவர்களுக்கு ரகுமான் மாஸ்டரின் கோபமும் ஆத்திரமும் நியாயமாகத்தான் பட்டது.

*(யாவும் கற்பனையே)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மனிதன் மாமனிதனாகிறான்.....!

ரஹீம் மௌலவி சிந்தித்து சிந்தித்து ஒரு முடிவுக்கு வர முடியாதவராகத் தவித்துக் கொண்டிருந்தார்.

மௌலவி ஆசிரியரான அவரின் மனைவியும் மறுபுறமாகச் சிந்தித்துக் கொண்டே இருந்தார்.

``சே....நல்ல எடமா இரிக்கி.... உட்டுட்டாலும் கஷ்டம்.....இப்போதைக்கு செய்யவும் வழியில்லயே...'' ரஹீம் மௌலவி தலையைக் குழப்பிக் கொண்டார்.

அநியாயமா...அப்பமே ஆறுமாசம் சம்பளத்த போனசா தர்ராங்க எண்டதுக்காக நீங்க பென்ஷன எடுத்தீங்க... இப்போ வேலையில இருந்திருந்தாலும் பெரிய சம்பளமா எடுத்திருப்பீங்க... ஒரு பெரிய சீட்டக் கீட்டப் போட்டு நாலுகாச நானும் மிச்சப்படுத்தி இருப்பேன்...'' மனைவி சுலைஹா கூறியதையும் மீட்டிக் கொண்டார். உண்மைதான்.... இப்போது இதையெல்லாம் நினைத்து என்ன செய்ய முடியும்?

சுலைஹா வீட்டிற்குப் பின்னால் சாய்ந்து தலைசாய்த்துக் கொண்டிருந்த கோப்பி மரத்திலிருந்து காய்களைப் பறித்துக் கொண்டிருந்தாலும், மனமெல்லாம் மகள் பர்வீனுக்குப் பேசிவந்ததுள்ள நல்ல சம்மந்தத்தையே சுற்றிச்சுற்றி ரீங்காரித்துக் கொண்டிருந்தது.



ரஹீம் மௌலவியும் நாற்காலியிலிருந்து எழும்பி ஒரு சுற்று வீட்டைச் சுற்றி மனைவியைத் தேடிச் சென்றார்.

``புள்ளைட உம்மா (அவர் மனைவியை அழைப்பது இப்படித்தான்) உண்மைய சொல்லுங்க.... ஒங்ககிட்ட எவ்வளவு காசி இரிக்கி.....''

அவரது அடி மனது என்னவோ சுலைஹா எப்படியாவது மிச்சப் படுத்தி ஏதாவது வைத்திருப்பா என்றே சொல்லிக் கொண்டிருந்தது.

அவரை நிமிர்ந்து பார்த்துச் சிரித்தாள் அவள். ``நீங்க எனத்தியன் சொல்ற....''

``இல்ல.... புள்ளட உம்மா....'' நீங்க சீட்டக்கீட்டப் போட்டு எதையாவது மிச்சப் படுத்தியிருப்பீங்க இல்லயா......அதுதான்......''

தன் கணவனைப் பார்க்கவே அவளுக்குப் பரிதாபமாக இருந்தது.

``வாங்க...ஒங்களுக்கு ஒரு பிளேன் டீ ஊத்தித் தாரன்....'' கோப்பியை அவ்விடத்திலேயே வைத்துவிட்டுப் பின்வழியால் சமையலறைக்குப் போன சுலைஹாவைத் தொடர்ந்து அவரும் போனார்.

``இங்க பாருங்க....அப்படி இப்பிடி கஷ்டப்பட்டு மக பர்வீனுக்கு நான் பத்துப் பவுனுக்கு மட்டில நகை செய்திரிக்கன்... அதில்லாமல் இப்ப கொஞ்சம் கோப்பி, கராம்பு, சாதிக்கா சேத்து வச்சிரிக்கன்... இதுகல வித்தா நல்ல நாலு உடுப்பாவது புள்ளைக்கி எடுக்கலாம்... எப்புடியும் ஒங்கட நானா தம்பிகள்... என்ட பொறப்புக்கள் ஏதாவது ஒதவாமலா போவாங்க...?.''

``அதில்ல புள்ளைட உம்மா.....

``நல்ல எடம்...தங்கமான மனிஷர்... அவங்க ஒன்றுமே கேக்கல்ல... இந்தக்காலத்தில இப்படி ஆயிரத்தில இல்ல லெச்சத்தில கூட ஒருத்தரக் காண முடியாது.....இதவிட்டாலும் பர்வீனுக்கு ஒரு மாப்பிள்ளையை தேடுவது கஷ்டமாப் போயிடும்....'' ஒரு தந்தையாயிருந்து அவர் மனதுக்குள் படும் அவதி அவரது சொற்களில் வெளிவந்தது.

``கலியாணச் செலவு....எங்கவூட்டு மொதல் விஷயம்...அவங்கட தகுதிக்கு ஏத்தமாதிரி நாங்க செய்ய வேணாமா... பொன்ன வைக்கிற எடத்தில பூவையாவது வைக்கனும் இல்லையா?''

``புள்ளைட உம்மா, அல்லா விட்ட வழி....இந்த விஷயத்த விட்டுடுவோம்... அல்லா ஒரு வழிய மூடினா ஒன்பது வழிகளைத் தொறப்பான்.''

பிளேன் டீயைக் குடித்தவர் இந்தக் கலியாணத்தைப் பேசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸவாஹிர் நானாவின் வீட்டிற்கே சென்றார்.

போகும் வழியில் அவரது முன்னாள் சகா ஜாபீர் மாஸ்டரையும் கண்டு கதைத்துக் கொண்டே சென்றார். ஜாபீர் மாஸ்டர் இப்போது நல்ல வசதியாக இருக்கின்றார். இரண்டு மகன்மார்கள் ஜப்பானில். இனி கேட்கவும் வேண்டுமா?

புரோக்கரின் வீட்டிற்கும் ஜாபீர் மாஸ்டர் கூடவே வந்தார். ஸவாஹிர் புரோக்கருக்கும் சரியான கவலை.

``மௌலவி சேர்.....நீங்க எனக்கு பீஸ்`` ஒன்டுந்தர வேண்டாம்....இந்த எடம்.....நல்ல மனிசர்....நல்ல வசதி இரிக்கி..... ஒண்டுமே வேணாம் என்டு சொல்றவங்க இப்ப இரிக்கிறாங்களா... அல்லா காட்டுற நல்ல வழிய உட்டுடாதீங்க சேர்......`` ஒரு கல்யாண புரோக்கராக இல்லாமல் மனிதாபிமானமுள்ள ஒரு நல்ல மனிதராய் அவர் கெஞ்சினார்.

ஜாபீர் மாஸ்டர் கூடவே சேர்ந்து எப்படியாவது செய்யுங்கள் என்றே வற்புறுத்தினார்.

``மலடியைப் பார்த்துப் புள்ளப் பெத்துத்தா என்டா முடியுமா...கலியாணச் செலவு லேசா....... புள்ள அங்க போனா இங்க வர்ரதில்லயா.....பொண்ணு மாப்புள ரூமுக்கு ரெண்டு தளபாடம் வேணாமா....`` ரஹீம் மௌலவி மறுத்தே விட்டார். அவரது உள்மனம் ஓவென்று கதறியழுதது.

வீட்டிலும் பேரமைதிதான். உள்ளங்களின் உள்ளே கவலை எரிமலைப் பிழம்பாய்க் கொதித்துக் கொண்டிருந்தது. என்னதான் செய்யமுடியும்?

நான்காம் நாள்...

ஜாபீர் மாஸ்டர் ரஹீம் மௌலவியின் வீடு தேடி வந்தார்.

``எப்படி மௌலவி சேர்....இப்போ என்ன செய்யிறாப்புல யோசன....`` என்று தொடங்கி பர்வீனின் திருமணவிடயம் பற்றிக் கேட்டார்.

``என்னதான் செய்யிற.....ஜாபீர் மாஸ்டர்.....அதுதான் அண்டைக்கே மாப்பிள்ளை வீட்டில் சொல்லச்சொல்லிட்டேனே....`` இதைக் கூறும் போது இழக்கக்கூடாத ஒரு சந்தர்ப்பத்தை இழந்துவிட்ட துயரம் அவரது தொண்டையை அடைத்தது.

``மௌலவி சேர்...இப்பநான் வந்ததும் அதே விஷயமாகத்தான்... இந்தாங்க...இதைப் புடியுங்க.....`` அவர் கையில் கொண்டுவந்திருந்த



சிறிய பார்சலை மௌலவியின் கைகளில் வைத்து அழுத்தினார்

``என்ன.... இதுல என்னா....இரிக்கி....` திக்குமுக்காடிப் போய்க் கேட்டார்.

``உட்காருங்க மௌலவி சேர்.....இதுல ரெண்டு லெட்சம் இரிக்கி.... புள்ளைட கலியாணத்த செய்யுங்க...``

``இது........இது..........`` பேச முடியவில்லை அவரால்.

``இத...இப்பவே திருப்பித்தரணும்'னு அவசியம் இல்ல.......வசதி கெடைச்சா தாங்க........இல்லாட்டா இது கடன் இல்ல.......``

``உள்ளே இதைக் கேட்டுக்கொண்டிருந்த சுலைஹாவிற்கும் தலையைச் சுற்றியது. இது கனவா, நனவா?

ஜாபீர் மாஸ்டரின் கைகளைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டார் மௌலவி சேர்!

``நன்றிய எனக்கில்ல மௌலவி சேர்....அந்த ஆண்டவனுக்குச் சொல்லுங்க......`` என்றார் ஜாபீர் மாஸ்டர் பவ்வியமாக.

``அல்ஹம்துலில்லாஹ்....நீ ரஹ்மான் என்பதைக் காட்டிட்ட.... எனக்கு எப்படி ஸுக்கூர் செய்வது.....`` திணறிப்போனார் மௌலவி.

``அப்போ........நான் வார்ரேன்....புரோக்கரைக் கூப்பிட்டு கலியாணத்துக்கு ரெடி என்டு சொல்லியனுப்புங்க... மறக்காம எங்களையும் கலியாணத்துக்கு அழைச்சிடுங்க....`` ஜாபீர் மாஸ்டர் எழுந்து போய் விட்டார்.

வீடே கலகலத்தது.

ஏற்கனவே அழகிய பூவாயிருந்த பர்வீனின் முகம் சிலிர்த்தது.

மாப்பிள்ளை நஸீரின் வீட்டிற்கு செய்தி சென்றது....திருமண ஹோல் போன்ற விடயங்களை நஸீரே கவனித்துக் கொள்வதாகச் சொன்னான்....

அஸருக்குப் பின்னர் பள்ளிவாசலில் நிக்காஹ் எழுதியபின், பெண்வீட்டிற்கு மாப்பிள்ளையும் அவரது குடும்பத்தினர் சிலரும் மட்டும் வலீமா சாப்பாடு இருபுறத்திலும். எல்லோருக்கும் அழைப்பு!

``நிக்காஹ்வுக்குப் பின்னர் ஒங்கட வீட்டுல நடக்குற சாப்பாட்டுச் செலவு நீங்க முடியுமான மாதிரி செய்யுங்க..... வலீமாச் செலவு முழுசா எங்கட து....`` என்று நஸீரின் தந்தை சொன்னபோது ரஹீம் மௌளலவிக்கு நம்பக்கூட முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைத்தா, வீட்டைத்தா, பத்து இலட்சம் இருபது இலட்சம் தா, சவடிதா, என்று பட்டியலைநீட்டிக் கொண்டே போகும் இந்தக் காலத்தில்...இதென்ன ஒன்பதாவது உலக அதிசயமா?

நஸீர்-பர்வீன் நிக்காஹ்வின் போது பார்வீனுக்கு மட்டுமாக உடைகளும் பரிசுப் பொருள்களும் நஸீர் கொண்டுவரவில்லை.

ஒரு பெட்டியில் பார்வீனுக்கான உடைகளும் இன்னொரு பெட்டி நிறைய அந்தவீட்டிலுள்ள மற்றவர்களுக்கான உடைகளும் கொண்டுவரப் பட்டிருந்தன.

வலீமா சாப்பாடு ஜாம் ஜாமென்று நடந்தது. கூட்ட சந்தடி முடிந்தபோது ஜாபீர் மாஸ்டர் மெதுவாக நஸீரிடம் சென்று அவனது கைகளை இறுகப் பற்றிப் பிடித்துக் கொண்டார்.

``நஸீர்....நீ...பெரிசா உயர்ந்திட்ட..... உன்ன ஏன்ட ஒரு மாணவன் என்டு நெனைக்க நெனைக்க எனக்குப் பெருமையா இரிக்கி.....அல்லாஹ் எனக்கு மேலும் மேலும் ரஹ்மத்தத்தருவான்....நல்ல இரிங்க....`` உண்மையிலேயே வாத்சல்யமாக நஸீரைக் கட்டிப்பிடித்து முத்தங் கொடுத்து வாழ்த்தினார் ஜாபீர் மாஸ்டர்.

சுற்று முற்றும் பார்த்த நஸீர் ஒருவரும் பக்கத்தில் இல்லை என்பதை அறிந்து, ``சேர்.....அந்த ரகசியம்....அது எனக்கும் ஒங்களுக்குத், அல்லாஹ்வுக்கும் மட்டும் தெரிந்ததாகவே இருக்கட்டும்`` என்றான் மென்மையாக.

நஸீரின் கைகளை அழுத்திக் கூறினார் ஜாபீர் மாஸ்டர்

``நான் மௌத்தாகும்வரை நீதான் அந்த காசு ரெண்டு லச்சத்தையுத் தந்த விடயத்தை வெளியே விடமாட்டேன்... என்ன நம்பு. ...``

ஓ.....நஸீரே........உன்னைப்போல உள்ளவர்கள் எல்லாம்- அல்ல உள்ளவர்களில் ஒரு சிலராவது சிந்தித்தால்-?

சிந்திப்பார்களா?

தனக்குரிய மனையாளை இப்படித் தெரிவு செய்ய எத்தனை பேருக்கு மனம் வரும்?

*(யாவும் கற்பனையே)*



# தொடரும் இலட்சியங்கள்....!

கம்பளை ஸாஹிராக் கல்லூரிக்குப் போகும் வழியிலே....புகையிரதக் கடவையினூடாக போதலாபிட்டியாவை நோக்கித் தண்டவாளத்தில் நடந்து கொண்டிருந்தான் ரியாஸ். போதலாபிட்டியாவில் மகாவலி கங்கையை நோக்கிச் செல்லும் பாதையிலேயே அவனது வீடு இருந்தது.

ஏதோ, தண்டவாளத்தில் போடப்பட்டிருக்கும் ``சிலீப்பர், கட்டைகளை``ச் சரியாக எண்ணிக் கணக்கெடுப்பவன் போல குனிந்ததலை நிமிராமல் அவன் நடந்து கொண்டிருந்தான்.

வீட்டிற்குப் போகவே என்னவோ போல் இருந்தது ரியாஸுக்கு. வீட்டில் இன்றும் பூகம்பம் வெடித்துச் சிதறும் என்பதை ரியாஸ் நன்கு தெரிந்து வைத்திருந்தான்.

``சே.. எல்லாமே காமிலாவால் வந்த வினைதான்...பேசாமல் ரகசியமாகவே நிக்காஹ் முடிச்சிரிந்தால் இந்தப் பிரச்சினை ஒன்றுமே இருந்திருக்காது.....`` ரியாஸ் மனதுக்குள் நினைத்தவாறே நடந்து கொண்டிருந்தான்.

ரியாஸ் ஜாமியா நளீமியாவின் ஒரு அங்கமான ``இக்ரா``வில் ஓடோ மொபைன்`` துறையில் படித்துத் தேறி தற்பொழுது நாவலப்பிட்டியில் ஒரு உள்ள தனியார் ``கராஜில்`` பணியாற்றுபவன்.

ரியாஸுடன் கற்ற ரம்ஸீனின் தங்கையை - காமிலாவை - ரியாஸுக்குப் பல வருடங்களாகவே தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகு என்று சொல்வதற்குரிய புற அழகு எதுவுமே காமிலாவிடம் இல்லை.

ஆனால்.......

அவளின் அடக்கம்

இஸ்லாமிய பண்பாடுகள்

இஸ்லாமிய அறிவை வளரக்க அவள் தேடி வாசிக்கும் பழக்கம்.

வீட்டு வேலைகளைச் செய்யும் நேர்த்தி...

இவையெல்லாம் ரியாஸின் மனதில் காமிலாவுக்கான இடத்தைப் பிடித்துக் கொடுத்தன.

மனதுக்குள் ஒரு மாளிகை கட்டி அந்த மாளிகையிலே காமிலாவை பட்டத்துராணியாக்கி குழந்தைகளைப் பெற்று குதூகலமாக மானசீகமாக வாழ்ந்து கொண்டிருந்தான் ரியாஸ்

ரம்ஸீனிடம் தனது எண்ணத்தை ஏற்ற சமயத்தில் சொல்லிக் கொள்ளலாம் என்று நினைத்திருந்த ரியாஸுக்குத் திடீரென எண்ணத்தில் மண் விழுந்தது.

``ரியாஸ்....இன்டைக்கு பின்னேரம் வீட்டிற்கு கட்டாயம் வந்துடு.... ஒரு பயணம் போகனும்...நீ வந்தா நல்லா இரிக்கும்'' என்று ரம்ஸீன் கூற ரியாஸ் போனான்

``தங்கச்சி காமிலாவுக்கு ஒரு நல்ல எடம் வந்திரிக்கி...மாப்பிள்ளை பாக்க போறம் நீயும் வந்தா நல்லா இரிக்கும்...... அதுக்குத்தான் கூப்பிட்டேன்.....''

ரியாஸ் தன் மனக்கஷ்டத்தை முகத்தில் வெளிக்காட்டாமல் மிகவும் கஷ்டப்பட்டு மறைத்துக் கொண்டான்.

ரியாஸின் மனமாளிகையின் அரசிக்கு வேறு ஒரு துணைவனைத் தேடி ரியாஸே போவதா? அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

``மடையா....இப்போதாவது உன் ஆசையைச் சொல்லேன்டா'' என்று அவனது மனச்சாட்சி அவனை எச்சரித்தது.

ம்...ஹூம்...அந்தத் தைரியம் ரியாஸுக்கு வரவே இல்லை.

``என்னைப் பத்தி ரம்ஸீன் வீட்டாருக்கு எண்ணம் இருந்திருந் தால் அவங்களே என்னிடம் கேட்டிருக்க மாட்டாங்களா?'' என்று மகவும் கஷ்டத்தோடு தன்னை சமாதானப் படுத்திக் கொண்டான் ரியாஸ்.



காமிலாவின் திருமணம் எதிர்பாராத விரைவில் முடிந்தது.

இரண்டு இலட்சம் பணம், இருபத்தைந்து பவுணில் நகை.....

பலாங்கொடையில் மாப்பிள்ளைக்குச் சொந்தமான பலசரக்குக் கடை....சொந்தவீடு வாசல் இருப்பதாகச் சொன்னார்கள்.

ரம்ஸீனின் வற்புறுத்தலால் ரியாஸ் முற்று முழுதாகத் திருமண வேலைகளில் கடைசிவரை ஈடுபட வேண்டியதாயிற்று.

சுருக்கமாகச் சொன்னால் காமிலாவின் திருமணத்தின் ஒவ்வொரு அம்சங்களிலும் அவனது இதயம் வடித்த இரத்தக் கண்ணீரை அவனும் படைத்த இறைவனும் மட்டுமே அறிவார்கள்.

ஆயிற்று, காமிலா திருமணம் முடிந்து பலாங்கொடையும் போய் விட்டாள்.

ரியாஸ் உடைந்து போனான். ஒரு வாரத்துக்கு மேலாக கராஜுக்கும் வரவில்லை

ரம்ஸீன் விசாரித்துப் பார்த்ததில் யாரோ உறவினர் வீட்டிற்கு பதுளைக்குப் போய் விட்டதாக அறிய வந்தது.

எங்கெல்லாமோ சில வாரங்களை கழித்துவிட்டு ரியாஸ் கராஜுக்கு வந்தபோது கராஜ் உரிமையாளர் சொன்னார்.

``உங்கட நண்பன் ரம்ஸீன் பல முறை உங்களைத் தேடி வந்தார்.. ஏதோ அவசரமாம்......வந்தால் உடன் வரச் சொன்னார்....''

வேலை முடிந்து ரியாஸ் போன போது ரம்ஸீனின் வீடு மையத்து வீடு போல் இருந்தது.

ஆளுக்கு ஒர மூலையில் உட்கார்ந்து..... யோசனையில் மூழ்கி....

``ரியாஸ்....எங்கேடா போயிட்ட.....''

ரியாஸின் கைகளைப் பற்றிக் கொண்ட ரம்ஸீன் விம்மி விம்மி அழத் தொடங்கினான்.

``காமிலாட மாப்பிள்ளை வீட்டார் ரொம்ப மோசமானவங்க... ரியாஸ் மனிசத்தனமே இல்லாதவங்க... குடியில மூழ்கிப் போன குடும்பம்... ஆண்டவனே...நாங்களே தங்கச்சிட வாழ்க்கையை படுகுழியில தள்ளிட்டோமே''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்பிப் புலம்பிக் கதறினான் ரம்ஸீன்.
திருமணம் நடந்து ஒரு மாதமாவதற்கு முன்னரே ``தலாக்'' வாங்குவதற்காக வழக்கும் தொடர்ந்து முடிந்து விட்டது.

ரியாஸ் மனதுக்குள் மருகினான்.
``நான் மனம் எரிய எரிய கவலைப்பட்டது தான் காமிலாவின் வாழ்க்கையை இப்படி நாசமாக்கி விட்டதோ?''

இப்பொழுது எல்லாம் நடந்து கிட்டத்தட்ட ஒரு வருடம் ஆகிவிட்டது.

ரம்ஸீனிடம் ரியாஸ் காமிலாவை தான் திருமணம் செய்து கொள்வதாகவும் சம்மதம் தெரிவித்துவிட்டான்.

தனது வீட்டார் இதை எப்படி ஏற்றுக் கொள்வார்களோ என்ற சந்தேகத்தில், இரகசியமாக நிகாஹ்வை முடிப்போம் என்று ரியாஸ் கூறிய ஆலோசனையை காமிலா ஏற்றுக் கொள்ளவில்லை.

``அது சரியில்ல....எப்படியும் பெத்து வளர்த்தவங்ககிட்டயும் கூடப்பொறந்தவங்க கிட்டயும் சொல்லாம......மூடி மறைச்சி செய்யக்கூடாது.......ஒரு நாளைக் கெண்டாலும் கலியாணம் முடிச்சவ நான்...... இதை மறைக்கவே கூடாது'' என்று காமிலா கூறிவிட்டாள்.

இதனால் தான் ரியாஸ் தன்வீட்டில் இதைக்கூறினான்.

கூறியதும் வெடித்தது பூகம்பம் மட்டும் அல்ல; எரிமலையும் தான்.

ரியாஸ் கல்யாணமாகி விடுதலை பெற்ற காமிலாவை திருமணம் செய்வது பாரதூரமான பிழையாக வீட்டில் அனைவரும் ஏகோபித்த தீர்ப்பு வழங்கினர்.

அது மட்டுமல்ல.....
உடனடியாக வேறு இடத்தில் ரியாஸுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்றும் முடிவெடுத்தானர்.

சிந்தனையுடன் நடந்ததில் வீடுவந்ததும் அவனுக்குத் தெரியவில்லை.

``இதோ பெரிய இலட்சியவாதி வர்றாரே.... இவருகிட்ட சொல்லுங்க வாப்பா......''

ரியாஸின் மூத்த சகோதரி தன் தந்தையிடம் கூறினாள்.



``ரியாஸ்.... இன்டைக்கி புரோக்கர் நல்ல எடமா பாத்து வந்திரிக்கிறார்.... ஏழெட்டு இலட்சம் பொறுமதியான காணி, புதிய வீடு, நாப்பது பவுணுக்குநகை....எல்லாம் தர்ராங்க... கெலிஓயாவில தௌபீக் ஹாஜியார்ட மகள்.....''

தந்தை பேசிக் கொண்டிருக்கும் போதே ரியாஸ் குனிந்த தலையுடன் பேசாமல் தன் அறைக்குள் நுழைந்து கதவை மூடிக் கொண்டான்.

மூடிய கதவுக்கு வெளியே காரசாரமான சப்தங்கள் கேட்கத்தான் செய்தன.

தனது படுக்கையில் மல்லாக்காய் சாய்ந்து கைகளை மடித்து, தலைக்கு அணை கொடுத்து கண்களை மூடிக் கொண்டான் ரியாஸ். மூடிய கண்களுக்குள் காமிலா நிறைந்து நின்றாள்.

தௌபீக் ஹாஜியாரின் மகளுக்குத் தருவதாகச் சொன்ன சொத்துக்கள் பட்டியல் தன் குடும்பத்தினரை எந்த அளவுக்கு மயக்கி இருக்கும் என்பதை ரியாஸ் மிகமிக நனறாகவே அறிவான. ஆனால் தௌபீக் ஹாஜியாரின் வீட்டிற்கு விலைகொடுத்து வாங்கிய மாப்பிள்ளையாகச் சென்று, எத்தகைய அவதிக்குள் அவஸ்தைப் படவேண்டி வரும் என்பதை அவனது வீட்டார் யோசிக்க மாட்டார்கள் என்பதையும் அவன் அறிவான்.
ரியாஸ் மனதுக்குள் அசைக்க முடியாத உறுதியுடன் தீர்மானத்தை எடுத்துவிட்டான்.....

ஆம்...தன் இலட்சிய வாழ்க்கைத்துணைவியைத் தனதாக்கிக் கொள்வதில் இரண்டாவது முறையும் மௌனிக்க ரியாஸ தயாராக இல்லை.

தான் செய்யப் போவது இஸ்லாமிய கோட்பாடுகளுக்கு முரணான செயலாகவும் அவனுக்குப்படவில்லை.

இரகசியமாகச் செய்யாமல் தனது குடும்பத்தினருக்குத் தனது திருமணத்தைப் பற்றி அறிவித்துவிட்ட திருப்தியும் ரியாஸுக்கு இருந்தது.

மறு நாள் மலர....
ரியாஸ் ஒரு சிறிய பையுடன் புறப்பட்டு அறையை விட்டு வெளியே வந்தான்.......

``உம்மா...உங்களோட எனக்கு எந்த மனஸ்தாபமும் இல்ல....என்ன மன்னிச்சிடுங்க.... காமிலா ஒரு வாழ்க்கையிலே பெரிய தீக்காயம் பட்டுட்டா...... இப்போ....நானும் அவவுக்கு மறுவாழ்வு தர்ரதா வாக்கு கொடுத்துட்டு, அதையும் காப்பாத்தாட்டி அந்தப் பெண் மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கப்பட்டு விடுவா......உம்மா...நீங்களாவது என்னைப் புரிந்து கொள்ளுங்க...உம்மா`` ரியாஸ் தாயைக் கட்டிப்பிடித்து மனம் விட்டு அழுதான்.

``வாப்பா..... எனது இஸ்லாமிய உணர்வுகள் நீங்கள் விதைத்ததுதான் ``இக்ராவிலே இஸ்லாம் பற்றிய யதார்த்தமான சிந்தனைகளை எனக்குப் பெற முடிந்தது....எனக்குத் தெரிந்த வகையில.... கலியாணம் செய்து ஒரு சில நாட்கள்கூட வாழாத உரிய முறையில ``தலாக்`` பெற்றுக் கொண்ட ஒரு பெண்ணுக்கு வாழ்வு கொடுப்பது பிழையில்ல.. வாப்பா....இது உங்களுக்கு நல்லாத் தெரியும்....வாப்பா....... அற்பமான சொத்து சுகங்களை நீங்களும் ஆசைப்பட்டு தேடப்பாக்குறீங்களே என்பதை நினைக்க எனக்கு கவலையாக இரிக்கி``

சில கண மௌனம்.

``வாப்பா....ஒரு சதம் சீதனம் எடுக்காம, கலியாணச் செலவையெல்லாம் நீங்களே போட்டு கலியாணம் செய்தீங்க....இந்த உங்கட செயலா நான் இவ்வளவு காலமும் உங்களப் பத்தி பெருமையா இரிந்தேன்....உங்களை உயர்வாக நெனைச்சேன்...இப்பவும் தான் நினைக்கிறேன்....வாப்பா.....நான் நீங்க பெத்த மகன்....உங்கட ரத்தம்தான் என்னுடைய ரத்தமும்....நானும் இலட்சியத்துக்காக வாழ ஆசைப்பட்றது பிழையா வாப்பா.....``

ரியாஸின் வாப்பா ரியாஸைக் கட்டித் தழுவிக் கொண்டார்...

ஓ....இதென்ன கனவா நனவா? ரியாஸ் மட்டுமல்ல....குடும்பமே ஆச்சரியத்தில் ஆழமாக அமிழ்ந்தது.

``மகனே....என் மகனே என் கண்களைத் திறந்துட்டீங்க...நீங்க புரியப்பட்ட மாதிரியே செய்வோம்....இண்டைக்கே நாங்க பொண்வீட்டிற்குப் போறோம்.....``

தந்தை சொல்லிக் கொண்டே போக ரியாஸ் ஆனந்தக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தான்.

(யாவும் கற்பனையே)



# இப்படியுமா?

வானத்திலிருந்து ஓரேமுறையில் பல நூறு இடிகள் தலையில் வந்து விழுந்தாற் போன்ற நிலையில் அப்படியே முன்னறை நிலத்தில் உட்கார்ந்து சுவரில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டிருந்தாள் மைமூனா. மூடிய கண்களில் இருந்து தாரை தாரையாய் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

``சே...ரூபினா என்ன வார்த்தையெல்லாம் சொல்றா...ஆண்டவா.... இவளால் இப்படியெல்லாம் பேசமுடிகிறதே....``

மைமூனாவின் மனம் ஓலமிட்டு இரத்தக் கண்ணீர் வடிக்கிறது.

``உம்மா....உம்மா..... ஏன் நெலத்தில உட்கார்ந்திட்டீங்க... ஏனும்மா...`` கடைசி மகன் ஆஷிக் வந்து அவளைக் கட்டிப் பிடித்துக் கொள்கின்றான்... அவனது பிஞ்சுக் கைகள் அவளது கண்ணீரைத் துடைத்து விடுகின்றன.... போதாதற்தகுத் தனது ஷேர்ட்டாலும் துடைக்க முயல்கிறான்.

அந்தப் பிஞ்சை இழுத்து தன் மடியில் அமர்த்திக் கொண்ட மைமூனா.

``ஒண்டுமில்ல தொர....உம்மாவுக்குத் தலவலி... அதுதான்...`` என்று பொய்யைச் சொல்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடியிலிருந்து ஓடிச்சென்று ஏதோ ஒரு ``பாமை`` கொண்டுவந்து பூசிவிடுகிறான் அவன்.

``உம்மா....வாங்க...வந்து கட்டில்ல படுத்துக்கோங்க...`` அவன் அவளின் கையைப்பிடித்து இழுக்கின்றான்.

``இல்ல வாப்பா....ஓதப்போக நேரமாவுது... நீங்க பள்ளிக்குப் போவ ரெடியாவுங்க...`` மைமூனா சொன்னதும் அவன் சிட்டாய்ப்பறந் தான்.

இப்படித்தான் ரூபீனாவும் சின்ன வயதில் இருந்தாள்...

மைமூனா நினைத்துப் பார்க்கின்றாள்.. மைமூனாவின் மூத்த மகன் இன்ஷாப்......

அவனுக்குப் பன்னிரண்டு வயதில் மகாவலியில் நீராடச் சென்ற போது யாரும் எதிர்பாராத வகையில் நீரில் மூழ்கி இறந்துவிட்டான். அந்தக்காயத்தால் மைமூனாவும் அவளது கணவன் ஐவ்பரும் பட்டதுயரம் கொஞ்ச நஞ்சமல்ல. எந்த ஒரு பெற்றோருக்கும் இந்தத்துயரம் வரக் கூடாது.

இரண்டாவது பிள்ளைதான் ரூபினா... மூத்தமகனின் இழப்பின் பின்னர் ரூபினாவை மிகவும் ஆசையோடும் பாசத்தோடும் வளர்த்தனர்.....

மிகுந்த துடிதுடிப்புடனும்...உற்சாகத்துடனும் படித்து பட்டதாரி ஆசிரியை ஆனாள் ரூபினா.

வயது செல்லச் செல்ல ரூபினா ஏனோ முழுமையாக மாறத் தொடங்கிவிட்டாள். ஆரம்பத்தில் இதை மைமூனாவோ. ஐவ்பரோ பெரிது படுத்தவில்லை.

ஆனால்.நாளாந்தம் அவளது நடவடிக்கைகள் பெற்றவர்களைப் பெரிதும் புண்படுத்தச் செய்தன.... அதிலும் திருமணப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்த போது அவள் நடந்து கொண்ட விதம் மைமூனாவை அணு அணுவாகத் தாக்கத் தொடங்கின.

பேசி வந்த சில நல்ல சம்பந்தங்களை வேண்டா வெறுப்பாய் வெறுத்தாள்....

ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காரணமாய் காட்டித் தவிர்த்தாள் ரூபினா.

``மக... இது நல்ல எடம்.... தேடிவர்ர. சீதேவிகள காலால உதைச்சிடக்கூடாது... யோசிச்சிப் பாருங்க...`` என்று மைமூனா எவ்வளவு



கெஞ்சினாலும் ரூபினாவின் பிடிவாதம்தான் கடைசியில் வெல்லும்.

எப்படியோ பெரிய பிரார்த்தனைகள் கெஞ்சல்கள் என்று தொடர்ந்து கடைசியில் இந்தத்திருமணத்திற்கு ஒப்புக் கொண்டாள் ரூபினா.

மைமூனாவுக்கும் ஐவ்பருக்கும் ரூபினாவின் இந்த ஒப்புதலே பெரிய நிம்மதியாக இருந்தது.

ஆனால்.
நிம்மதி சில நாட்கள் கூட நீடிக்கவில்லையே........

மாப்பிள்ளை வீட்டார் சீதனம் நகை. வீடு வாசல் என்று எதையும் பட்டியல் போட்டுக் கேட்கவும் இல்லை.

ரூபினாதான் தினந்தினம் ஒவ்வொரு குண்டுகளாகப் பெற்றோரின் தலைமீது ஈவிரக்கமின்றி வீசிக் கொண்டிருந்தாள்.

ஐவ்பரின் சிறிய மரக்கறிக் கடை வருமானத்தால் தான் தேனீயாய் கொஞ்சம் பணம் சேர்த்திருந்தார்கள். இதை வைத்துத்தான் திருமணத்தைச் சிறப்பாக நடத்திவிட வேண்டும் என்று நினைத்தார்கள்.

எல்லோரது நினைப்புக்களும் ஒன்றேயாக இருந்தால் உலகில் பிரச்சினைகளுக்கே இடமிருக்காதே.....

பெற்றோரின் நினைப்புக்கு நேர்மாறாக நினைத்தாள் ரூபினா.

திருமணத்திற்கான மண்டபத்தைத் தெரிவு செய்த போது ரூபினாவின் முதலாவது குண்டுவீச்சு இடம் பெற்றது. நியாயமான வாடகையில் இவர்கள் தீர்மானித்த மண்டபத்தை விடாப்பிடியாக நிராகரித்தாள்.

``சே.....சே.....அந்த ஹோல்`ல எடுக்கிறதா இரிந்தா எனக்கு கலியாணமே வேணாம்...ஏண்ட ``வாசிட்``டி பிரண்ட்ஸ் எல்லாம் வருவாங்க... மானமே போயிடும்... போன மாசம் என்னோட படிச்ச காமிலாவின் வெடிங்காட்டைப் பார்த்தீங்க தானே.... கோல்பேஸ் ஹோட்டல்ல இல்லிய நடந்திச்சி..... நல்ல ஒரு ஹோட்டல்ல தான் வெடிங் நடக்கனும்....``

அழுது அடம்பிடித்து சாதித்துக் கொண்டாள் ரூபினா.

அடுத்து திருமண அழைப்பிதழ்......
அதிலும் இதே பிடிவாதம்......
தொடர்ந்து திருமணத்திற்கான உடைகள்....

அப்பப்பா.........அவள் விரும்பிய எல்லா உடைகளையும் எப்படியோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கி சாதித்துக் கொண்டாள்... உடைச் செலவு மாத்திரம் கிட்டத்தட்ட ஒரு இலட்சத்தைத் தாண்டிவிட்டது.....

மாப்பிள்ளை வீட்டார் நகைகளைக் கேட்காத போதும் ரூபினா மாற்றாளாய் நின்று பெற்றோரை எதிர்த்துத் தைரியமாகக் கேட்டாள்.

``உடுப்புகளுக்கு ஏத்தமாதிரி நகை வேணும்... வாப்பா உம்மா அவங்கடகாலததில இருந்து சேர்த்து வச்சிரிக்கிற நகையெல்லாம் இப்பகாலத்துக்கு சரியே வராது... இதுகல போட்டுக்கிட்டுப் போனா எல்லாரும் சிரிப்பாங்க.... மூணு நாலு செட் நகை கட்டாயம் வேணும் என்று அவள் அடம்பிடித்த போது, தாய் தனது நகைகள் அனைத்தையும் சேர்த்து கொடுத்து மாற்றிச் செய்ய வேண்டியதாயிற்று...செய்து முடித்த போது கிட்டத்தட்ட செய்கூலி, சேதாரம் என்று மேலும் ஐம்பதாயிரத்துக்கு மேல் தேவைப்பட்டது.....

இன்னும் திருமணம் நடக்கவே இல்லை. இப்போதே கடன் சில இலட்சங்களைத் தாண்டத் தொடங்கி விட்டது.

மைமூனாவுக்கும் ஐவ்பருக்கும் இரவு நித்திரை என்பதே இல்லை...

``சிக்கனமா.... எளிமையா... செய்ய நெனைச்சோம்... முடியல்லயே...`` என்று புலம்பிக் கொண்டனர்.

திருமணத்திற்கு அழைப்பவர்களின் பெயர்ப்பட்டியல் கூட ரூபினாவின் விருப்பப்படியே எழுதப்பட்டது. மைமூனா, ஐவ்பர் இருவரது குடும்பத்தினர், அண்டை, அயலார் பலரும் விடப்பட்டு, ரூபினாவின் நண்பர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டது.

``என்ன செய்வதப்பா... நீங்க கவலப்படாதீங்க...எல்லாம் அல்லாட நாட்டப்படிதான் நடக்கும்.....`` என்று கணவனும் மனைவியும் மாறி மாறி ஆறுதல் சொல்லிக் கொண்டார்கள்

கடனை முடிக்கவும் மேற்கொண்டுள்ள செலவுகளைச் சமாளிக்கவும் மைமூனாவுக்கு அவளது பெற்றோர் சீதனமாகக் கொடுத்த காணித்துண்டையும் விற்பதாக முடிவெடுத்த போது மைமூனா வாய்விட்டே அழுதுவிட்டாள்.

``அழாதீங்க... அழாதீங்க.. அல்லாட நாட்டம் இருந்தா நாங்க வேற ஒரு காணித்துண்டு பொறகு வாங்குவோம்...`` என்று ஐவ்பர் வாயளவில் ஆறுதல் சொன்னார்.

இன்று இந்த விடயமாகத்தான் ஐவ்பர் போயிருக்கின்றார்.



அவர் போனபின்னர் மைமூனா ரூபினாவிடம் கேட்டாள்.

``மக...ரூபினா...பேங்குல எவ்வளவு காசு வச்சிரிக்கிறீங்க...நீங்க வேலைக்குப் போய் நாலு அஞ்சு வருஷமாவுதில்ல.....``

ரூபினாவின் சம்பளத்தில் வீட்டிற்கு என்று ஒரு சதமும் எடுப்பதில்லை. பெண்பிள்ளையின் உழைப்பை சாப்பிடக்கூடாது என்ற வைராக்கியத்தோடேயே அந்தத் தம்பதியினர் வாழ்ந்தார்கள்.

``ஏனும்மா.....ஏன்ட காச எடுத்தே எனக்கு கலியாணம் செய்யனும் என்டா நெனைக்கிறீங்க... பாருங்க... ஒவ்வொரு வீட்டில உம்மா வாப்பா.... ஊர் ஊராய்ப் போய் காசு சேர்த்து அவங்கட பிள்ளைகள்ட கலியாணங்கள செய்யிறாங்க... நீங்க... எனக்கிட்ட எவ்வளவு காசு இருக்கு எண்டு கேக்குறீங்க.....

இதுக்குத்தான் நான் கலியாணம் வேணாம் என்டு சொல்லிக்கிட்டிருந்தேன்.......எங்க...... அதையும் உட்டீங்களா....அழுது....புலம்பி.... கலியாணத்துக்கு புரியம் வாங்கினீங்க... இப்ப என்னடா என்டா பிச்சைக்கார கலியாணம் செய்யப்பாக்கிறீங்க... ஒங்களுக்கெல்லாம் என்னத்துக்குத்தான் ஆண்டவன் புள்ளைகள கொடுத்தானோ....சே.....``

மைமூனா....திருதிருவென்று விழிக்க..... சாட்டைகளாய் சொல் கொண்டு ஈவிரக்கமின்றித் தாக்கிவிட்டுத் தன்னறைக்குள் சென்று தடாரென்று கதவைத் தாளிட்டுக் கொண்டாள் ரூபினா.

இந்த அடி எந்தத் தாயைத்தான் தாக்காமல் இருக்கும்.

படுக்கையில் முகம் புதைத்து அழுது தீர்த்தாள் மைமூனா.

ஓதப்போயிருந்த சின்ன மகன் ஆஷிக் ஓடிவந்து உம்மாவை எழுப்பினான.

``உம்மா....எழும்புங்க...எனக்கு டீ....தாங்க.....உம்மா...`` உம்மாவைப் பிடித்துத் திருப்பினான் பிஞ்சுமகன் ஆஷிக்....

உயிர் பிரிந்த நிலையில் மைமூனா.... கடைசியாக ரூபினா வீசிய குண்டு நேராக அவளது இதயத்தைத் துளைத்துக் கொண்டு போய்விட்டதோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாப்பிள்ளைக்கு "அலவென்ஸ்"

உடுநுவரை தேர்தல் தொகுதி கண்டி அரசர்காலத்திலிருந்தே முஸ்லிம் பெரும்பான்மையாக வாழும் பிரதேசமாகும். பாரம்பரிய வைத்தியர்கள். முகாந்திரங்கள், ஆரச்சிமார் என்று பூர்வீகமான குடும்பங்களைச் சேர்ந்த மக்களே அதிகம். இந்தப் பூர்வீகச் சிறப்புக்களை இன்றும் நிலை நாட்டுவதிலும், கூறிக்கொள்வதிலும் இந்த மக்கள் பூரிப்பும் அடைகின்றனர்.

இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த பலமுஸ்லிம் கிராமங்களில் ஒன்றில் தான் தாஹா ஹாஜியாரும் வசிக்கிறார். ஹாஜியாரின் குடும்பத்தில் ஏழு பிள்ளைகள்.....மூன்று பெண்கள் நான்கு ஆண்கள் தேயிலை வியாபாரம் தான் அவரது தொழில்.

நடுத்தர அளவிலான வீடு......சாதாரண வசதிகள்... வீட்டைச் சுற்றி அழகான தோட்டம்...தென்னை பலா,ஈரப்பலா, கோப்பி, சாதிக்காய், கராம்பு மிளகு என வருடம் முழுவதும் மாறிமாறி வஞ்சகமில்லாமல் பலனைத் தந்து கொண்டிருந்தன. அதிலுள்ள மரங்கள். ஓய்வுகிடைக்கும் போதெல்லாம் தாஹா ஹாஜியார் அம்மரங்களை வாஞ்சையோடு கவனிக்கத்தவற மாட்டார். எப்போது பார்த்தாலும் சமையலறைக்குப் பக்கத்தில் இருந்த ஒரு அறையில் இவற்றில் ஏதாவது பொருள் இருந்து கொண்டே இருக்கும்.

இவற்றைப் பறிப்பது- பக்குவப்படுத்துவது களஞ்சியப்படுத்துவது எல்லாம் அவரது மனைவி மைமூனா தான். மைமூனாவிற்கு இவைதான் பொழுதுபோக்கு. அத்தோடு கைவந்த கலையும்தான். ஹாஜியார் இந்த வருமானங்களைப் பற்றி மைமூனாவிடம் கணக்கு கேட்கமாட்டார். அவருக்குத் தெரியும்... மைமூனாவிடம் பணம் இருந்தால் அது அவரின் "பிக்ஸட் டிபொசிட்"



பணம்தான் என்று! எத்தனை இக்கட்டுக்களில் மைமூனா ஆயிரங்களாய்....ஏன் இலட்சமாகக்கூட கொடுத்திருக்கின்றாளே....

இன்று இந்த அழகான குடும்பத்திலே ஒரே கூடபுடல்...ஓரிரண்டு உறவினர்களும் வந்திருக் கின்றனர்.... இரவே வட்டிலப்பம் அவித்தாகிவிட்டது...மகள்மார் ஐசிங்கேக்கிலும், சமூஸா,கட்லட் என்பனவற்றிலும் கைவண்ணததைக் காட்டியிருந்தனர்....... தோட்டத்தில் வெட்டியெடுத்த பெரிய பூவாழை இதமாகக் பழுத்து பழுதுபடாத சீப்புகளாக வெட்டப்பட்டிருந்தன. ஹாஜியார் கண்டியிலிருந்து நெய் பூந்தியும்,மஸ்கட்டும் வாங்கி வந்திருந்தார்...பக்கத்ததுவீட்டு ரசியா சாச்சி இரவோடிரவாக அரிசி ஊறவிட்டு பணியாரம் செய்து கொண்டு வந்திருந்தார்.

ஆமாம்...ஹாஜியாரின் மூத்தமகள் முனீராவிறகுத் திருமணம் பேசி இருந்தார்கள். இன்று மாப்பிள்ளை வீட்டார் "பேச்சு முடிக்க" வருகிறார்கள். அதற்கான ஏற்பாடுகள்தான் இவைகள்.

மாப்பிள்ளை பிர்தௌஸ் கடுகண்ணாவையைச் சேர்ந்தவர், சாதாரண குடும்பம்தான். பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தில் வேலை. முன்னுக்கு வர வாய்ப்பிருக்கின்றது. மகள் முனீராவும் ஏ.-எல் சிறப்பாகப் பாஸாகி இருப்பதால் எப்போதாவது தகுந்த தொழில் கிடைத்தால் செய்யட்டும் என்ற அபிப்பிராயம்தான் ஹாஜியாருக்கு.

நேரம் நகர்ந்து கொண்டிருக்க- வீட்டில் சுறுசுறுப்பும் அதிகரிக்கிறது. ஹாஜியாரின் ஏழு பிள்ளைகளில் இரண்டு மகன்கள் வெளிநாட்டில்...ஒருமகள் கொழும்பு பல்கலைக் கழகத்தில் படிக்கிறார்....இன்று அந்தமகனும் வீட்டில். ஒரு நல்ல குடும்பத்தில் சிறிய நிகழ்வுகளும் எத்தனை மகிழ்ச்சியைத் தருகின்றன?

"வேன் ஒன்று வந்து நின்றது.

வந்திறங்கியவர்களை ஹாஜியாரும் மகன்மாரும் ஸலாம் சொல்லி வரவேற்றார்கள்.

ஒரிரு நிமிடங்கள் கழிய முன்பே வந்த களைப்பு நீங்குவதற்கு குளிர்பானம் வழங்கப்பட்டது.

புரோக்கர் தௌபீக் இன்று மிகுந்த களையுடன் காணப்பட்டார்.

இந்தத் திருமணம் முடிந்தால் சுளையாக பல ஆயிரங்கள் இரு பக்கங்களிலுமிருந்து தமது கைக்குவரும் என்ற மகிழ்வுப் பிரவாகம் அவருக்கு இருக்காதா என்ன?

சிற்றுண்டி விருந்துபசாரம் மிகவும் சிறப்பாக நடந்தேறியது. உண்மையிலேயே வந்திருந்தவர்கள் வயிறாறச் சாப்பிட்டார்கள்...பால்கோப்பி மணக்கமணக்க குடித்தபோது அனைவருக்குமே அதீதமான திருப்தி.

புரோக்கர் தௌபீக்தான் பேச்சைத் தொடங்கினார்.

``அப்போ....ஹாஜியார் பேசலாமா?``

``ஓ...அதைத்தானே செய்யணும். சொல்லுங்க``.... ஹாஜியாரின் அனுமதியின் பின்னர் வந்திருந்தவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். மாப்பிள்ளையின் தந்தை கண்ணால் சைகை காட்ட புரோக்கரே ஆரம்பித்தார்....

``ஹாஜியார் ஒங்கட புள்ளைக்கு நீங்க குடுக்கிறத செறப்பா குடுப்பீங்க..... அதுல எங்களுக்கு நம்பிக்கை இருக்கு...ஆனா.....``

ஹாஜியாரின் தம்பி குறுக்கிட்டார்
``புரோக்கர் நானா.....மாப்பிள்ளை வீட்டார் என்னா கேக்குறாங்க... இப்ப இந்த எடத்தில நாங்க சேர்ந்திரிக்கிறதே இது களப்பத்திப் பேசத்தானே மாப்பிள்ளை இம்தியாஸின் மூத்தசகோதரர் ஸத்தார் சொன்னார்.

``தாயும் புள்ளையுமாக இரிந்தாலும் வாயும் வயிறும் வேறில்லையா... இந்தக் குடும்பத்திலயும் ஏழு பிள்ளைகள் இரிக்கிறாங்க... நாளைக்குப் பின்ன சொத்துல ஏதும் பிரச்சினைகள் வந்துடக்கூடாது இல்லையா....அதுதான் நீங்க என்னென்ன குடுக்குறீங்க என்பத நாங்க இப்பவே தெரிஞ்சிக் கொள்ள விரும்புறம்....``

``தயக்கமில்லாம கேளுங்க...எனக்கும் எல்லாத்தையும் மூடிமறைக்காம பேசுறதுதான் புடிக்கும்`` தாஹா ஹாஜியார் முகமலர்ச்சியுடன் கூறிய போது எல்லோருக்கும் மகிழ்ச்சியும் தைரியமும் வந்துவிட்டது.

இப்போது மாப்பிள்ளை இம்தியாஸின் தங்கையின் மாமா பேசினார்.
``மிச்சம் நல்லது ஹாஜியார்...எனக்கும் ஒளிவு மறைவு விருப்பம் இல்ல....ஏன்ட மகனுக்கு இவங்க நியாயமான



சீதனம் தந்தாங்க...அதுதான் நானும் இம்தியாஸ் மவனுக்கு பேச்சுமுடிக்க வந்தேன்.... நாங்க புரோக்கரிடம் எல்லாம் சொல்லி இரிக்கோம்....`` என்று கூறி புரோக்கரைப் பார்த்தார்.

தாஹா ஹாஜியாரின் மனதில் ஏதோ ஒரு சிறுமுள் நெருடத் தொடங்கியது.

என்றாலும் மிக சாதுரியமாக அவற்றை வெளியே காட்டாமல் மறைத்துக் கொண்டார்; அதுஅவரது சுபாவம்..

``ஹாஜியார் ஒங்கட புள்ளைக்கு எவ்வளவு நகை போடுவீங்க......?``

``புள்ளைட உம்மா ஒவ்வொரு புள்ளைக்குமாக ஆளுக்கு இருபத்தைஞ்சு பவுண் நகை செய்து வச்சிரிக்கிறா...... கலியாணத்துல எங்கட குடும்பத்த சேர்ந்தவங்களும் நகை போடுவாங்க....``

வந்தவர்களுக்கு ஏற்பட்ட திருப்தியின்சாயல் முகங்களில் தெரிந்தது....

``அப்போ காணி...``

``எங்களுக்கு மீவலதெனியாவில கொஞ்சம் காணி இரிக்கி....ஏழு பேருல எல்லோருக்குமே ஆளுக்கு அரை ஏக்கரா நான் ஒப்பினையே எழுதி வச்சிருக்கேன்... அது நல்ல வருமானமுள்ள காணி....``

மாப்பிள்ளை வீட்டார் புரோக்கரைப் பார்த்தனர் நன்றியுடன்.

``நான் நல்ல இடமாகத்தான் பாத்திரிக்கேன்`` என்று புரோக்கரின் கண்கள் சொல்லிற்று.

``வேற....``புரோக்கர் தொடர்ந்தார்``
``தஸ்கரயில உள்ள வயல்காணியில ஒரு சிறுதுண்டு....ஒரு கால் ஏக்கர்....இரிக்கும் அது புள்ளைட உம்மம்மா புள்ளைக்கு எழுதினது....``

ஹா........பழம் நழுவிப் பாலில் விழும் வியப்பு வந்தவர்களுக்கு.

மாப்பிள்ளையின் வாப்பா புரோக்கருக்கு ஏதோ கண்சாடை காட்ட.... அவர் சிறிது தயங்க....ஹாஜியாரே தொடர்ந்தார்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

``கேளுங்க....தயங்காதீங்க...நான் யாருக்குத் கொடுக்கிறன்.... ஏன்ட புள்ளைக்குத்தானே.... கேட்க வந்ததைக் கேளுங்க புரோக்கர் நானா....``

``இல்ல.......இப்போதைக்கு மாப்பிள்ளை வீட்டாருக்கு வீட்டு வசதி போதாது.....நீங்க... குடுக்கிற காணியில ஒரு வீட்ட சின்னதாகவாவது கட்டிக் குடுத்தீங்கண்டா ஒங்க புள்ள சந்தோஷமா வாழுமே...``

மறுகணமே மலர்ந்த முகத்துடன் ஹாஜியார் சொன்னர்.

``ஓ....அதுக்கென்ன... ஏன்ட புள்ள நல்ல வாழனும் என்டுதானே நா ஆசைப்படுறன் கட்டித்தாறேன்....``

இவ்வளவு விரைவாக இந்தப் பிரச்சினை எல்லாம் தீர்ந்துவிடும் என்று மாப்பிள்ளை வீட்டார் ஒரு கணமும் நினைக்கவேயில்லை.

அவர்களது நெஞ்சங்கள் புளகாங்கிதத்தில் புரண்டெழுந்தன.

ஹாஜியார் கேட்டார்.
``புரோக்கர் நானா.....இப்போ எல்லாம் சரிதானே.....``

மீண்டும் ஒரு இரஞ்சல் பார்வையுடன் புரோக்கர் தொடர்ந்தார்.....

``ஹாஜியார்..இது ஒங்கட ஊட்டு மொதல் கலியாணம்... செறப்பா செய்யனும்னு நீங்க நெனைப்பீங்க... இவங்கட கையில இப்போதைக்கு வசதியில்ல.....உடுபுடவைக்காசு ஒரு ரெண்டு தந்தீங்க எண்டா நல்ல செறப்பா கலியாணம் செய்யலாம் என்டு சொல்றாங்க.....``

``ஹாஜியாரின் பதிலுக்கு எல்லோரும் காத்திருந்தனர். சில விநாடித்துளிகளின் பின்னர் ஹாஜியார் சொன்னார்.

``சரி...ஏன்ட புள்ளைட கலியாணம் தானே...தர்ரேன்...``

இப்படியும் ஒரு நல்ல மனிதரின் வீட்டில் சம்பந்தம் கிடைத்ததே என்ற மகிழ்ச்சிப் பெருவெள்ளம். மனுஷனைப் பார்த்தால் காலாகாலத்துக்கும் இவரிடம் ஏதாவது எடுத்துக் கொண்டே இருக்கலாம் என்ற தீர்க்க தரிசனம்....



ஹாஜியார் இப்போது வந்தவர்களைப் பார்த்தார். ``நான் ஒரு கேள்வி கேட்கணும்`` என்றார்.

``கேளுங்க``என்று ஒரே நேரத்தில் பல குரல்கள் ஒலித்தன.. கலியாணம் என்ற மரத்திலிருந்து மாப்பிள்ளை என்ற ஒரே கல்லால் பலமாம்பழங்களை ஒரே அடியில் வீழ்த்திவிட்ட ஆத்ம திருப்தி அந்தக்குரல்களில் ஒருமித்து இழையோடின.

``மாப்பிள்ளைக்கு மாசாமாசம் குடும்பம் நடத்துவதற்கு நான் எவ்வளவு ``அலவன்ஸ்`` தரணும்?

ஹாஜியார் பெரிய பாறாங்கல்லை ஒரே தூக்காய்த் தூக்கி எல்லோரது தலைகளிலும் ஒரே முறையில் போட்டார்.

கதிகலங்கி - பொறிகலங்கிப்போய் விட்டார்கள் வந்தவர்கள்.
மின்னல் வேகத்தில் எழும்பிய ஹாஜியார் புரோக்கரின் ஷேர்ட் கொலரைப் பிடித்து இழுத்துக் கொண்டு ஒரு கை சுட்டுவிரலை புரோக்கரின் முகத்துக்கு நேரே நீட்டிக் கேட்டார்.

``டேய்..... மரியாதையா....ஏன்ட புள்ளைய வச்சிக்காப்பாத்துற.....ஒரு மனுஷனைக் கொண்டா என்டதுக்கு யாரை நீ கூட்டிக்கிட்டு வந்திரிக்கிற....

அவனுகள்ட பரம்பரை பஞ்சத்தை பொண்ணெடுத்துத் தீர்க்கப் பார்க்கிற தன்மானமில்லாதவன்களையா கூட்டிக்கிட்டு வரச்சொன்னேன்... இருக்க வீடு இல்ல.... கலியாணத்தை செய்ய காசு இல்ல.... இவன்க என்னடா ஆம்புள......
அண்டண்டைக்கு மூட்டதூக்கி கூலி வேல செய்து பொண்டாட்டி புள்ளைகள காப்பாத்துறான்களே அவன்க தாண்டா ஆம்புள......``

அனைவரும் ஹாஜியாரின் பிடியிலிருந்து புரோக்கரை விடுவித்தனர்.

சற்று முன் சாப்பிட்டது புளகாங்கிதம் அடைந்தது. எல்லாம் காற்றாய்ப் பறந்து போய் விட்டன.

``இங்க பாருங்கடா......ஊட்டுக்கு வந்தவங்களோட இப்படி நடக்க நான் விருப்பம் இல்ல.... ஆனா நீங்க இப்படி நடக்க வச்சிட்டீங்க...ஏன்ட புள்ளைக்கு என்டு நாங்க ஒதுக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வச்சிரிக்கிறத ஏன்ட புள்ளைக்கித் தான் குடுப்பேன்... ஆனா.....யாவாரம் போல பேரம் பேசி வர்ரவனுகளுக்கு புள்ளையையும் தரமாட்டேன்....ஒன்டையும் தரமாட்டேன்....``

``ஹாஜியார்...நீங்க இப்படி கோபப்படக்கூடாது.``

வந்திருந்த இம்தியாஸின் தங்கையின் மாமா பேசினார்.

``இந்தா பாருங்க...ஒங்கட மகனுக்கு இவங்கட வீட்டில சீதனம் எடுத்தீங்க....இதுக்குப் பரிகாரமாக இவருக்கு நீங்க சீதனம் எடுத்துக் கொடுக்க வீடுவீடா போறீங்க...`` என்ன பிரயாச்சித்தம் செய்யிற நெனப்பா`` தாஹா ஹாஜியாரின் சூடானபதில் அவரை மேலே பேசவிடவில்லை.

``புரோக்கரே.இனிமே இந்தப்பக்கம் வர்ரதா இருந்தா ஒரு மனுஷனைப் பார்த்துக் கொண்டு வாரும்....புரிஞ்சுதா?``

எல்லோரும் போய்விட்டார்கள்.

ஹாஜியார் நடந்து கொண்ட முறைபற்றி ஒருவருக்குமே கவலையில்லை. வீட்டில் அனைவரும் வாப்பாவை வாழ்த்தினர். பிள்ளைகள் மாறி மாறிக் கைகளால் ``ஐந்துக்கு ஐந்து`` போட்டுக் கொண்டார்கள்.

பல்கலைக்கழக மாணவனான மகன் தாயைக் கட்டிப்பிடித்து, கன்னத்தில் தட்டி ``உம்மா...உங்கட ஹஸ்பன்ட் ரியல்ஹீரோ....தான் உம்மா என்று பாராட்டினான்.

``சும்மா உடுடா`` என்று அவள் சிணுங்கினாள்.

மகள் முனீராவை ஹாஜியார் அணைத்து தலையைத் தடவிவிட்டுக் கேட்டார்.

``பூவே......என்னோட கோபமா?`` ``இல்ல வாப்பா இல்லவே இல்ல`` அவள் உண்மையைத்தான் சொல்கிறாள் என்பதை அவளின் கண்கள் பிரதிபலித்தன.

``தன்மானமுள்ள நல்ல ஒருத்தர் ஏன்ட செல்லப்பூவுக்கு கிடைப்பார் உம்மா``

``வாப்பா....உங்களப்போல ஒருத்தர எனக்குத் தேடுங்க வாப்பா.....அப்பதான் உம்மாவப்போல நானும் சந்தோஷமா இரிப்பேன்....``

``வாப்பாவைப் போல என்டா கெழவனாகவா......`` கடைசி மகள் ஆஷா கூக்குரல் இட்டாள்....ஓ... நல்ல குடும்பம் அமைவது இறைவன் கொடுத்த வரமேதான்!

(யாவும் கற்பனையே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISBN: 955- 8913 - 21 - 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org